# தன்னாட்சியும் சமூகநீதியும் தழைக்கும்
# தமிழ்நாடு படைப்போம்

**தமிழ்நாட்டின் வளர்ச்சியே, தமிழர்களின் மறுமலர்ச்சி!**

## தேர்தல் அறிக்கை

## 2024 மக்களவைத் தேர்தல்

- முழுமையான சமூகநீதி
- வலிமையான இந்தியா
- தன்னாட்சி பெற்ற தமிழகம்

வெளியீடு:

**பாட்டாளி மக்கள் கட்சி**
10, திலக் தெரு, தியாகராய நகர்
சென்னை – 600017, தமிழ்நாடு.
தொலைபேசி : 9963 41999; 90031 18333
மின்னஞ்சல்: media@pmkofficial.com



# வாக்களிப்பீர்

# சின்னத்திற்கு!

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மாநிலங்களுக்கு அதிகாரம் | 9 |
| 2. | பா.ம.க. கூட்டணி ஏன் வெல்லவேண்டும்? | 13 |
| 3. | பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை | 17 |
| 4. | சமூக நீதி | 21 |
| 5. | மாநிலத் தன்னாட்சி | 24 |
| 6. | வேளாண்மை | 26 |
| 7. | சுற்றுச்சூழல் | 29 |
| 8. | வேளாண் - வேலைவாய்ப்பு | 32 |
| 9. | நீர் மேலாண்மை | 34 |
| 10. | இளைஞர் நலன் - வேலைவாய்ப்பு | 36 |
| 11. | மகளிர் நலன் - சமூகப் பாதுகாப்பு | 38 |
| 12. | அரசு ஊழியர் நலன் | 42 |
| 13. | கல்வி | 44 |
| 14. | உயர்கல்வி | 46 |
| 15. | மருத்துவம் | 48 |
| 16. | மது, போதைப் பொருட்கள் ஒழிப்பு | 51 |
| 17. | நல் ஆளுகை | 53 |
| 18. | வருமான வரி | 54 |
| 19. | மறைமுக வரிச் சீர்திருத்தங்கள் | 56 |
| 20. | தொழில்துறை வளர்ச்சி | 58 |
| 21. | கட்டமைப்பு மேம்பாடு | 60 |
| 22. | மீனவர் நலன் | 63 |
| 23. | தமிழ் மொழி | 65 |
| 24. | தமிழுக்கு, தமிழர்களுக்கு அங்கீகாரம் | 67 |
| 25. | பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றம் | 68 |
| 26. | உள்ளாட்சி | 70 |
| 27. | ஈழத் தமிழருக்கு நீதி | 72 |
| 28. | வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன் | 73 |
| 29. | தேர்தல் சீர்திருத்தங்கள் | 74 |
| 30. | விளையாட்டு | 76 |
| 31. | மனித உரிமைகள் | 77 |
| 32. | ஒருமைப்பாடு | 79 |
| 33. | சிறுபான்மையினர் நலன் | 81 |
| 34. | பிற பிற்படுத்தப்பட்டோர் நலன் | 82 |
| 35. | பட்டியலினம் மற்றும் பழங்குடியினர் நலன் | 84 |
| 36. | புதுவை யூனியன் பிரதேசம் | 85 |
| 37. | ஐ.நா. உடன்படிக்கை | 86 |
| 38. | வாக்காளர்களுக்கு வேண்டுகோள் | 88 |
| 39. | பா.ம.க. ஆவணங்கள் | 89 |
| 40. | பா.ம.க. சாதனைகள் | 90 |

# 1 தளைகள் அற்ற தன்னாட்சியும் சமத்துவம் வளர்க்கும் சமூகநீதியும் தடையற்ற வளர்ச்சிக்கு வழிவகுக்கும்!

அன்புள்ள தமிழ்நாட்டு மக்களே,
வணக்கம்!

மயில்களின் கால்களை உடைத்து அவற்றை நடனமாடச் செய்ய முடியாது; குயில்களைக் கூண்டில் அடைத்துக் கூவச் செய்ய முடியாது; கால்களைக் கட்டிக்கொண்டு ஓட்டப்பந்தயத்தில் வெற்றிபெற முடியாது. இவற்றுக்கு இணையானது தான் தன்னாட்சி இல்லாத மாநிலங்களின் நிலையும். ஒரு மாநிலத்தில் என்னதான் வளங்கள் நிறைந்திருந்தாலும், நிர்வாகத் திறமை செறிந்திருந்தாலும், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அம்மாநிலத்திற்கு என்ன தேவை? என்பதை அறிந்து முடிவெடுத்துச் செயல்படுத்துவதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு இல்லாத நிலையில், அதனால் வளர முடியாது.

அதேபோல், மாநிலத்தின் வளர்ச்சிக்கான மற்றொரு முக்கிய அம்சம் சமூக நீதி. ஒரு மாநிலத்தின் மக்களில் பெரும்பான்மையினருக்குக் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை கிடைக்காமல் சமூகப் படிக்கட்டுகளின் அடித்தளத்தில் கிடக்கும்போது, அவர்களால் அம்மாநிலத்தின் வளர்ச்சிக்குப் பங்களிக்க முடியாது. அதனால் தான் சமூகநீதியைச் சாதி சார்ந்த ஒன்றாகப் பார்க்காமல், வளர்ச்சி சார்ந்த ஒன்றாகப் பார்க்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தமிழ்நாட்டிற்கான தன்னாட்சி இன்றோ, நேற்றோ எழுப்பப்படும் குரல் அல்ல. இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பிருந்தே தமிழ்நாட்டிற்கான தன்னாட்சிக் குரல் எழுப்பப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தன்னாட்சிக்கான குரலின் விதை 87 ஆண்டுகளுக்கு முன் 1937ஆம் ஆண்டில் விதைக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே சென்னை மாகாணத்தில் இராஜாஜி தலைமையிலான அரசு இந்தியைத் திணித்தது தான் தன்னாட்சிக்கான தேவையை வலியுறுத்தியது. ஆங்கிலேயர் ஆட்சியிலேயே வட இந்தியத் தலைவர்கள், தங்கள் கட்சி சார்ந்த அரசின் மூலம் தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள் என்றால், விடுதலை அடைந்து ஒட்டுமொத்த அதிகாரமும் மத்திய அரசிடம் குவிந்தால், மாநில அரசுகளின் நிலை என்னவாகும்? என்ற வினா தந்தை பெரியார், ஊ.பு.அ.சௌந்தர பாண்டியனார், முத்தையா, சாமியப்பன் ஆகிய தலைவர்களிடம் எழுந்தது. அதன் காரணமாக, அவர்கள் இங்கிலாந்து அரசால் அனுப்பப்பட்ட அந்நாட்டின் அமைச்சர் கிரிப்ஸ் தலைமையிலான குழுவைச் சந்தித்து, திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்தினார்கள். அந்தக் கோரிக்கை நிறைவேறவில்லை.



## மாநிலங்களுக்கு அதிகாரம்

இந்திய விடுதலைக்குப் பிறகும் அறிஞர் அண்ணா திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்தினார். சீனாவுடனான போருக்குப் பிறகு ஏற்பட்ட சூழல் காரணமாக, அக்கோரிக்கையை அவர் கைவிட்டாலும்கூடத் தமிழ்நாட்டுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தினார். அறிஞர் அண்ணா தலைமையில் 1957ஆம் ஆண்டில் முதன்முறையாக மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொண்ட தி.மு.க., அதில் அளித்திருந்த வாக்குறுதிகள் தான் மாநிலத் தன்னாட்சிக்கும், அதிகாரப் பகிர்வுக்குமான அடையாளங்கள் ஆகும். மத்திய அரசின் அதிகாரங்களுக்கு வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும், மாநிலங்களின் வரி அதிகாரம் விரிவுபடுத்தப்பட வேண்டும், தாய்மொழி வழிக்கல்வி ஆகியவற்றில் தொடங்கி மாநிலச் சுயாட்சி என்பது வரையிலான திமுகவின் கோரிக்கைகள் மிகவும் வலிமையானவை; நியாயமானவை.

ஆனால், அதன்பின் 67 ஆண்டுகள் ஆகியும் அந்தக் கோரிக்கைகளில் ஒன்றுகூட நிறைவேறவில்லை. மாறாக, இந்திரா காந்தி காலத்தில் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலைக் காலத்தில் மாநிலப் பட்டியலில் உள்ள கல்வி, வனம் உள்ளிட்ட 5 துறைகள் பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டன. நீட் உள்ளிட்ட ஆட்கொல்லித் தேர்வுகள் மாணவர்கள் மீது திணிக்கப்படுவதற்கு இதுதான் காரணம் ஆகும். அரசு நிர்வாகத்தில் உள்ள 213 துறைகளில் 152 துறைகளில் மத்திய அரசு எடுக்கும் முடிவுதான் இறுதியானது என்பதால், மாநில அரசுகளுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அவை அலங்கரிக்கப்பட்ட மாநகராட்சிகளாகவே உள்ளன. இவ்வளவு தளைகளுக்கு இடையே இந்திய மாநிலங்கள் அதிவேக வளர்ச்சியடைவது சாத்தியம் அல்ல.

மாநிலங்களுக்கு எந்த அளவுக்குத் தன்னாட்சி அளிக்க வேண்டும் என்பதற்குச் சிறந்த முன்னுதாரணம் அமெரிக்கா தான். அமெரிக்கா 50 மாநிலங்களின் ஒன்றியம் ஆகும். அமெரிக்காவில் இராணுவம், வெளியுறவுத்துறை, செய்தி ஒலிபரப்புத்துறை உள்ளிட்ட சில துறைகள் மட்டுமே மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. மீதமுள்ள அனைத்து விஷயங்களிலும் மாநிலங்கள் அவற்றின் விருப்பப்படி சுதந்திரமாகச் செயல்பட அந்நாட்டு அரசியலமைப்புச் சட்டம் அனுமதி வழங்கியுள்ளது. அதனால் அந்த மாநிலங்கள் அவற்றின் தேவைக்கேற்ற முடிவுகளை எடுத்துக் கொள்கின்றன. இந்தியாவிலும் அதே அளவு சுதந்திரம் கிடைக்கும்போது தான் வளர்ச்சி அதிகரிக்கும் என்பது பா.ம.க.வின் பார்வை.

மாநிலங்களுக்குத் தன்னாட்சி வழங்கவேண்டும் என்ற குரல் தொடர்ந்து எழுப்பப்பட்டு வரும் நிலையில், அது குறித்து ஆராய 1983ஆம் ஆண்டில் அப்போதைய உச்சநீதிமன்ற நீதிபதி சர்க்காரியா தலைமையிலும், 2007ஆம் ஆண்டில் உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி எம்.எம்.பூஞ்சி தலைமையிலும் ஆணையங்கள் அமைக்கப்பட்டன. அந்த இரு ஆணையங்களும், மாநிலங்களுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்கவேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரைத்திருந்தன. ஆனால், அப்போது இந்தியாவை ஆண்ட மத்திய அரசுகள், அந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த மறுத்துவிட்டன.

## மாநிலங்களுக்கு அதிகாரம்

மாநிலங்களுக்குப் போதிய அதிகாரம் இல்லாதது, மாநிலங்களின் அன்றாடச் செயல்பாடுகளைக் கூடப் பாதிக்கத் தொடங்கிவிட்டது. மாநில அரசுகள் கடன் வாங்க மத்திய அரசு வரம்பு நிர்ணயித்திருப்பதால், இந்தியாவின் பல மாநிலங்கள் தங்களின் வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான கடனை வாங்க முடியாமல் தடுமாறுகின்றன. தமிழ்நாட்டிற்கும் அந்த நிலை விரைவில் வரக்கூடும். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு, தன்னாட்சியின்மை பல வழிகளிலும் தடையாக இருப்பதை உணர முடியும். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

அதேபோல், இந்தியாவில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான கருவி சமூகநீதி ஆகும். கல்வி, வேலைவாய்ப்பு மட்டுமின்றி, தனியார்துறை வேலைவாய்ப்பு, நீதித்துறை நியமனங்கள், அரசுத்துறைகளின் ஒப்பந்தங்கள் உள்ளிட்ட அனைத்திலும் இடஒதுக்கீட்டை முழுமையான அளவில் நடைமுறைப்படுத்துவதன் மூலமாகவே, காலம் காலமாக அடிமைப்படுத்தப்பட்ட சமூகங்களைக் கைதூக்கிவிட முடியும். இந்தியாவில் தேசிய அளவிலும், மாநில அளவிலும் பல்வேறு விழுக்காடுகளில் இடஒதுக்கீடுகள் நடைமுறையில் இருக்கும்போதிலும், அவை போதுமானதாக இல்லை. தேசிய அளவில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27% இடஒதுக்கீட்டில், 50 விழுக்காட்டுக்கும் கூடுதலான இடங்களை ஒரு விழுக்காட்டுக்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட சமூகங்களே பறித்துக்கொள்வதாகவும், கிட்டத்தட்ட 1000 சமூகங்களுக்கு இந்த இடஒதுக்கீட்டின் பயன்களே கிடைக்கவில்லை என்றும் மத்திய அரசால் அமைக்கப்பட்ட நீதிபதி ரோகிணி ஆணையம் கூறியுள்ளது.

தேசிய அளவில் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்; அதில் தெரியவரும் காரணிகளின் அடிப்படையில் ஒவ்வொரு சமூகத்திற்கும் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்; அனைத்து சமூகங்களும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் ஆகியவற்றில் பிரதிநிதித்துவம் பெற்று சமத்துவமான நிலையை அடையும் வரை இடஒதுக்கீடு தொடரவேண்டும்; இடஒதுக்கீட்டிற்கு எந்தவிதமான உச்சவரம்பும் நிர்ணயிக்கப்படக் கூடாது என்பது பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை ஆகும். இதன் மூலமாகத்தான் சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

தன்னாட்சியும், சமூகநீதியும் தழைக்கும் தமிழ்நாடு படைப்போம் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் முழக்கம் ஆகும். இந்த முழக்கத்தை முன்வைத்துத்தான் 2024 மக்களவைத் தேர்தலை பாரதிய ஜனதா, தமிழ் மாநில காங்கிரஸ், அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு, புதிய நீதிக் கட்சி, இந்திய ஜனநாயகக் கட்சி, இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, பாட்டாளி மக்கள் கட்சி எதிர்கொள்கிறது. சமூகநீதி வளர்க்கும் இக்கூட்டணியின் வெற்றி ஏற்கெனவே உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கும் இன்றைய நிலையில் தேவைப்படும் இரு அம்சங்கள், “மாநிலத் தன்னாட்சியும், சமூகநீதியும் தான்.” இவை இரண்டும் கிடைத்தால்தான் தமிழ்நாட்டைத் தடையற்ற வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல முடியும்.

அத்தகைய அதிகாரத்தை வென்றெடுப்பது தான் இந்தத் தேர்தலின் முக்கிய நோக்கமாகவும், முழக்கமாகவும் அமைந்திருக்கிறது. இந்த நோக்கத்தையும், முழக்கத்தையும் சாத்தியமாக்குவது உங்கள் கைகளில் தான் உள்ளது. ஏனெனில், ஜனநாயகத்தில் மக்களாகிய நீங்கள் தான் இறுதி எஜமானர்கள் என்பது பா.ம.க.வின் அசைக்க முடியாத நம்பிக்கை.

மத்தியில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம்தான் தமிழகத்திற்குத் தன்னாட்சி பெறுவதும், சமூகநீதியை நிலைநிறுத்துவதும் சாத்தியமாகும். மத்தியில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் வாயிலாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன நன்மைகள் நடக்கும்; தமிழக மக்களின் நலனுக்காக என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பது குறித்து இந்தத் தேர்தல் அறிக்கையில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேர்தல் அறிக்கை தான் மத்திய அரசில் பாட்டாளி மக்கள் கட்சியின் வேலைத் திட்டமாக இருக்கும். ஆகவே வாருங்கள்..... தன்னாட்சியும், சமூகநீதியும் தழைக்கும் தமிழ்நாடு படைப்போம்!

# 2 தமிழ்நாட்டின் வளர்ச்சியே தமிழர்களின் மறுமலர்ச்சி!

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. ஜனநாயகத்தின் அடிப்படை மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதுதான். இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்பது எந்த அளவுக்கு உண்மையோ, அதே அளவுக்குப் பன்முகத் தன்மை கொண்ட நாடு; மொழியாலும் பண்பாட்டாலும் வேறுபட்ட மக்கள் வாழும் மாநிலங்களின் தொகுப்பு என்பதும் உண்மை.

நாடாளுமன்ற மக்களவையில் தேசியக் கட்சிகளும், மாநிலக் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. மத்திய அரசின் திட்டங்கள் அனைத்து மாநிலங்களையும் சம அளவில் சென்றடைய வேண்டும் என்பதுதான் இயற்கை நீதி ஆகும். ஆனால், நடைமுறையில் அது சாத்தியமாவதில்லை. மத்திய அரசில் எந்தெந்தக் கட்சிகளுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் இருக்கிறதோ, அந்தக் கட்சிகள் சார்ந்த மாநிலங்களுக்குத்தான் மத்திய அரசின் திட்டங்கள் அதிக அளவில் கிடைக்கின்றன என்பது உண்மை.

மத்திய அரசில் பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகித்த 1998 முதல் 2009 வரையிலான காலம் தமிழ்நாட்டின் பொற்காலம் என்றால் அது மிகையல்ல. பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மருத்துவர் அன்புமணி இராமதாஸ், மத்திய சுகாதாரத்துறை அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் தான் தமிழ்நாட்டிற்கு மருத்துவம் சார்ந்த ஏராளமான திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இந்தியாவே போற்றும் 108 அவசர ஊர்தித் திட்டம் அவரால் அறிமுகம் செய்யப்பட்டதுதான். 108 அவசர ஊர்தித் திட்டத்தின் காரணமாகத் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்தியாவிலும் மகப்பேறு காலத்தில் தாய்-சேய் உயிரிழப்பு பெருமளவில் குறைந்திருக்கிறது. பாதுகாப்பற்ற வகையில் வீடுகளில் நடைபெற்று வந்த மகப்பேறுகள் முழுக்க முழுக்க மருத்துவமனையில் நடைபெறுவதை உறுதி செய்தது 108 அவசர ஊர்தித் திட்டம் தான்.

இந்தியா முழுவதும் 144 கோடி மக்கள் வாழும் 35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசப் பகுதிகளில் 108 அவசர ஊர்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியா முழுவதும் மொத்தம் 9,955 அவசர ஊர்திகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 10 கோடி மக்கள் அவசர ஊர்திகள் மூலம் பயனடைந்திருக்கின்றனர். 6.14 லட்சம் மகப்பேறுகளுக்கு 108 அவசர ஊர்திகள் உதவி செய்துள்ளன. இதுவரை 51 லட்சம் பேரின் உயிர்கள் 108 அவசர ஊர்தி சேவையால் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

உலகின் மிகப்பெரிய சுகாதாரத் திட்டம் என்று போற்றப்படும் தேசிய ஊரக சுகாதார இயக்கம் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்களால் தான் அறிமுகம் செய்யப்பட்டது. மதுரையில் அமைக்கப்பட இருக்கும் எய்ம்ஸ் மருத்துவமனை உட்பட, நாட்டின் பல மாநிலங்களில்

# பா.ம.க. கூட்டணி ஏன் வெல்லவேண்டும்?

எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படுவதற்கு அடித்தளம் அமைத்தவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் தான். தமிழ்நாட்டில் சேலத்தில் எய்ம்ஸுக்கு இணையான மருத்துவமனை, மதுரையில் ரூ.150 கோடியில் எய்ம்ஸுக்கு இணையான புதிய மருத்துவமனை, சென்னையில் தேசிய முதியோர் நலவாழ்வு மையம், தாம்பரத்தில் தேசியச் சித்த மருத்துவ நிறுவனம், சென்னை எழும்பூரில் ரூ.100 கோடியில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல அதிஉயர் சிறப்பு மையம், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் குருத்தணு ஆய்வு மையம், செங்கல்பட்டில் ரூ.800 கோடியில் ஒருங்கிணைந்த தடுப்பூசி உற்பத்திப் பூங்கா, காஞ்சிபுரத்தில் ரூ.45 கோடியில் மண்டலப் புற்றுநோய் மையம், மதுரை இராஜாஜி மருத்துவமனையில் ரூ.50 கோடியில் மண்டலப் புற்றுநோய் மையம், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்குத் தனிச்சட்டம் கொண்டு வந்து, தன்னாட்சி வழங்கியதுடன், ரூ.1,500 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தது என மருத்துவர் அன்புமணி இராமதாஸ் செய்த சாதனைகள் ஏராளம்.

தேசிய அளவில் குட்கா போன்ற போதைப் பாக்குகளை ஒழிப்பதற்கான சட்டம் கொண்டு வந்தது, போலியோ நோயை ஒழித்தது உள்ளிட்ட ஏராளமான சாதனைகளையும் அவர் படைத்தார். இவை அனைத்திற்கும் காரணம், மத்திய அரசில் பாட்டாளி மக்கள் கட்சி வலிமையுடன் இருந்ததுதான்.

2002ஆம் ஆண்டிற்கு முன் இந்தியாவின் தொடர் வண்டிச் சேவை வரைபடத்தில் தமிழ்நாட்டைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. தமிழ்நாட்டில் உள்ள தொடர்வண்டி நிலையங்களில் பெரும்பாலானவை ஒற்றைக் கட்டிடங்களுடன் கூடிய வெட்டவெளியாகவே திகழ்ந்தன. பயணிகள் அமர்வதற்கான இருக்கைகள் கூட இல்லை. குடிப்பதற்குக் குடிநீர் கூட வழங்க முடியாத நிலையில் தான் தமிழ்நாட்டின் தொடர்வண்டி நிலையங்கள் இருந்தன. அகல ரயில்பாதைகள் அரிதாகவே இருந்தன. இந்த அவலநிலையை முழுமையாக மாற்றிய பெருமை பாட்டாளி மக்கள் கட்சியையே சேரும்.

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் தொடர் வண்டித்துறை இணை அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்கள் தமிழ்நாட்டிற்கு ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். பா.ம.க. மத்திய அரசில் அங்கம் வகித்த காலக்கட்டத்தில் தான் தமிழ்நாட்டில் ஏராளமான புதிய தொடர்வண்டிப் பாதைகள் அமைக்கப்பட்டன; ஏராளமான புதிய தொடர் வண்டிகள் அறிமுகம் செய்யப்பட்டன. தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் எந்தப் பகுதிக்கும் தொடர்வண்டி மூலம் பயணிக்கலாம் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டதற்குக் காரணம் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் தான்.

மத்திய அரசில் இருந்து பாமக விலகிய பின்னர், கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க அளவில் தொடர் வண்டித் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்குக் கடந்த காலங்களில் நிதி ஒதுக்கப்படாத நிலையில்,

இப்போதுதான் ஓரளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மத்திய அரசில் பாட்டாளி மக்கள் கட்சி மீண்டும் வலிமை பெற்றால், தமிழ்நாட்டிற்குத் தேவையான திட்டங்களுக்குப் போராட வேண்டியிருக்காது; அவை எளிதாகக் கிடைக்கும்.

மத்திய அரசின் உதவியுடன் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களும், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளும் ஏராளமாக உள்ளன. அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்குப் பட்டியலிடுகிறோம்.

* நாடு முழுவதும் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படுவதை உறுதி செய்தல்.
* அனைத்துச் சாதியினருக்கும் அவர்களின் மக்கள்தொகைக்கு இணையாக இடஒதுக்கீடு வழங்குதல்.
* கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உச்சவரம்பை நீக்கி, இடஒதுக்கீட்டின் அளவை அதிகரித்தல்.
* மாநில அரசுகளுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்குதல்.
* மத்திய அரசின் வரி வருவாய் மற்றும் மானியத்தில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் பங்கை அதிகரித்தல்.
* காவிரி – கோதாவரி ஆறுகள் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.
* காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்துதல்.
* காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.
* காவிரி உள்ளிட்ட தமிழ்நாட்டின் அனைத்து ஆறுகளையும் தூய்மைப்படுத்துதல்.
* தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான நீர்ப்பாசனப் பெருந்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற்றுத் தருதல்.
* தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து விலக்குப் பெறுதல்.
* தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் அமைத்தல்.
* தமிழ் உள்ளிட்ட 8ஆவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளுக்கும் அலுவல் மொழித் தகுதியைப் பெற்றுத் தருதல்.
* சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாகத் தமிழை அறிவித்தல்.
* தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல்.
* தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள தொடர்வண்டித் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
* தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள சுங்கச் சாவடிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

* தமிழ்நாட்டிற்குப் பெரும் கேடுகளை ஏற்படுத்தி வரும் என்.எல்.சி. நிறுவனத்தை வெளியேற்றுதல்.

* தமிழ்நாட்டில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஹைட்ரோ கார்பன் திட்டங்களை இரத்து செய்தல்.

– உள்ளிட்ட ஏராளமான பணிகளைத் தமிழகத்தின் நலனுக்காகச் செய்யவேண்டியுள்ளது. மத்திய அரசின் முடிவுகளில் தலையிட்டு மாற்றம் செய்யும் அளவுக்கு அரசியல் அதிகாரம் கிடைத்தால் மட்டுமே இவையெல்லாம் சாத்தியமாகும்.

தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் தொகுதிகள் மட்டுமின்றி, அதன் கூட்டணிக் கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளிலும் அமோக வெற்றியைப் பெறுவதன் மூலமாக மட்டுமே இவை அனைத்தும் சாத்தியமாகும். அதன் மூலம், தமிழகத்திற்குத் தன்னாட்சி மட்டுமின்றி, தடையற்ற வளர்ச்சியும் மிகவும் எளிதாக கிடைக்கும். இந்த நோக்கத்தை எட்டுவதற்காகவே பாரதிய ஜனதா, தமிழ் மாநில காங்கிரஸ், அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு, புதிய நீதிக் கட்சி, இந்திய ஜனநாயகக் கட்சி, இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளுடன் பாட்டாளி மக்கள் கட்சி கூட்டணி அமைத்துப் போட்டியிடுகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமானால், நாடாளுமன்றத்தில் பாட்டாளி மக்கள் கட்சியும், அது அங்கம் வகிக்கும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள பிற கட்சிகளும் அதிக எண்ணிக்கையில் வெற்றிபெற வேண்டும். இந்த வெற்றியைத் தேடித் தருவது தமிழ்நாட்டு மக்களாகிய உங்கள் கைகளில் தான் உள்ளது. மக்களவைத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி வெற்றிபெற்றால் தமிழ்நாட்டிற்கு என்னென்ன நன்மைகள் நடக்கும்? என்னென்ன திட்டங்கள் கிடைக்கும்? என்பது குறித்து இந்தத் தேர்தல் அறிக்கையில் விரிவாக விளக்கியிருக்கிறோம்.

இந்திய ஜனநாயகத்தில் வாக்காளர்கள் தான் எஜமானர்கள், இந்தத் தேர்தல் அறிக்கையில் பாட்டாளி மக்கள் கட்சி முன்வைத்துள்ள வாக்குறுதிகள், செயல் திட்டங்கள் ஆகியவற்றை இந்திய ஜனநாயகத்தின் எஜமானர்களாகிய நீங்கள் ஆய்வு செய்து, தகுதியின் அடிப்படையில் பாட்டாளி மக்கள் கட்சிக்கும், அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் ஆதரவு அளிக்க வேண்டுகிறோம். உங்களின் ஆதரவு எப்போதும் எங்களுக்கு உண்டு என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

வாருங்கள்... தமிழ்நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்யக் கைகோப்போம்!

# 3 சமூக ஜனநாயகமே பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை

“எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்... இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும். இந்த இலக்கை எட்டச் சமூக ஜனநாயகக் கொள்கைதான் சிறந்த வழி என்று பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. இந்தியாவைவிட மிக மோசமான பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலவிய ஐரோப்பிய நாடுகள் இன்று பொருளாதார வலிமையுடனும், அமைதியுடனும் திகழ்வதற்குக் காரணம் சமூக ஜனநாயகக் கொள்கைதான். உலகின் 51 நாடுகளில் சமூக ஜனநாயகக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் கட்சிகள் தனித்தோ, அல்லது பிற கட்சிகளுடன் கூட்டணி அமைத்தோ ஆட்சி செய்கின்றன. அந்த நாடுகளில் வறுமை ஒழிந்து, செழுமை நிறைந்து அமைதி நிலவுகிறது. தமிழ்நாட்டையும் அத்தகையதொரு, உன்னத நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான், சமூக ஜனநாயகக் கொள்கையைப் பாட்டாளி மக்கள் கட்சி பெருமிதத்துடன் கடைப்பிடித்து வருகிறது.

## அனைத்திற்கும் அரசியலே ஆதாரம்

சர்வாதிகார ஆட்சி முறைக்கு எதிரான சனநாயக ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டுள்ள நாடு இந்தியா. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அரசாங்கத்தை அமைக்கும் நாடாளுமன்ற ஜனநாயகம் (Parliamentary Democracy) இங்கு நடைமுறையில் உள்ளது. இது ஒரு பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை (Participatory Democracy) ஆகும்.

நாடு, பொருளாதாரம், பாதுகாப்பு, அடிப்படை உரிமைகள் என மனித வாழ்வின் எல்லா அடிப்படைத் தேவைகளும் ‘அரசியல் கட்சிகள்’ எனும் அச்சாணியின் மீதுதான் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மக்கள் அனைவருக்குமான ‘நல்ல அரசியல்’ சூழலை உருவாக்கவும், மக்கள் அனைவருக்குமான ‘நல்லதொரு அரசாங்கத்தை’ அமைக்கவும் பாட்டாளி மக்கள் கட்சி உறுதியேற்றுள்ளது.

## சமூக ஜனநாயகம் எனும் உயர்வான கொள்கை

உலகளவில் அரசியல் கொள்கைகள் முதன்மையாக நான்கு வகைப்படுகின்றன.

1. தாராளவாதம் (Liberalism) 2. பழைமைவாதம் (Conservatism) 3. பொதுவுடைமை (Communism) 4. சமூக ஜனநாயகம் (Social Democracy). இவற்றில் சமூக ஜனநாயகக் கொள்கையைப் (Social Democracy) பாட்டாளி மக்கள் கட்சி பின்பற்றுகிறது.

சமுதாயத்தின் ஒவ்வொரு குடிமகனும் சுதந்திரமான, நீதியான வாழ்க்கையை வாழவேண்டும் என்பது சமூக ஜனநாயகக் கொள்கையின் அடிப்படை ஆகும். சமூக ஜனநாயகத்தின் இலக்குகள் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி, சமூக ஒருமைப்பாடு என்பனவாகும்.

## சுதந்திரம் (Freedom)

பேச்சுரிமை, கருத்துரிமை, வழிபாட்டு உரிமை போன்ற குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் (Civil and Political Rights), 'எதிர்மறை உரிமைகள்' (Negative Rights); கல்வி, மருத்துவம், உணவு, வீடு, வேலை போன்ற பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் (Economic, Social and Cultural Rights) 'நேர்மறை உரிமைகள்' (Positive Rights) ஆகிய அனைத்து மனித உரிமைகளையும் குடிமக்கள் அனைவருக்கும் உறுதிசெய்வதன் மூலம் சுதந்திரத்தைக் காக்க வேண்டும்.

## சமத்துவமும் நீதியும் (Equality and Justice)

அரசாங்கம் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும். இனம், மொழி, மதம், சாதி, பாலினம் என எதன் அடிப்படையிலும் மக்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது. அதே நேரத்தில் சமமாக நடத்துவது என்பது இரண்டு சமமான நபர்களுக்கு இடையே தான் பொருந்தும். சமமற்றவர்கள் சமமாக நடத்தப்படக் கூடாது.

## சமூக ஒருமைப்பாடு (Solidarity)

சமூகம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். சமூகத்தில் இயல்பாக இருக்கும் பல்வேறு குழுக்கள், பிரிவுகளுக்கு இடையே ஒத்துழைப்பு வேண்டும். அதுமட்டுமல்லாமல், பணம் படைத்தோர் ஏழை, முதியோர் இளையோர், சமூக நிலையில் முன்னேறியவர்கள் பின் தங்கியவர்கள் என எல்லாவிதப் பிரிவுகள் இடையேயும் ஒத்துழைப்பு வேண்டும்.

இவ்வாறாகச் சமூக ஜனநாயகம் (Social Democracy) எனும் அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறது பாட்டாளி மக்கள் கட்சி.

## ஜனநாயக அரசின் கடமைகள்

கல்வி, உடல்நலம், கண்ணியமான வேலை, போதுமான வருமானம், ஆரோக்கியமான உணவு, வசதியான வாழ்விடம், பண்பாட்டு வாழ்க்கை உள்ளிட்ட எல்லாவிதமான சமூக பொருளாதார உரிமைகள் அனைத்தையும் ஒவ்வொரு மனிதனுக்கும் உறுதி செய்வது தேவைகளில் இருந்து விடுதலை ஆகும். (Freedom from want).

பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை உள்ளிட்ட எல்லாவிதமான அரசியல் மற்றும் குடி உரிமைகளை ஒவ்வொரு மனிதனுக்கும் உறுதி செய்வது பயத்திலிருந்து விடுதலை ஆகும். (Freedom from fear)

சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி, ஜனநாயகம், பொறுப்புடைமை, மனித உரிமைகள் உள்ளிட்டவற்றை உறுதிசெய்ய வேண்டும். இதன் மூலம் கண்ணியமான சுயமரியாதை வாழ்க்கை சாத்தியமாகிறது (Freedom to live in dignity).

தேவைகளில் இருந்து விடுதலை, பயத்திலிருந்து விடுதலை, கண்ணியமான சுயமரியாதை வாழ்க்கை ஆகியவற்றை இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும், ஐநா மனித உரிமை

உடன்படிக்கைகளும் வலியுறுத்தியுள்ளன. ஐநா நீடித்திருக்கும் மேம்பாட்டு இலக்குகள் (Sustainable Development Goals) 2030 இன் இலக்கும் இதுதான். இந்த மேலான இலட்சியங்களைத் தமிழ்நாட்டில் சாத்தியமாக்க வேண்டும் என்பது பாட்டாளி மக்கள் கட்சியின் நோக்கம் ஆகும்.

## ஒரு புதிய சமூக ஒப்பந்தம் (A New Social Contract)

ஆட்சி நடத்தும் அரசாங்கத்திற்கும், ஆளப்படும் மக்களுக்கும் இடையேயான உடன்படிக்கை சமூக ஒப்பந்தம் (social contract) எனப்படுகிறது. மக்கள் அரசுக்கு விட்டுக்கொடுக்கும் உரிமைகளுக்குப் பதிலாக, அரசாங்கம் மக்களுக்குப் பாதுகாப்பை வழங்கும், வளமான வாழ்க்கைக்கான சூழலை அளிக்கும் என்கிற உடன்பாட்டின் மீதுதான் ஆட்சி அதிகாரம் நிறுவப்பட்டுள்ளது. அரசாங்கம் எனும் மாபெரும் உச்ச அதிகார அமைப்பு சமூக ஒப்பந்தம் மீதுதான் கட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை நடத்துவோர் மகாராஜாக்கள் (King), மகாராணிகள் என்பதும், மக்கள் என்போர் ராஜாக்களின் பிரஜைகள் (King's subjects) என்பதுமாகத் தமிழ்நாட்டில் திமுக அதிமுக கட்சிகள் ஏற்படுத்தி வைத்திருக்கும் மன்னராட்சி மனோபாவத்துக்கு உடனடியாக முடிவுகட்ட வேண்டும்.

'அரசின் சேவைகளைத் தருமக் காரியங்களாகக்' கருதும் அணுகுமுறை (The Charity Model) இதுவரை தமிழ்நாட்டின் ஆட்சிப் பண்பாக இருந்து வருகிறது. இதற்கு மாற்றாக அரசின் பணிகள் மக்களின் உரிமையாகப் பார்க்கப்படும் மனிதஉரிமை சார்ந்த அணுகுமுறையைப் (The Human Rights Based Approach) பாட்டாளி மக்கள் கட்சி முன்வைக்கிறது.

மக்கள் என்போர் உரிமையைக் கொண்டிருப்போர் (Rights-holders), அரசாங்கம் என்பது அந்த உரிமையை நிறைவேற்றக் கடன்பட்டோர் (The duty-bearers) என்பதைத் தமிழகத்தின் புதிய அரசியல் சித்தாந்தமாக உருவாக்க வேண்டும். இதன் மூலம் இறையாண்மை என்பது ஆள்வோரிடம் இல்லை, மக்களிடம் இருக்கிறது ('The people' as the repository of sovereignty) என்பதை நிலைநாட்ட வேண்டும் எனப் பாமக உறுதி ஏற்கிறது.

## அரசாங்கத்தின் பொறுப்புடைமை (Accountability)

மக்கள் அனைவரும் மதம், இனம், சாதி, வாழிடம், பாலினம், வயது என எந்தப் பாரபட்சமும் இன்றி, எல்லா மக்களுக்கும் பொறுப்புக்கூறும் (Accountability) அரசாங்கத்தை அமைக்க வேண்டும். பாட்டாளி மக்கள் கட்சியின் அரசாங்கத்தின் பொறுப்புடைமை (Accountability) முறையே மூன்று அங்கங்களைக் கொண்டிருக்கும். 1. கடமைப்பாடு (Responsibility), 2. பதில்கூறும் பொறுப்பு (Answerability), 3. செயலாற்றுதல் (Enforceability).

## அரசாங்கத்தின் கடமைகள் (Duties)

சமூக உடன்படிக்கையின் கீழ், ஆளும் அரசாங்கத்திற்கு மூன்றுவிதமான கடமைகள் உள்ளன. 1. மதிப்பளிக்கும் கடமை (Duty to respect). 2. பாதுகாக்கும் கடமை (Duty to protect). 3. நிறைவு செய்யும் கடமை (Duty to fulfil).

### தேர்தலும் சமூக ஒப்பந்தமும்

தேர்தல் என்பது உண்மையில் சமூக ஒப்பந்தத்தை மீள் உறுதி செய்யும் ஒரு நிகழ்வாகும். ஜனநாயகத்தில் வாக்களிக்கும் மக்கள் உரிமைகளுக்குச் சொந்தக்காரர்கள் (Rights-holders). ஆட்சி அமைப்பவர்கள் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்புடையவர்கள் (The duty-bearers). ஆனால், தமிழ்நாட்டில் அதிகாரத்தை மக்களிடமிருந்து பெற்ற ஆட்சியாளர்கள் சமூக உடன்படிக்கையை இதுவரை மதித்ததே இல்லை.

தமிழ்நாட்டில் 57 ஆண்டுக் காலமாக நீடித்துவரும் ஜனநாயக விரோதப் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், எழுத்துப்பூர்வமான வாக்குறுதிகளைச் சமூக உடன்படிக்கையாக மக்கள் முன் வைத்து, அவற்றை உறுதியாக நிறைவேற்ற உறுதி அளித்துப் புதிய அரசியல் வழியைப் பாட்டாளி மக்கள் கட்சி உருவாக்குகிறது.

## ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்புகள்

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. ஆனால், இன்னமும் ஜனநாயகம் குறித்த பரந்த அளவிலான புரிதல் இல்லை. ஆட்சியாளர்களும் ஜனநாயகத்தைப் பின்பற்றும் ஆட்சியாளர்களாக இல்லை. இந்த நிலையை மாற்றி ஜனநாயகப் பண்புகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி விரும்புகிறது.

### ஜனநாயக அமைப்பின் அடிப்படைப் பண்புகள்

நேர்மையான தேர்தல் (Free and fair elections)

சட்டத்தின் ஆட்சி (The rule of law)

முழுமையான அதிகாரப் பகிர்வு (Separation of powers)

வெளிப்படை நிருவாகம் மற்றும் ஊழல் ஒழிப்பு

(Anti-corruption, transparency and accountability)

சுதந்திரமான, பன்முக ஊடகம் (Free, independent and pluralistic media)

முனைப்புடன் செயல்படும் குடிமைச் சமூகக் குழுக்கள் (Civil society groups)

பேச்சுரிமையும் கருத்துரிமையும் (Freedom of expression and opinion)

அரசியலில் சகிப்புத்தன்மை (Political tolerance)

அமைதியான முறையில் ஒன்று கூடும் உரிமை
(Freedom of association and of peaceful assembly)

மதம் மற்றும் நம்பிக்கை உரிமை (Freedom of thought, conscience, religion or belief)

அதிகாரப் பரவலாக்கம் (Decentralisation of Power)

# 4 சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இடஒதுக்கீட்டு உச்சவரம்பு நீக்கப்படும்

இந்தியாவில் முதன் முதலில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்திய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தமிழ்நாட்டில் 100% இடப்பங்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டதன் நூற்றாண்டு வரும் 2026 – 27ஆம் ஆண்டில் கொண்டாடப்படவுள்ளது. இந்திய விடுதலைக்குப் பிறகு தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு பல்வேறு பின்னடைவுகளைச் சந்தித்தது. இடஒதுக்கீட்டின் அளவுகள் குறைந்தன. இந்தநிலை மாற்றப்பட்டு, தமிழ்நாட்டில் 100% இடஒதுக்கீட்டின் நூற்றாண்டு கொண்டாடப்படும் போது, இடஒதுக்கீட்டின் அளவு அதிகரிக்கப்பட்டு முழுமையான சமூகநீதி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்தியாவிலும் முழுமையான சமூகநீதியை நடைமுறைப் படுத்துவதற்கான அடிப்படை சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்துவதுதான். சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் ஒவ்வொரு சமூகத்திற்கும் இடப்பங்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு குறித்துப் பேசுவதற்கு முழுமையான தகுதி பெற்ற கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி தான். தமிழ்நாட்டில் 20% மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு, 10.5% வன்னியர் இடஒதுக்கீடு, 3.5% இஸ்லாமியர் இடஒதுக்கீடு, 3% அருந்ததியர் இடஒதுக்கீடு, தேசிய அளவில் மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீடு, மருத்துவப் படிப்புக்கான அகில இந்திய தொகுப்பு இடங்களில் பட்டியலினத்தவருக்கு 15% இடஒதுக்கீடு, பழங்குடியினருக்கு 7.5% இடஒதுக்கீடு என 6 வகையான இடஒதுக்கீட்டைப் போராடியும், வாதாடியும் பெற்றுத் தந்தவர் பா.ம.க.வின் நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தத் தகுதியுடன் சமூக நீதியில் மேலும் சாதிக்க வேண்டிய அம்சங்கள் அனைத்தையும் சாதிக்கப் பாட்டாளி மக்கள் கட்சி உறுதிபூண்டிருக்கிறது. அதன் மூலம், தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்தியா முழுவதும் முழுமையான சமூகநீதியை நடைமுறைப்படுத்தப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

**சமூக நீதி தொடர்பாக மக்களுக்குப் பாட்டாளி மக்கள் கட்சி அளிக்கும் வாக்குறுதிகள்:**

1. 2021ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, இந்த ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப்பட உள்ளநிலையில், அதைச் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பாக நடத்த பா.ம.க. பாடுபடும்.
2. இந்தியாவில் இடஒதுக்கீட்டுக்கான உச்சவரம்பை 50% என்ற அளவில் இருந்து தளர்த்திக் கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கும் நிலையில், அதைச் சட்டபூர்வமாக்க பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

3. இந்தியாவில் நடத்தப்படும் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், அனைத்துச் சமூகங்களுக்கும், அவற்றின் மக்கள்தொகைக்கு இணையான விகிதத்தில் இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் அவற்றின் தேவைக்கு ஏற்ப இடஒதுக்கீட்டின் அளவை மாற்றியமைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படும்.

5. தேவேந்திர குல வேளாளர்களைப் பட்டியல் வகுப்பில் இருந்து நீக்கி, பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்ப்பதற்கான சட்டத் திருத்தம் செய்யப்படும். அவர்களின் மக்கள்தொகைக்கு இணையான இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6. மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டில் கிரீமிலேயர் முறையை நீக்க பா.ம.க. பாடுபடும்.

### கல்வி, அரசு வேலைவாய்ப்பில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு

7. மத்திய அரசின் உயர்கல்வி நிறுவன மாணவர் சேர்க்கை, மத்திய அரசு மற்றும் பொதுத் துறை நிறுவன வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்குவதற்கு பா.ம.க. வலியுறுத்தும்.

8. அரசுத் துறை மற்றும் பொதுத்துறைப் பணிகளில் பதவி உயர்விலும், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படும்.

9. மத்திய அரசில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்ற புதிய அமைச்சகம் உருவாக்கப்படும்.

10. தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அரசியலமைப்புச் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், பிற பிற்படுத்தப்பட்டோரின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், அந்த ஆணையத்திற்குக் கூடுதல் அங்கீகாரம் வழங்க வகை செய்யப்படும்.

11. தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையக் கிளை அலுவலகம் சென்னையில் திறக்கப்படும்.

12. மதம் மாறிய பிற பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர், பழங்குடியினர் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினருக்கும் இடஒதுக்கீடு உள்ளிட்ட அனைத்துச் சலுகைகளையும் தொடர்ந்து வழங்கப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

### தனியார்துறை இடஒதுக்கீடு

13. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் குறைந்து வரும் நிலையில், அமைப்பு சார்ந்த தனியார் துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அமைப்புச்சார்ந்த தனியார் துறையில் 6 கோடி வேலைவாய்ப்புகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த சில ஆண்டுகளில்

இது 10 கோடியாக உயர வாய்ப்புள்ளது. இத்துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைய முடியும் என்பதால், தனியார்துறை வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு நடைமுறைபடுத்தப்படும். இதற்குத் தேவையான சட்டத்திருத்தங்கள் செய்யப்படும்.

14. கல்வி, வேலைவாய்ப்புகள் மட்டுமின்றி, சமூக முன்னேற்றத்திற்கு வகை செய்யும் அனைத்து அம்சங்களிலும் இடஒதுக்கீடு நடைமுறைபடுத்தப்படும். தொழில் தொடங்க உதவி மற்றும் மானியம் வழங்குதல், அரசுத்துறை ஒப்பந்தங்கள் வழங்குதல், எரிபொருள் மற்றும் எரிவாயு விற்பனை முகமைகளுக்கு உரிமம் வழங்குதல் உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த பா.ம.க. வலியுறுத்தும்.

## நீதித்துறையில் இடஒதுக்கீடு

15. உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிப்பதற்கான கொலிஜியம் முறை அண்மைக்காலமாக மிகக்கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறது. கீழமை நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும் நிலையில், உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்திலும் இடஒதுக்கீடு தேவையாகும். எனவே, நீதித்துறையிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த பா.ம.க. பாடுபடும்.

16. நீதித்துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வசதியாக உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்வதற்காக நீதிபதிகள் நியமன ஆணையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## மாநில முன்னுரிமை

17. ஒரு மாநிலத்தில் உள்ள மத்தியப் பொதுத்துறை நிறுவனங்களில் அதிகாரிகள் நிலை பணியிடங்களைத் தவிர்த்து, தொழிலாளர் நிலைப் பணியிடங்கள் அனைத்தும் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டே நிரப்பப்படும்.

18. மாநிலங்களில் உள்ள மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் இடமாற்றம் செய்யப்படாத இடைநிலை பணியிடங்களில் 50% பணியிடங்கள் மாநில ஒதுக்கீடாக அறிவிக்கப்படும். இப்பணியிடங்களில் அந்தந்த மாநிலத்தவர்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள்.

19. மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் கடைநிலைப் பணியிடங்கள் அனைத்தும் அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டே நிரப்பப்படும். அதாவது, கடைநிலைப் பணிகளில் 100% மாநில இடஒதுக்கீடு வழங்கப்படும்.

20. மாநிலங்களில் உள்ள தனியார் நிறுவனங்களில் 80% பணியிடங்கள் அந்தந்த மாநில இளைஞர்களைக் கொண்டு நிரப்பப்படவேண்டும் என்பதைக் கட்டாயமாக்கி, புதிய சட்டம் இயற்றப்படும்.

# 5 மாநிலங்களுக்குத் தன்னாட்சி அதிகாரம் மத்திய அரசு வருவாயில் சமப் பங்கு

இந்தியா முன்னேற வேண்டுமானால், மத்திய அரசும் மாநில அரசுகளும் கைகோத்து ஒன்றாக நடைபோட வேண்டும். மாறாக, மத்திய அரசை மாநில அரசுகள் தங்களது தோளில் சுமக்கும் நிலை உருவானால், அது தேசிய அளவிலான வளர்ச்சியையும், மாநில அளவிலான வளர்ச்சியையும் கடுமையாகப் பாதிக்கும். இத்தகைய நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகவே மாநிலங்களுக்குத் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி பல பத்தாண்டுகளாக வலியுறுத்தி வருகிறது.

மாநிலங்களுக்குத் தன்னாட்சி வழங்குவது தொடர்பாகப் பல்வேறு ஆணையங்கள் பரிந்துரைத்தும் கூட, அப்பரிந்துரைகளை மத்திய அரசு இதுவரை செயல்படுத்தவில்லை. அதேபோல், மாநிலங்களில் இருந்து மத்திய அரசுக்குக் கிடைக்கும் வருவாயில் நியாயமான அளவு மாநிலங்களுக்கு வழங்கப்படுவதில்லை. இந்த நிலையை மாற்றுவதற்காகப் பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து பாடுபடும்.

### மத்திய – மாநில அரசு உறவுகள் தொடர்பான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:

1. மத்திய – மாநில அரசுகளுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வு, மாநிலங்களுக்கு தன்னாட்சி குறித்து ஆராய்ந்து பரிந்துரைப்பதற்காக, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையில் புதிய ஆணையம் அமைக்க பா.ம.க. வலியுறுத்தும். ஓராண்டிற்குள் ஆணையத்தின் அறிக்கை பெறப்பட்டு, உடனடியாக அதன் பரிந்துரைகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

2. நெருக்கடி நிலைக் காலத்தின்போது, மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வி உள்ளிட்ட 5 துறைகளுக்கான அதிகாரங்களும் மீண்டும் மாநிலப் பட்டியலுக்கே மாற்றப்படுவதற்குப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

### மாநிலங்களுக்கு 50% நிதிப் பகிர்வு

3. 15ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி, மத்திய அரசின் ஒட்டுமொத்த வரி வருவாயில் மாநிலங்களுக்கு 41% பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஆனால், வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்குக் குறைந்த நிதி, வளர்ச்சி அடையாத மாநிலங்களுக்கு அதிக நிதி என்று வழங்கப்படுவதால், வளர்ச்சி அடைந்த மாநிலங்கள் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்கு பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

4. மத்திய அரசின் ஒட்டுமொத்த வரி வருவாயில் மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியின் அளவு தற்போதுள்ள 41 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்படவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

5. மத்திய அரசின் வரி வருவாயை ஒட்டுமொத்தமாகப் பகிரும் நிலையை மாற்றி, ஒவ்வொரு மாநிலத்தில் இருந்து மத்திய அரசுக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கிறதோ, அதில் 50% சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு வழங்கப்படும். அதற்கேற்ற வகையில், விதிகளை திருத்த பா.ம.க. வலியுறுத்தும்.

6. உச்சநீதிமன்றத்தின் கிளையை சென்னையில் அமைக்க மத்திய அரசிடம் பா.ம.க. வலியுறுத்தும்.

### உயர்கல்வி நிறுவனங்கள் - மாநிலங்களுக்கு உரிமை

7. ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மத்திய மருத்துவ மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படுவதற்கு நிலம் கொடுத்து உதவியவை மாநில அரசுகள்தான். உயர்கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கான செலவுகளிலும் ஒரு பகுதியை மாநில அரசுகள் பகிர்ந்துகொண்டுள்ளன. இதை அங்கீகரிக்கும் வகையில், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மருத்துவ மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் 50% இடங்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும்.

   இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் மத்திய உயர்கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருப்பதால், புதிதாக அறிவிக்கப்படவுள்ள மாநில ஒதுக்கீட்டால், எந்த மாநிலமும் பாதிக்கப்படாது.

8. மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைக்கும் இயற்கை வளங்களின் அடிப்படையில்தான் சம்பந்தப்பட்ட மாநிலங்களில் அமைக்கப்பட்டன. பொதுத்துறை நிறுவனங்களின் வருவாய்க்கு அடிப்படை சம்பந்தப்பட்ட மாநிலங்களின் இயற்கை வளம்தான். எனவே, பொதுத்துறை நிறுவனங்களில் அதிகாரிகள் தவிர்த்த பணியாளர்கள் நிலையிலான அனைத்து வேலைவாய்ப்புகளும் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இதற்கான விதிகளில் திருத்தம் செய்யப் பாட்டாளி மக்கள் கட்சி மத்திய அரசை வலியுறுத்தும்.

9. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு மாநில அரசுகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான செலவில் ஒரு பகுதியை மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால், மாநில அரசுகளுக்குக் கடுமையான நிதி நெருக்கடி ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் வகையில், மத்திய அரசுத் திட்டங்களுக்கான செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும்.

10. மாநிலத்தின் வளர்ச்சிக்காகச் செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்புத் திட்டங்கள் அனைத்தும் நாட்டின் பொதுச் சொத்துக்கள் ஆகும். தேச வளர்ச்சிக்கு இந்தக் கட்டமைப்புகள் மிகவும் தேவை என்பதால், மாநில அரசுகளின் சார்பில் செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கான செலவில் 50 விழுக்காட்டை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

# 6 குறைந்தபட்ச ஆதரவு விலைச் சட்டம் வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை

இந்தியாவில் முதன்மைத் தொழில் வேளாண்மை தான். உழவர்கள் கடவுளுக்கு இணையானவர்கள் என்பதே பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு. ஆனால், இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் உழவர்களின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. வேளாண்மைத் தொழிலில் இலாபம் பார்ப்பது என்பது குதிரைக் கொம்பாக மாறி வருகிறது என்பது தான் உண்மை.

உலகில் எந்தவொரு பொருளாக இருந்தாலும், அதை உற்பத்தி செய்தவர்கள் தான் அதற்கான விலையைத் தீர்மானிக்கிறார்கள். ஆனால், உழவுத் தொழிலில் மட்டும் தான் வேளாண் விளைபொருட்களுக்கான விலையை மற்றவர்கள் நிர்ணயிக்கும் அவலநிலை நிலவுகிறது. அனைத்து வகை வேளாண் விளைபொருட்களுக்கும் நியாயமான குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்; உழவர்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்தத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பன பாட்டாளி மக்கள் கட்சியின் நோக்கங்களில் முக்கியமானவை. இவற்றுக்குச் செயல்வடிவம் கொடுக்க பாட்டாளி மக்கள் கட்சி அனைத்து வகையிலும் பாடுபடும்.

**உழவர்கள் நலனுக்காகப் பாட்டாளி மக்கள் கட்சி முன்வைக்கும் செயல் திட்டங்கள்:**

1. வேளாண் விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை (கொள்முதல் விலை) வழங்கப் படுவது உழவர்களின் உரிமையாக்கப்படும். இதற்கான சட்டத்தை நிறைவேற்ற பா.ம.க. வலியுறுத்தும்.

2. நெல், கரும்பு, எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள், பழங்கள் என அனைத்து வகை வேளாண் விளைபொருட்களுக்கும், பாலுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்படும். வேளாண் விளைநிலங்களுக்கான குத்தகை உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் கணக்கிட்டு, அத்துடன் 50% இலாபம் சேர்த்துக் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படும்.

3. ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3,000, ஒரு டன் கரும்புக்கு ரூ.5,000 வீதம் கொள்முதல் விலை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அனைத்து விளை பொருட்களையும் முறையாகக் கொள்முதல் செய்ய வசதியாக, வேளாண் விளைபொருட்கள் கொள்முதல் ஆணையம் தேசிய அளவில் அமைக்கப்படும். ஒவ்வொரு மாநிலத்திலும் இதன் கிளை அமைப்புகள் அமைக்கப்பட்டு, அவை மாநில அரசுகளுடன் இணைந்து வேளாண் விளைபொருட்களைக் கொள்முதல் செய்யும்.

5. உழவர்களுக்கு ஓய்வூதியம்: உழவர்கள் வருங்கால வைப்புநிதி ஆணையம் அமைக்கப்படும். உழவர்களிடம் இருந்து ஆண்டுக்கு ரூ.200 சந்தா வசூலிக்கப்பட்டு, அத்துடன் மத்திய, மாநில அரசுகள் ஒரு குறிப்பிட்ட தொகையை அவற்றின் பங்காகச்



செலுத்தும். இந்த நிதியைக் கொண்டு 60 வயதைக் கடந்த உழவர்களுக்கு மாதம் ரூ.3,000 ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை**

6. வேளாண்துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும். மாநில அரசுகளின் வேளாண் அமைச்சர்கள், உழவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர்களுடன் ஆலோசனைகள் பெறப்பட்டு, அவற்றின் அடிப்படையில் வேளாண் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

7. இந்தியாவில் சிறு, குறு விவசாயிகளுக்கு இப்போது ஆண்டுக்கு ரூ.6,000 மானியம் வழங்கப்படுகிறது. இதை ஒரு ஏக்கருக்கு ரூ.10,000ஆக உயர்த்த பா.ம.க. பாடுபடும். அதிகபட்சமாக, ஓர் உழவருக்கு ரூ.30,000 என்ற அளவில் மானிய வரம்பு நிர்ணயிக்கப்படும்.

8. வேளாண் தொழிலாளர் குடும்பங்களுக்கு, வேலை இல்லாத காலங்களில், மாதம் ரூ.2,500 நிதியுதவி வழங்க பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

**பயிர்க்கடன் தள்ளுபடி**

9. இந்தியா முழுவதும் பொதுத்துறை வங்கிகளில் உழவர்கள் வாங்கிய ரூ.1 இலட்சம் வரையிலான பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். ஒரு இலட்சம் ரூபாய்க்கும் கூடுதலான பயிர்க்கடன்களில் ரூ.1 இலட்சம் தள்ளுபடி செய்யப்படும். மீதமுள்ள தொகையை உழவர்கள் குறிப்பிட்ட காலத்தில் செலுத்தினால் அதன் மீதான வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

10. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உழவர்கள் வாங்கிய பயிர்க்கடன்களைத் தள்ளுபடி செய்யும்படி மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொள்ளும். அவ்வாறு தள்ளுபடி செய்யும் தொகையில் ஒரு பகுதியை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

11. பொதுத்துறை வங்கிகள் மூலம் இனிவரும் காலங்களில் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கு வட்டி வசூலிக்கப்படாது. குறிப்பிட்ட தவணைக் காலத்திற்கு முன்பாகவே செலுத்தப்படும் தொகைக்கு 10% வட்டிமானியம் வழங்கப்படும்.

**நியாய விலைக் கடைகளில் பாமாயிலுக்கு மாற்றாகக் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய்**

12. தேங்காய் கொப்பரை, நிலக்கடலை ஆகியவற்றுக்கு உரிய விலை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் நியாயவிலைக் கடைகளில் பாமாயிலுக்கு மாற்றாகக் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படும்.

13. தமிழ்நாட்டில் தென்னைகளில் இருந்து நீரா பானம் எடுக்க வழங்கப்பட்டுள்ள அனுமதி தென்னை விவசாயிகளின் வாழ்க்கையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அனுபவத்தின் அடிப்படையில், அனைத்து மாநிலங்களிலும் நீரா பானம் எடுக்க அனுமதி வழங்கும்படி மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்படும்.

14. நீரா பானத்தைத் தேசிய அளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம், நீரா பானம் விற்பனை மிகப்பெரிய வணிகமாக மாறும். இதன் மூலம் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். இதற்கான கட்டமைப்புகளை உருவாக்கத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும்.

15. நாடு முழுவதும் பனைகளைப் பாதுகாப்பதற்காகப் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். அத்திட்டத்தின்படி, பனை வளர்ப்புக்குச் சிறப்பு மானியத்தை மத்திய அரசு வழங்கும்.

16. உழவர்களுக்குப் பெரும் எதிரியாக உள்ள கருவேல மரங்களை ஒழிக்கச் சிறப்புத் திட்டம்.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

17. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 40 நாட்கள் என்ற அளவிலேயே வேலை வழங்கப்படுகிறது. இந்தநிலை மாற்றப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஒரு குடும்பத்திற்கு 100 நாட்கள் கண்டிப்பாக வேலை வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். இதற்காக இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை ரூ.1 இலட்சம் கோடியாக உயர்த்த பா.ம.க. பாடுபடும்.

18. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் வேளாண்மைக்கும் நீட்டிக்கப்படும்.

19. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி வழங்கப்படும் ஒருநாள் ஊதியத்தை ரூ.400ஆக உயர்த்த பா.ம.க. பாடுபடும்.

### பயிர்க்காப்பீடு - அரசே வழங்கும்

20. வேளாண் பயிர்க் காப்பீட்டுத்திட்டங்கள் தனியார் மூலம் செயல்படுத்தப்படுவதால், அவை வணிக நோக்கம் கொண்டவையாக மாறிவிட்டன. இதனால், பல இடங்களில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குப் காப்பீடு கிடைக்கவில்லை. இந்த நிலையை மாற்றும் நோக்குடன் பொதுத் துறை நிறுவனமான தேசிய வேளாண் பயிர்க்காப்பீட்டு நிறுவனம் மூலமாக மட்டுமே பயிர்க்காப்பீடு வழங்கப்படும்.

### விளை நிலங்கள் கையகப்படுத்தப்படாது

20. இந்தியாவில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, தொழில் திட்டங்களுக்காக வேளாண் விளைநிலங்கள் கையகப்படுத்தப்படுவதைத் தடை செய்யும் வகையில், நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தைத் திருத்த பா.ம.க. பாடுபடும்.

# 7 தமிழ்நாடு - சுரங்கம் இல்லா மாநிலம் என்.எல்.சி. நிறுவனம் வெளியேற்றப்படும்

வளர்ச்சி என்ற பெயரில் இயற்கை வளங்கள் சூறையாடப்படுவதையும், சுற்றுச்சூழல் சீரழிக்கப்படுவதையும் பாட்டாளி மக்கள் கட்சி ஒருபோதும் அனுமதிக்காது. தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வரும் ஒரே கட்சி பாட்டாளி மக்கள் கட்சி தான் என்பதை அனைவரும் அறிவார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் முயற்சியால் தான் தமிழ்நாட்டில் காவிரி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் உருவாக்கப்பட்டது. இந்த வரிசையில், இந்தியா முழுவதும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் பாட்டாளி மக்கள் கட்சி உறுதிபூண்டிருக்கிறது.

இந்தியா மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகிற்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாகக் காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. அதன் தீமைகளைத் தடுக்க வேண்டுமானால், படிம எரிபொருட்களின் பயன்பாட்டை நிறுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காக நிலக்கரிச் சுரங்கங்களை மூடுதல், புதிதாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ள அனல்மின் நிலையங்களுக்கு முடிவு கட்டுதல் உள்ளிட்ட கடுமையான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இதற்காகப் பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து போராடும்; குரல் கொடுக்கும்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள சேத்தியாத்தோப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டம், புதிய வீராணம் நிலக்கரித் திட்டம், பாளையங்கோட்டை நிலக்கரித் திட்டம் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப் பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை மேற்கொள்ளும்.

2. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மூன்றாவது சுரங்கத் திட்டம் மற்றும் முதல் இரு சுரங்கத் திட்டங்களின் விரிவாக்கத்திற்குத் தடை விதிக்கப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

3. என்.எல்.சி. நிறுவனத்தை ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் தமிழ்நாட்டில் இருந்து வெளியேற்ற பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

4. கிழக்குக் கடற்கரை மாவட்டங்களில் தனியார் நிறுவனங்களால் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு அனல்மின் திட்டங்களால், தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை மாவட்டங்களின் சுற்றுச்சூழல் சீரழிக்கப்படுவதையும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதையும் தடுத்து நிறுத்த பா.ம.க. பாடுபடும்.

5. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களால் மனித உடல்நலம், உயிரிப்பன்மயம், விதை இறையாண்மை, உணவுப் பாதுகாப்பு, பண்ணை வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் என அனைத்துக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதால், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை

இந்தியாவில் அறவே அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்துவோம். ஏற்கெனவே, அனுமதிக்கப்பட்ட பி.டி.பருத்தியால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து முறையான ஆய்வு நடத்தவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு பெற்றுத்தரவும் வலியுறுத்துவோம்.

6. மரபணு மாற்றம் இல்லாத உணவுப் பொருட்களை நுகர்வோர் பெறுவதை உறுதி செய்யும் வகையில், மரபணு மாற்றம் இல்லாத உணவுப் பொருட்களுக்கான முத்திரை இடும் முறையை நவீனமாக்கி, குழப்பமின்றி, உறுதியாகச் செயலாக்கக் கோருவோம்.

### அணுஉலை இல்லாத் தமிழகம்

7. தமிழ்நாட்டில் கடலூர், இராணிப்பேட்டை, வாணியம்பாடி, தூத்துக்குடி, எண்ணூர், பவானி, திருப்பூர், கோவை உள்ளிட்ட பகுதிகளில் தொழிற்சாலை மாசைக் கட்டுப்படுத்திச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கவும் பா.ம.க. பாடுபடும். இதற்கான நடவடிக்கைகளுக்கு மத்திய அரசின் உதவியைப் பெற்றுத்தரும்.

8. அணுஉலைகள் பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடியவை ஆகும். எனவே, தமிழ்நாட்டை அணுஉலைகள் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கான திட்டங்களை வகுத்து, அதைச் செயல்படுத்துவதற்கான கால அட்டவணையை வெளியிட வேண்டும் – புதிய உலைகளுக்கு அனுமதி இல்லை என்பதைக் கொள்கை முடிவாக அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.

### பருவநிலை மாற்றம்

9. இந்திய காலநிலைச் சட்டம்: இந்தியாவில் காலநிலைச் செயல்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் அரசு அறிவிப்புகளாக மட்டும் இருந்தால் போதாது, மாறாக, அவை அரசின் சட்டமாக வேண்டும். இந்தியாவின் தற்போதைய சுற்றுச்சூழல் சட்டங்கள் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் அளவில் இல்லை. எனவே, இந்தியாவில் ஒருங்கிணைந்த காலநிலைச் செயல்பாட்டுக்கான சட்டம் (Comprehensive Climate Bill) கொண்டுவரப்படும்.

10. தேசிய காலநிலை மாற்ற கவுன்சில்: இந்தியாவின் அனைத்து மாநிலச் சுற்றுச்சூழல் அமைச்சர்களையும் உள்ளடக்கி, தேசிய அளவிலான தேசிய காலநிலை மாற்ற கவுன்சில் (National Council on Climate Change) அமைக்கப்படும். அந்தக் குழுவின் மூலம், ஜி.எஸ்.டி கவுன்சில் போன்றே காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளுக்கான முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

11. ஐநா உடன்படிக்கைகளைச் செயலாக்குதல்: காலநிலை மாற்றம், உயிரிப்பன்மயம், நீடித்த வளர்ச்சி ஆகிய உன்னத நோக்கங்கள் தொடர்பான ஐநா உடன்படிக்கைகளான பாரிஸ் காலநிலை உடன்படிக்கை (Paris Climate Agreement), ஐநா உயிரிப்பன்மயக் குறிக்கோள் (Global Biodiversity Framework), புதிய நகர்ப்புறச் செயல்திட்டம் (New Urban Agenda), ஐநா நீடித்திருக்கும் வளர்ச்சிக் குறிக்கோள் 2030 (Sustainable

Development Goals - SDGs 2030) உள்ளிட்டவற்றை முழுமையாகவும், மாநிலங்கள், உள்ளாட்சிகள் மற்றும் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியும், போர்க்கால நோக்கில் செயலாக்குவோம்.

12. மத்திய அரசால் வகுக்கப்பட்ட உயிர்ப் பன்மயச் சட்டத்தின்படி, உயிர்ப் பன்மய மேலாண்மை குழுக்களை அமைத்தல், மக்கள் உயிர்ப் பன்மயப் பதிவேட்டை உருவாக்குதல் ஆகிய நடவடிக்கைகளை மாநில அரசுகள் மேற்கொள்வதை மத்திய அரசு உறுதி செய்யும். மரங்கள் ஆணையம், சதுப்பு நில மேலாண்மைக் குழுக்கள் ஆகியவை அமைக்கப்படுவதையும் பாட்டாளி மக்கள் கட்சி உறுதி செய்யும்.

**நீடித்த மேம்பாட்டு இலக்குகள்**

13. 2016 – 2030 காலத்தில் ஒவ்வொரு நாடும் எட்டவேண்டிய நீடித்த மேம்பாட்டுக்கான 17 பெரு இலக்குகளையும், 169 குறு இலக்குகளையும், ஐக்கிய நாடுகள் அவை வகுத்துள்ளது. இந்த இலக்குகளை எட்டத் தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் முதலமைச்சர் தலைமையில் தனி அமைச்சரவைக் குழுக்கள் அமைக்கப்படுவதை மத்திய அரசு உறுதி செய்யும்.

14. திடக்கழிவு மேலாண்மை: இந்திய அரசின் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான விதிகளை முழு அளவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

15. காற்று மாசுபாடு: காற்று மாசுபாட்டைத் தடுப்பதற்கான தேசியத் தூயக் காற்று செயல்திட்டத்தை (National Clean Air Program - NCAP) மேலும் வலிமையாக்கி முழுமையாகச் செயல்படுத்த பா.ம.க. பாடுபடும்.





# 8 தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் வேளாண் பொருளாதார மண்டலம்

தமிழ்நாட்டில் வறட்சி, வெள்ளம் உள்ளிட்ட இயற்கைச் சீற்றங்கள் காரணமாக வேளாண்மை மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயத்தை நம்பியிருப்பவர்கள் பொருளாதார இழப்புக்கு ஆளாகின்றனர். அதுமட்டுமின்றி, வேளாண்மை சார்ந்த வேலைவாய்ப்புகளும் குறைந்து வருகின்றன. வேளாண்மை சார்ந்து கிடைக்கும் வேலைகளில் பெரிய அளவில் ஊதியமும் இல்லை.

வேளாண் பொருட்களை மதிப்புக்கூட்டுவதன் மூலம் உழவர்களுக்கு அதிக இலாபம் கிடைப்பதுடன், அதிக அளவில் வேலைவாய்ப்புகளையும் உருவாக்க முடியும். இதைக் கருத்தில் கொண்டு மாவட்டந்தோறும் வேளாண் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்கும் திட்டத்தை முதல் கட்டமாக தமிழ்நாட்டில் செயல்படுத்த மத்திய அரசிடம் பா.ம.க. வலியுறுத்தி, வெற்றிபெறும்.

**இதுதொடர்பாக, பாட்டாளி மக்கள் கட்சி அளிக்கும் வாக்குறுதிகள் வருமாறு:**

1. தருமபுரியில் மா, தக்காளி, மரவள்ளி, பட்டுப்புழு வளர்ப்புக்கான மல்பரி ஆகியவற்றுக்கான சிறப்பு மண்டலம் அமைக்கப்படும்.
2. கன்னியாகுமரி மாவட்டம் ரப்பர் தொழில் வளர்ச்சி மண்டலமாக அறிவிக்கப்படும்.
3. பொள்ளாச்சியில் தென்னைத் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கப்படும்.
4. சேலத்தில் மரவள்ளி, பாக்குத் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கப்படும்.
5. தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படும்.
6. ஊட்டி, கொடைக்கானலில் காஃபி, தேயிலை மண்டலங்கள் அமைக்கப்படும்.
7. புதுக்கோட்டை மாவட்டத்தில் மலர்கள், முந்திரி மண்டலம் அமைக்கப்படும்.
8. திருச்சி மாவட்டம் வாழை மண்டலமாக அறிவிக்கப்படும்.
9. கரூரில் வாழை, கோரைப்புல், முருங்கை மண்டலங்கள் அமைக்கப்படும்.
10. கிருஷ்ணகிரியில் ரோஜா ஏற்றுமதி மண்டலம், தக்காளி, மலர் மண்டலம் அமைக்கப்படும்.

11. விழுப்புரம் மாவட்டத்தில் நெல், கரும்பு மண்டலம் அமைக்கப்படும்.

12. திருவள்ளூர் மாவட்டத்தில் மா, நெல் மண்டலம் அமைக்கப்படும்.

13. கடலூர் மாவட்டத்தில் முந்திரி, பலா, நெல் மற்றும் மீன் மண்டலம் உருவாக்கப்படும்.

14. அரியலூர் மாவட்டத்தில் பருத்தி, முந்திரி மண்டலமும், பெரம்பலூரில் சிறிய வெங்காயம் மண்டலமும் அமைக்கப்படும்.

15. மலர் உற்பத்தி அதிகம் உள்ள மாவட்டங்களில் வாசனைத் திரவியத் தொழிற்சாலையும், மாம்பழம் மற்றும் தக்காளி அதிகம் விளையும் மாவட்டங்களில் அவற்றின் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் அமைக்கப்படும்.

# 9 நதிகளை இணைத்து நாட்டு மக்களையும் இணைப்போம்

ஒட்டுமொத்த இந்தியாவிலும் நீர்ப்பாசனக் கட்டமைப்புகள் மிகவும் குறைவாக உள்ள மாநிலம் என்றால் அது தமிழ்நாடு தான். மத்தியப்பிரதேசம், கர்நாடகம், ஆந்திரம், தெலுங்கானா, குஜராத் உள்ளிட்ட பல மாநிலங்கள் மிக அதிக அளவில் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை உருவாக்கி வருகின்றன. ராஜஸ்தான் மாநிலத்திலும் கூடப் பாசனக் கட்டமைப்பு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்தியாவின் கடைமடைப் பாசனப் பகுதியான தமிழ்நாட்டில் நீர்ப்பாசனக் கட்டமைப்பு பெரிய அளவில் இல்லை. அதனால், தமிழ்நாட்டில் பாசனப் பரப்பு படிப்படியாகக் குறைந்து வருகிறது என்பதே உண்மை.

தமிழ்நாட்டின் பாசனக் கட்டமைப்பைப் பெருக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ள நிலையில், மற்றொருபுறம் பிற மாநிலங்களில் பெருமழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளத்தையும் தடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்கான சிறந்த தீர்வு நதிகள் இணைப்புத் திட்டம் தான். கடந்த காலங்களில் பலமுறை முன்மொழியப்பட்டுக் கைவிடப்பட்ட நதிகள் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

### நீர்ப்பாசனத் திட்டங்கள் குறித்த பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:

1. உலகம் முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கங்கை முதல் காவிரி வரை இந்தியாவின் பெரும்பான்மையான நதிகளை இணைப்பதற்கான செயல் திட்டம் வகுக்கப்படும். அதற்காக நீரியல் வல்லுநர்களைக் கொண்ட ஆணையம் அமைக்கப்படும். இணைப்புத் திட்டத்தை வகுத்துக் குறிப்பிட்ட காலத்திற்குள் நதிகள் இணைப்புப் பணிகள் தொடங்கப்படும்.
2. தமிழ்நாட்டின் நலனுக்காகக் கோதாவரி – காவிரி நதிகள் இணைப்புத் திட்டம் முழுக்க முழுக்க மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.
3. தமிழக அரசால் செயல்படுத்தப்படவுள்ள 20க்கும் மேற்பட்ட திட்டங்களைக் கொண்ட ரூ. 1 இலட்சம் கோடி மதிப்பிலான நீர்ப்பாசனப் பெருந்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கும்படி மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.
4. பாசன வசதிகள் குறைவாக உள்ள மாநிலங்களில் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த மாநில அரசுகள் விண்ணப்பித்தால் அவற்றுக்கு மத்திய அரசு நிதியுதவி வழங்கும்.

### மேகதாது அணைக்கு அனுமதி அளிக்கப்படாது

5. காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் அணைகட்டக் கர்நாடகத்திற்கு அனுமதி அளிக்கப்படாது. மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கக் கர்நாடக அரசுக்கு அளிக்கப்பட்ட அனுமதி திரும்பப் பெறப்படும்.

6. காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பைச் செயல்படுத்தக் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்திற்குக் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளை அதன் பொறுப்பில் எடுத்துக்கொள்ளும் அதிகாரம் இல்லை. இது காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்புக்கு எதிரானது ஆகும். எனவே, அணைகளைக் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளும் அதிகாரத்துடன் கூடிய புதிய அமைப்பைக் ‘காவிரி மேலாண்மை வாரியம்’ என்ற பெயரில் அமைக்கும்படி மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

7. முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்தப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

8. பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசும், காவிரியின் துணை ஆறுகளின் குறுக்கே கேரள அரசும் தடுப்பணைகள் கட்டுவதை மத்திய அரசின் மூலமாக பா.ம.க. தடுத்து நிறுத்தும்.

### தமிழக ஆறுகள் மீட்டுருவாக்கத் திட்டம்

9. தமிழ்நாட்டின் வற்றாத ஜீவநதியான தாமிரபரணி ஆறு நச்சுக் கழிவுகள் கலப்பால் முழுமையாகச் சீரழிந்திருக்கிறது. தாமிரபரணி ஆற்றைச் சீரமைத்து அதன் பழைய நிலைக்கு மீட்டுருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10. காவிரி, வைகை, பாலாறு, தென்பெண்ணை, நொய்யல் உள்ளிட்ட தமிழ்நாட்டின் அனைத்து நதிகளையும் தூய்மைப்படுத்தவும், கழிவுகள் கலப்பதைத் தடுக்கவும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

11. ஆறுகள் தேசிய மயமாக்கப்படவேண்டும் என்பதுதான் பா.ம.க.வின் நிலைப்பாடு ஆகும். நதிகள் இணைப்புக்கு இதுதான் அடிப்படை ஆகும். எனவே, மாநிலங்களுக்கு இடையே பாயும் அனைத்து ஆறுகளையும் தேசிய மயமாக்குவதற்காக பா.ம.க. பாடுபடும்.

12. அணைகள் பாதுகாப்புச் சட்டத்தைத் திரும்பப்பெற பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.



# 10 தமிழ்நாட்டில் 3 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் பட்டதாரிகளுக்கு உதவித் தொகையுடன் பயிற்சி

இந்தியாவின் எதிர்காலம் இளைஞர்கள் தான். இளைஞர்களைக் கொண்டு தான் இந்தியாவை வல்லரசாக மாற்ற முடியும். ஆனால், இந்தியாவில் ஒருபுறம் படித்த இளைஞர்களுக்கு, அவர்களின் தகுதிக்கேற்ற ஊதியத்தில் வேலை கிடைக்கவில்லை. மற்றொருபுறம், தொழில்நுட்பம் சார்ந்த பணிகளுக்குத் தகுதியான ஆட்கள் கிடைக்கவில்லை என்ற அவலம் அனைத்து மாநிலங்களிலும் நிலவுகிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நோக்கம்.

**இளைஞர் நலன் – வேலைவாய்ப்பு சார்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. இந்தியா முழுவதும் மத்திய அரசு அலுவலகங்களில் 30 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.
2. தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் 3 இலட்சம் புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.
3. ஒவ்வொரு ஆண்டும் கல்லூரி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் படிப்பை முடித்து வெளிவரும் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரிகளில் 20 இலட்சம் பேருக்கு திறன்மேம்பாட்டுத் தொழிற்பயிற்சி வழங்கப்படும். 10 மாதப் பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ.25,000 உதவித் தொகை வழங்கப்படும்.

**மாதம் ரூ.4,000 நிதியுதவி**

4. இந்தியா முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 50 இலட்சம் முதல் 60 இலட்சம் வரையிலானவர்கள் பட்டப்படிப்பை முடித்து வேலைவாய்ப்புச் சந்தைக்கு வருகின்றனர். அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர மாநில அரசுகளுடன் இணைந்து பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும்படி மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.
5. இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்து, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து குறைந்தது 3 ஆண்டுகள் வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு மாதம் ரூ.4,000 நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டம் மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுத்தப்படும்.
6. இளைஞர்கள் வேலைவாய்ப்பை எளிதாகப் பெறுவதற்கு உதவும் வகையில், கல்வித் திட்டம் மாற்றி அமைக்கப்படும். தொழில் கல்வி மற்றும் பயிற்சி, தொழில் முனைவோர்

மேம்பாடு ஆகியவை பள்ளி மற்றும் உயர்கல்விப் பாடத்திட்டங்களில் ஒருங்கிணைக்கப்படும்.

7. இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதினால் மட்டுமே வேலை வாய்ப்புகளைத் தர இயலும் என்பதை உணர்ந்து, பொது அறிவு, கணினி அறிவு, ஆங்கிலத்தில் நன்றாகப் பேசும் திறன் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் பங்கேற்கும் திறன் ஆகியவற்றை இளைஞர்கள் பெற மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

8. சொந்தமாகத் தொழில் தொடங்க விரும்பினால், அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும், கடனுதவியும், தேவையான பிற வசதிகளும் கிடைப்பதற்கும் பா.ம.க. பாடுபடும்.

# 11 மகளிருக்கு மாதம் ரூ.3,000 உரிமைத் தொகை முதியோர் ஓய்வூதியம் ரூ.3,000ஆக உயர்த்தப்படும்

இந்திய மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் பெண்கள் தான். ஆக்கும் சக்தியாகவும், காக்கும் சக்தியாகவும் திகழ்பவர்கள் அவர்கள் தான். ஆனால் அவர்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழும் சூழல் இந்தியாவின் பெரும்பான்மையான மாநிலங்களில் இல்லை என்பதே உண்மை. இந்த நிலையை மாற்றி மகளிருக்கு அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்.

60 வயதுக்கும் மேற்பட்ட மூத்தோரைச் சுமையாகக் கருதும் நிலை காணப்படுகிறது. அவர்கள், அவர்களின் பணி செய்யும் காலத்தில் நாட்டிற்காகவும், வீட்டிற்காகவும் உழைத்துக் களைத்தவர்கள். 60 வயதுக்குப் பிந்தைய ஓய்வுக் காலத்தில் அவர்கள் அனைத்து மரியாதையுடனும், கவுரவத்துடனும் வாழ வகை செய்து தரவேண்டியது அரசு மற்றும் சமூகத்தின் தவிர்க்க முடியாத கடமை ஆகும்.

**மகளிர் நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.3,000 உரிமைத் தொகை வழங்கப்படும். இத்திட்டம் மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுத்தப்படும்.
2. மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்றோருக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.3,000ஆக உயர்த்தப்படும்.
3. விலைவாசி உயர்வால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க நியாய விலைக் கடைகள் மூலம் உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகள் மானிய விலையில் வழங்கப்படும்.

**மகளிருக்கு அதிகாரம்**

4. நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்க அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் 2029ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.
5. உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கான இடஒதுக்கீட்டை இப்போதுள்ள 33 விழுக்காட்டில் இருந்து 50 விழுக்காடாக உயர்த்தவும், அதற்கான அரசியல் சட்டத் திருத்தங்களை நிறைவேற்றவும் பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும்.
6. மத்திய அரசின் உயர்கல்வி நிறுவன மாணவர் சேர்க்கை, மத்திய அரசு மற்றும் பொதுத் துறை நிறுவன வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்குவதற்கு பா.ம.க. வலியுறுத்தும்.

7. பொதுத்துறை வங்கிகளில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாங்கிய கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்யப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

8. மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டத்திலும் 50% தொகை பெண்களுக்காகச் செலவிடப்படும். இந்த விவரங்கள் அடங்கிய பாலின நிதிநிலை அறிக்கை நாடாளுமன்றத்திலும், மாநிலச் சட்டப்பேரவைகளிலும் ஆண்டுதோறும் தாக்கல் செய்யப்படும்.

9. மத்திய அரசால் வழங்கப்படும் கருவுற்ற பெண்களுக்கான மகப்பேறு கால மருத்துவ உதவி தற்போதுள்ள 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.

### திருமணத்திற்குப் பெற்றோர் ஒப்புதல்

10. சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், ஜப்பான், பிரேசில் உள்ளிட்ட நாடுகளில் இளம் வயதினரின் திருமணத்திற்குப் பெற்றோரின் ஒப்புதல் கட்டாயம் என்கிற விதி நடைமுறையில் உள்ளது. இந்தியாவில் கர்நாடக உயர்நீதிமன்றமும் இதனை வலியுறுத்தியுள்ளது. மிக இளம் வயதில் நாடகக் காதலால் இளம் பெண்கள் ஏமாற்றப்படுவதைத் தடுக்கவும், குடும்ப அமைப்பைக் காக்கும் வகையிலும், வளரிளம் பருவத்தினரின் எதிர்கால நலன் காக்கவும் 21 வயதுக்குக் கீழானவர்களின் திருமணத்திற்கு இருதரப்புப் பெற்றோரின் ஒப்புதலைக் கட்டாயமாக்க வழி செய்வோம்.

11. இளம் பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத சூழல் அதிகரித்து வருகிறது. குடும்ப முன்னேற்றம் மற்றும் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு பள்ளி, கல்லூரிகளுக்கும், வேலைக்கும் செல்லும் பெண்கள் ஆபாச அர்ச்சனைகளாலும், பாலியல் அத்துமீறல்களாலும் பாதிக்கப்படுகிறார்கள். பள்ளி, கல்லூரி செல்லும் மாணவிகள் ஆசை வார்த்தை கூறி அறியாத வயதில் ஏமாற்றப்பட்டு, மோசம் செய்யப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாலியல் சீண்டல்களையும், வன்கொடுமைகளையும் அடியோடு ஒழிக்கவும், பெண்கள் முழுமையான பாதுகாப்புடன் வாழும் சூழலை உருவாக்கவும் பாடுபடுவோம்.

### பெண் குழந்தைகளுக்கு ரூ.10 இலட்சம்

12. பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைந்து வருவதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு என்றாலும்கூட, மிக முக்கியமான காரணம் பெண் குழந்தைகளைச் சுமையாக பெற்றோர் கருதுவதுதான். இந்த நிலையை மாற்றவும், பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும், ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் அவர்களின் 18ஆவது வயதில் ரூ. 10 இலட்சம் கிடைக்கும் வகையில் ஒரு தொகை அவர்கள் பெயரில் வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்யப்பட வேண்டும் என பா.ம.க. வலியுறுத்தும். இந்தப் புரட்சிகரத் திட்டத்தை மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்த முடியும்.

13. நிதிநிலை அறிக்கையில் "குழந்தைகள் நிதிநிலை அறிக்கை"யை உள்ளடக்க வலியுறுத்துவோம். இதன் மூலம் இந்திய அரசின் நிதி ஒதுக்கீட்டில் 10% குழந்தைகளுக்காக ஒதுக்கப்படவும், அனைத்துத் துறைகளின் திட்டங்களில் குழந்தைகள் நலன் உரிய அளவில் இடம்பெறவும் பா.ம.க. வலியுறுத்தும்.

14. தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆரம்ப சுகாதார உரிமையை அடிப்படை உரிமையாக்கப் பாடுபடுவோம். ஊட்டச்சத்து, நலவாழ்வுப் பரிசோதனையை, நோய்த்தடுப்பு மருந்துகள், மழலைக் கல்வி, சுகாதாரக் கல்வி உள்ளிட்ட அனைத்துக் குழந்தைகள் நலத்திட்டங்களையும் வலிமையாக்கவும், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை அறவே ஒழிக்கவும் பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

15. கட்டணமில்லாக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை முழுவதுமாகச் செயல்படுத்த பாடுபடுவோம். கல்வி உரிமைக்கான வயது 6 – 14 என்று இருப்பதை 0 – 18 என மாற்ற பா.ம.க. வலியுறுத்தும்.

## குழந்தைகளுக்கான நீதி

16. எத்தனை வயது வரையிலானவர்கள் குழந்தைகளாகக் கருதப்படுவர் என்பது குறித்த வரையறை போக்சோ சட்டம், குழந்தைத் தொழிலாளர் சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டங்களில் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. இதை மாற்ற 18 வயது வரை உள்ளவர்கள் குழந்தைகள் என்று அறிவிக்கப்படுவர். இதற்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் செய்யப்படும்.

17. போக்சோ சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்குகளில் பெண் குழந்தைகளுக்கு நீதி கிடைப்பதில்லை. பெரும்பான்மையான குற்றவாளிகள் தப்பி விடுகின்றனர். இந்த நிலையை மாற்ற போக்சோ வழக்குகளை கண்காணிக்க மாவட்ட அளவில் சிறப்புக் கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

18. பெண் குழந்தைகளிடையே விளையாட்டை ஊக்குவிக்கத் தமிழ்நாட்டில் வசதிகள் இல்லை. விளையாட்டில் பெண்கள் சிறந்து விளங்குவதை உறுதி செய்யப் பெண் குழந்தைகளுக்கான தனி விளையாட்டுத் திடல்கள் அமைக்க பா.ம.க பாடுபடும்.

19. பள்ளிகளில் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்யக் குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை உருவாக்கப்படும். பள்ளிகளுக்கு வெளியே குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை வகுத்து செயல்படுத்தப்படும்.

20. குழந்தைகளுக்கு ஆளுமைக் கல்வி, இணையப் பாதுகாப்புக் கல்வி ஆகியவற்றைப் பள்ளிகளில் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.


18 வயதுக்குக் கீழ் உள்ளவர்கள் குழந்தைகளாகக் கருதப்படுவார்கள்

### கைம்பெண்கள் நலன்

21. சமூகத்தில் கைம்பெண்கள் மரியாதைக் குறைவாக நடத்தப்படுவதைத் தடுக்கக் கைம்பெண்கள் பாகுபாடு மற்றும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று பா.ம.க. வலியுறுத்தும்.

22. ஆதரவற்ற கைம்பெண்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

23. அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ள பகுதிகளில், மாநில அரசுகளின் மூலமாக, ஆதரவற்ற கைம்பெண்களுக்குத் தலா ஒரு ஏக்கர் நிலம் வழங்க மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.

### திருநங்கையர் நலன்

24. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் திருநங்கையர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படும். திருநங்கையர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பு மூலம் உறுதி செய்த பிறகு, இடஒதுக்கீட்டின் அளவு தீர்மானிக்கப்படும்.

25. குடும்பத்தைப் பிரிந்து வாடும் திருநங்கையர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு வசதியாக விடுதிகள் அமைத்துத் தரப்படும்.





# 12 அரசு ஊழியர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டம் விரைவில் 8ஆவது ஊதியக்குழு அமைப்பு

இந்தியாவில் அரசு இயந்திரம் சுமூகமாகச் செயல்படுகிறது என்றால், அதற்கான முதன்மைக் காரணம் அரசு ஊழியர்கள் தான். பணிபுரிவதற்குத் தகுதியான வயதில் அவர்கள் அளித்த உழைப்புக்கு அரசும் மக்களும் செலுத்தும் மரியாதை என்பது, ஓய்வுக்குப் பிறகு அவர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியம் தான். நிதி நெருக்கடி என்ற பெயரால் ஓய்வூதியம் மறுக்கப்படக் கூடாது.

அரசு அலுவலர்களைப் போலவே தனியார் நிறுவனங்களில் செயல்படும் தொழிலாளர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு வழங்கப்படுவதுடன், அவர்கள் பாதுகாப்பான சூழலில் பணி செய்வதும் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே பாட்டாளி மக்கள் கட்சி கடந்த பல பத்தாண்டுகளாகப் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறது.

**அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. அரசு ஊழியர்களின் ஓய்வுக்குப் பிந்தைய சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், இப்போதுள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.

2. மத்திய அரசு ஊழியர்களின் ஊதிய விகிதத்தை மாற்றி அமைப்பது குறித்துப் பரிந்துரைக்க உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் 8ஆவது ஊதியக் குழு அமைக்கப்படும்.

3. அரசு ஊழியர்கள் மற்றும் அமைப்புசார்ந்த நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்படும் வருங்கால வைப்பு நிதிக்கு 10% ஆண்டு வட்டி வழங்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

**தொழிலாளர் நலன்**

4. தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கத் தேவையான அனைத்துத் தொழிலாளர் நலச் சட்டங்களையும் இந்திய அரசு சீரமைக்க வேண்டும். அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு, திறன் உற்பத்தி, சம்பள முறைகள், ஓய்வூதிய முறைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இந்தச் சட்டங்கள் அமைய வேண்டும் என்று பா.ம.க. வலியுறுத்தும்.

5. தொழிலாளர் நிர்வாக உறவுகள், கூட்டு முயற்சியோடும், கருத்தொற்றுமையோடும் பராமரிக்கப்பட வேண்டும். தொழிலாளர் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளிலும் தொழிற்சாலை உரிமையாளர், தொழிற் சங்கம் ஆகியவற்றோடு முத்தரப்புப் பேச்சு நடத்தி, மத்திய அரசு உதவி செய்வதை உறுதி செய்ய பா.ம.க. பாடுபடும்.



**பஞ்சாலைத் தொழிலாளர் நலன்**

6. பஞ்சாலைகள் மற்றும் ஆயத்த ஆடைத் தொழிற்சாலைகளில் கொத்தடிமை முறையை ஒழிக்கவும், 480 நாட்கள் பணியாற்றியவர்களுக்குப் பணி நிலைப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

7. அனைத்து நிலைத் தொழிற்சாலைகளிலும் 7ஆவது ஊதியக்குழுப் பரிந்துரைத்துள்ள சமவேலைக்குச் சமஊதியம் என்ற அடிப்படையில், குறைந்தபட்ச மாத ஊதியமாக ரூ.18,000 நிர்ணயிக்கப்படுவதை மத்திய – மாநில அரசுகளின் மூலம் பா.ம.க. உறுதி செய்யும்.

# 13 மாநிலப் பட்டியலில் கல்வி பள்ளிக் கல்விக்கு அதிக நிதி

இந்தியா விடுதலை அடைந்த போது, பொருளாதார அடிப்படையில் மிகவும் பின்தங்கி இருந்தது. உலகில் அதிக மக்கள்தொகை கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியா 2ஆவது இடத்தில் இருந்தாலும், உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் அடிப்படையில் இந்தியாவின் தரவரிசையைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலைக்கு மிக மிகப் பின்தங்கியிருந்தது. ஆனால், விடுதலை அடைந்து 76 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்ட நிலையில், உலகப் பொருளாதார வல்லரசுகள் பட்டியலில் அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக 5ஆவது இடத்தை இந்தியா பிடித்திருப்பதற்கான காரணம், இந்தியாவின் பெரும்பான்மையான மக்களுக்குக் கல்வியும், தொழில் பயிற்சியும் வழங்கப்பட்டதே.

இந்தியாவில் அனைவருக்கும் கல்வி வழங்கப்படும் போதிலும், அந்தக் கல்வி தரமானதாகவும், சமச்சீரானதாகவும் இல்லை. இந்த நிலையை மாற்றி, அனைவருக்கும் சுகமான, சுமையற்ற, விளையாட்டுடன் கூடிய தரமான கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களின் கனவு ஆகும். அதற்கு 1975ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தது போன்று கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டியது கட்டாயம்.

இந்தியாவில் கல்வியின் தரத்தை உயர்த்தவும், கல்விக்கான நிதி அதிக அளவில் ஒதுக்கப்படுவதையும் உறுதி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பாமக மேற்கொள்ளும்.

**பள்ளிக் கல்விக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்**

1. கல்வி பொதுப்பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படும். அதே நேரத்தில், கல்வித் துறையில் புரவலர் என்ற வகையில் மட்டும் மத்திய அரசின் பங்களிப்பு தொடர நடவடிக்கை எடுக்கப்படும்.

2. வடக்கு ஐரோப்பிய நாடுகளில் வழங்கப்படுவது போன்று உலகத்தரம் வாய்ந்த கல்வியை, முழுக்க முழுக்க அரசின் செலவில் இலவசமாக வழங்கப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும். இதற்கான செலவை மத்திய, மாநில அரசுகள் குறிப்பிட்ட விகிதாச்சார அளவில் பகிர்ந்து கொள்ள வகை செய்யப்படும்.

3. நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 6 விழுக்காடு பள்ளிக்கல்விக்காக ஒதுக்கப்படுவது உறுதி செய்யப்படும். மத்திய, மாநில அரசுகள் இணைந்து இந்தச் செலவைப் பகிர்ந்து கொள்ளத் திட்டம் வகுக்கப்படும்.

4. தமிழ்நாட்டில் சமச்சீர்க் கல்வி முறையை மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பாடத்திட்டத்திற்கு இணையாகத் தரம் உயர்த்த அனைத்து உதவிகளையும் மத்திய அரசின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### கல்விக் கட்டமைப்புக்கு மானியம்

5. தமிழ்நாட்டில் புதிய பள்ளிகளை அமைக்கவும், பள்ளிகளில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பாடங்களை நடத்துவதற்கும் தேவையான நிதியில் 50 விழுக்காட்டை மானியமாக வழங்கும்படி மத்திய அரசை வலியுறுத்துவோம்.

6. அரசு மற்றும் தனியார்ப் பள்ளிகளில் இடஒதுக்கீட்டைக் கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7. அனைத்துப் பள்ளிகளிலும் தாய்மொழி வழிக்கல்வி ஊக்குவிக்கப்படும். மாணவர்களிடம் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிக்கும் நோக்குடன் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தச் சிறப்புப் பயிற்சி அளிக்கவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

8. தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்ள வசதியாக, 11ஆம் வகுப்பிலிருந்தே விருப்பமுள்ள மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகளை இலவசமாக நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### ஆசிரியர் தகுதித் தேர்வு - ஆசிரியர் பயிற்சி

9. ஆசிரியர் பணிக்கான தகுதித் தேர்வு கற்பித்தல் முறையை எந்த வகையிலும் மேம்படுத்தவில்லை என்பது ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. எனவே, தகுதித் தேர்வு முறையை ரத்து செய்யும்படி, மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

10. தரமான ஆசிரியர் பயிற்சிப் பாடத்திட்டம்தான் தரமான ஆசிரியர்களை உருவாக்குவதற்கான அடிப்படை ஆகும். அதை உணர்ந்து, உலக அளவிலான அனுபவங்களின் அடிப்படையில் ஆசிரியர் பயிற்சிப் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தும்படி பா.ம.க. வலியுறுத்தும்.

11. ஆசிரியர் பயிற்சிக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படும். பணியில் சேர்வதற்காகப் பயிற்சி பெறுவது மட்டுமின்றி, பணியில் சேர்ந்த பிறகும், பணிக்காலம் முழுவதும் ஆசிரியர்களுக்குத் தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு, அதன்அடிப்படையில், அவர்களின் அறிவும், திறனும் வளர்க்கப்படும்.

### கிராமங்களில் ஆசிரியர் குடியிருப்புகள்

12. கிராமப்புறங்களில் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் தடையாக இருப்பது ஆசிரியர்கள் பணிக்கு வராதது தான். தொலை தூரங்களிலும், மலைப் பகுதிகளிலும் உள்ள பள்ளிகளுக்கு வர ஆசிரியர்கள் தயங்குகின்றனர். இந்த நிலையை மாற்றும் நோக்குடன், தொலைதூரங்களிலும், மலைக் கிராமங்களிலும் உள்ள பள்ளிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஆசிரியர் குடியிருப்புகளும், போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

# 14 நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களிலும் இடஒதுக்கீடு: கல்விக் கடன் தள்ளுபடி

இந்தியா உலகின் பொருளாதார வல்லரசாகவும், ராணுவ வலிமை மிகுந்த நாடாகவும் உருவெடுத்துள்ள போதிலும், உயர் கல்வியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறவில்லை. உலகின் முன்னணிக் கல்வி நிறுவனங்கள் 250–இல் ஒன்றுகூட இந்தியாவில் இல்லை என்பது வருத்தமளிக்கிறது.

இந்தியா விடுதலையடைந்து 76 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்ட நிலையில், இந்தியாவின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 28.4% என்ற மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. இந்தியாவின் எந்த மாநிலத்திலும் உயர்கல்வி மாணவர் சேர்க்கை 50 விழுக்காட்டை எட்டவில்லை. இதற்குக் காரணம் இந்தியாவில் உயர்கல்வி கற்பது மிக அதிகச் செலவு பிடிக்கும் ஒன்றாக இருப்பது தான்.

இந்தியாவில் உயர்கல்வி நிறுவனங்களை அதிக அளவில் தொடங்குவது; உயர் கல்வியில் சமூக நீதியை நிலைநிறுத்துவது; ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்குவது ஆகியவற்றின் மூலம் இந்த நிலையை மாற்றுவதற்குப் பாட்டாளி மக்கள் கட்சி உறுதிபூண்டிருக்கிறது.

**உயர்கல்வி தொடர்பான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

**ஏழைகளுக்கு உயர்கல்வி இலவசம்**

1. உயர்கல்வி கற்பதற்காகப் பொதுத்துறை வங்கிகளில் மாணவர்கள் பெற்ற கல்விக் கடன்களைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

2. ஏழைகளும் அதிக எண்ணிக்கையில் உயர்கல்வி பயில்வதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவச உயர்கல்வி வழங்கப்படும். தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இதனால் ஏற்படும் இழப்பை அரசு ஈடுகட்டும்.

**மாணவர்கள் ஆணையம்**

3. ஒவ்வொரு மாநிலத்திலும் அமைந்துள்ள தொழிற்சாலைகள், இயற்கை வளங்கள், தோட்டக்கலை, விவசாயம் ஆகியவற்றை கணக்கில் கொண்டு, அவற்றுக்குத் தேவையான மனித வளங்களை வழங்கும் வகையில், புதிய உயர் கல்வி நிறுவனங்கள் தொடங்கப்படும். இவற்றில் பயிலும் மாணவர்களுக்குத் தொழில் சார்ந்த நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

4. இந்தியாவின் எதிர்காலத் தூண்களாக கருதப்படும் மாணவர்களின் நலன்கள் அனைத்து நிலைகளிலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி விரும்புகிறது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டாலோ, கல்விக் கட்டணம் அல்லது நன்கொடை என்ற பெயரில் மாணவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டாலோ அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகத் தேசிய மாணவர்கள் ஆணையம் அமைக்க பா.ம.க. பாடுபடும்.

5. வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் உயர்கல்வி பயிலும் தமிழக மாணவர்கள் மர்மமான முறையில் உயிரிழப்பது அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்கும் வகையில், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### நுழைவுத் தேர்வுகள் ரத்து

6. மருத்துவப் படிப்புக்குத் தேசிய அளவில் பொது நுழைவுத் தேர்வு (NEET) நடத்துவதை இரத்து செய்யப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும். ஏதேனும் மாநிலங்கள் விரும்பினால் மட்டும் அவை நுழைவுத் தேர்வு நடத்திக்கொள்ள அனுமதி அளிக்கப்படும்.

7. நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள், தனியார் கல்லூரிகளில் இடஒதுக்கீட்டு முறையை நடைமுறைப்படுத்த பா.ம.க. போராடும். மாணவர் சேர்க்கையில் இடஒதுக்கீட்டு முறை அறிமுகம் செய்யப்படும்.

8. தமிழகத்தில் உள்ள ஐ.ஐ.டி., ஐ.ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., மத்தியப் பல்கலைக் கழகம், தேசியச் சட்டப் பள்ளி உள்ளிட்ட மத்தியக் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் 50% இடங்களை மாநில ஒதுக்கீடாக வழங்க வேண்டும் என பா.ம.க. வலியுறுத்தும்.

### தமிழ்நாட்டில் புதிய உயர்கல்வி நிறுவனங்கள்

9. சென்னையில் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (Indian Institute of Science Education and Research - IISER) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10. தமிழ்நாட்டில் ஐ.ஐ.டி. எனப்படும் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்கு இணையாக டி.ஐ.டி. என்ற பெயரில் தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படும். விழுப்புரம், சேலம், மதுரை ஆகிய நகரங்களில் இந்த நிறுவனங்கள் மாநில அரசின் சார்பில் மாநில அமைப்புகளாக உருவாக்கப்படும். இதற்குத் தேவையான நிதியில் 50%–ஐ மத்திய அரசு மானியமாக வழங்கும்.

11. நான்காம் தொழில் புரட்சி காரணமாக வேலைவாய்ப்புச் சந்தையில் தலைகீழ் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்பதால், அதை எதிர்கொள்வதற்குத் தேவையான மனிதவளத்தை உருவாக்கும் நோக்கில் உயர்கல்வியில் மாற்றங்கள் செய்யப்படும்.

# 15 அனைவருக்கும் இலவச மருத்துவம் மருத்துவக் கல்லூரி தொடங்கத் தடை நீக்கம்

இந்தியாவில் மருத்துவத்துறையின் செயல்பாடுகளை, பாட்டாளி மக்கள் கட்சியின் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் மத்திய சுகாதாரத்துறை அமைச்சராக இருந்து செயல்படுத்திய திட்டங்களின் அடிப்படையில், மருத்துவர் அன்புமணி இராமதாசுக்கு முன், மருத்துவர் அன்புமணி இராமதாசுக்குப் பின் என இரு வகையாகப் பிரிக்க முடியும். மருத்துவர் அன்புமணி இராமதாஸ் காலத்தில் மருத்துவக் கட்டமைப்புக்கள் மிகப் பெரிய அளவில் வலுப்படுத்தப்பட்டன. ஆனாலும் அவரது காலத்திற்குப் பிறகு இந்தியாவில் தொற்றா நோய்களின் தாக்கம் தீவிரமடைந்துள்ள நிலையில், அதற்கேற்ற வகையில் மருத்துவக் கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் புதிய நோய்கள் ஏற்படுவதும், அதனால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவதும் வாடிக்கையான ஒன்றாகிவிட்டது. இவற்றைச் சமாளிக்கும் வகையில் புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த வேண்டிய சவால் ஏற்பட்டுள்ளது.

**மருத்துவத் துறைக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. இந்தியாவில் அனைவருக்கும் இலவச மருத்துவ சேவை வழங்கப்படும். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அனைவரையும் சேர்ப்பதன் மூலம் இந்த இலக்கு எட்டப்படும்.
2. இந்தியாவில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கும், மாணவர் சேர்க்கை இடங்களை அதிகரிப்பதற்கும் தேசிய மருத்துவ ஆணையம் விதித்துள்ள தடை நீக்கப்படும். போதிய கட்டமைப்பு வசதிகளுடன் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அனுமதி அளிக்கப்படும்.
3. தமிழ்நாட்டில் 20 மாவட்டங்கள் உட்பட நாடு முழுவதும் 300 புதிய மருத்துவக் கல்லூரிகள் மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசுகளுடன் இணைந்து தொடங்கப்படும்.
4. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அனைத்து மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகளும் தொடங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

**கூட்டுறவு மருத்துவக் கல்லூரிகள்**

5. நாடு முழுவதும் பொதுமக்கள் அமைப்புகளும், உள்ளாட்சி அமைப்புகளும் இணைந்து கூட்டுறவு முறையில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அனுமதி அளிக்கப்படும்.
6. கூட்டுறவு முறையில் தொடங்கப்படும் மருத்துவக் கல்லூரிகளில் 50% இடங்கள், அவற்றை உருவாக்கிய பொதுமக்கள் நல அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

7. அனைத்து வட்டத் தலைநகரங்களிலும் அறுவைச் சிகிச்சை வசதிகளுடன் கூடிய அரசு மருத்துவமனைகள் தொடங்கப்படும்.

8. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணிநேர அவசர முதலுதவி தரும் மருத்துவமனைகளாகப் படிப்படியாகத் தரம் உயர்த்தப்படும்.

**சென்னையில் புற்றுநோய் மருத்துவ மையம்**

9. சென்னையில் ரூ.1000 கோடி செலவில் தேசிய புற்றுநோய் மருத்துவ மையத்தை அமைக்கப் பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

10. புற்றுநோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சைக்குத் தனிக் கவனம் செலுத்தப்படும். புற்றுநோய் சிகிச்சைக்கு மிக அதிகச் செலவு பிடிப்பதால், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் புற்றுநோய்ச் சிகிச்சைக்காகத் தனி சுழல் நிதி நிறுவப்படும். இதன் மூலம் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஏழை – எளிய மக்களுக்குத் தரமான இலவசச் சிகிச்சை அளிக்க வலியுறுத்துவோம்.

11. கருவுற்ற பெண்களுக்கான மகப்பேறு கால நிதியுதவி தற்போதுள்ள ரூ.5 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்த பா.ம.க அழுத்தம் கொடுக்கும். மாநில அரசுகளுடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**நீட் தேர்வு இரத்து**

12. மருத்துவப் படிப்புகளுக்குத் தேசிய அளவில் நடத்தப்படும் நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்யப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

13. 108 ஆம்புலன்ஸ் சேவை விரிவாக்கப்படும், ஊர்திகள் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படும். தமிழகத்தின் எந்த மூலையையும் இந்த அவசர ஊர்திகள் 10 நிமிடங்களுக்குள் சென்றடையும்படி செய்யப்படும். அவசர ஊர்திகளில் தகுதி பெற்ற செவிலியர்கள் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்படும். அவசர ஊர்திகளில் அவசரச் சிகிச்சைக்கான கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். அவசர ஊர்தி ஓட்டுநர்களுக்கும், செவிலியர்களுக்கும் சிறப்பு முதலுதவிப் பயிற்சி அளிக்கப்படும்.

**தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தப் புதிய செயல்திட்டம்**

14. ஒரு காலத்தில் மிகப்பெரிய ஆபத்துகளாக இருந்த தொற்றுநோய்கள் இப்போது பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டு விட்டன. ஆனால், தற்போது தொற்றாத நோய்கள் மிகப்பெரிய ஆபத்தாக மாறி வருகின்றன. மனிதனின் பழக்க வழக்கத்திலும், வாழ்க்கை முறையிலும் ஏற்பட்டு வரும் நவநாகரிக மாற்றங்களால் இந்தப் பேராபத்து உருவெடுத்துள்ளது. தொற்றா நோய்களைப் கட்டுப்படுத்தத் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் முழுமையான பயனளிக்கவில்லை. இதைக் கருத்தில் கொண்டு, தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தப் புதிய செயல்திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

15. 1. இருதய நோய்கள், 2. நீரிழிவு, 3. புற்றுநோய், 4. மூச்சுக்குழல் நோய்கள் ஆகிய நான்கு வகையான தொற்றாத நோய்களே அதிகம் பாதிப்பினை ஏற்படுத்தும் நோய்களாக உருவெடுத்துள்ளன. 1. புகையிலை, 2. தவறான உணவுப் பழக்கம், 3. உடலுழைப்பு குறைதல், 4. மதுப்பழக்கம் – இவையே தொற்றாத நோய்கள் அதிகரிக்கக் காரணம் என உலக நலவாழ்வு அமைப்பு (WHO) கூறுகிறது. இத்தீய பழக்கங்களை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தி, தொற்றாத நோய்களை வருமுன் தடுக்கும் நோக்குடன் புதிய செயல்திட்டத்தைச் செயல்படுத்தப் பாட்டாளி மக்கள் கட்சி தீவிர அழுத்தம் கொடுக்கும்.

### நோய்த்தடுப்பு

16. ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மக்களிடம் பரப்புவதற்காகக் கிராமம் தொடங்கி நகரம் வரை அனைத்து ஊர்களிலும் பொதுமக்கள் நடைப்பயிற்சி செய்வதற்கும், உடற்பயிற்சிகள் செய்வதற்கும் திடல்கள் உருவாக்கப்படும்.

17. பள்ளிக்கூட மருத்துவப் பரிசோதனைத் திட்டத்தில் அனைத்துப் பள்ளிச் சிறார்களுக்கும் முழு உடல் பரிசோதனை செய்யப்படும். இதற்காக, அவர்களுக்கு மருத்துவ ஸ்மார்ட் அட்டை வழங்கப்படும்.

# 16 போதைப் பொருட்கள் ஒழிக்கப்படும் மாநிலங்களுக்கு மதுவிலக்கு மானியம்

இந்தியாவின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக இருப்பது மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் தான். மதுப் பழக்கம் காரணமாக இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 20 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். மது மட்டுமே இந்தியாவின் மிகப் பெரிய போதைப் பழக்கமாக இருந்துவந்த நிலை மாறி, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் இந்தியாவின் அனைத்துக் கிராமங்களிலும் இப்போது கிடைக்கத் தொடங்கியுள்ளன.

ஏழை மற்றும் நடுத்தர மக்களை மது மற்றும் கஞ்சா போதை ஆட்டிப்படைக்கிறது என்றால், மேல்தட்டு மக்கள், ஹெராயின், பிரௌன் சுகர், மெத்தம்பேட்டமைன், எல்.எஸ்.டி. உள்ளிட்ட பன்னாட்டுப் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி வருகின்றனர். நட்சத்திர விடுதிகளில் நடைபெறும் விருந்து நிகழ்ச்சிகளில் இத்தகைய போதைப் பொருட்கள் எந்தவித தடையும் இன்றிப் புழக்கத்தில் விடப்படுகின்றன.

மற்றொரு பக்கம், பன்னாட்டுப் போதைப் பொருட்களின் கடத்தல் மையமாகத் தமிழ்நாடு மாறி வருவது கவலையளிக்கிறது. மிகக் கடுமையான நடவடிக்கைகளின் மூலம் இந்தியாவில் போதைப் பொருட்கள் நடமாட்டத்தை ஒழிக்க வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

**மது, கஞ்சா, போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த பா.ம.க.வின் வாக்குறுதிகள்:**

1. மது மாநிலப் பட்டியலில் வருவதால், மாநில அரசுகள் தான் மதுவிலக்கை நடைமுறைப்படுத்த முடியும். இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தும்படி மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொள்ளும்.
2. மதுவிலக்கை நடைமுறைப்படுத்தும் மாநிலங்களுக்கு மிகப் பெரிய அளவில் வருவாய் இழப்பு ஏற்படும் என்பதுதான் மதுவிலக்குக்குத் தடையாக உள்ளது. இந்த நிலையை மாற்ற, மதுவிலக்கை நடைமுறைப்படுத்தும் மாநிலங்களுக்கு வருவாய் இழப்பு மானியம் வழங்க பா.ம.க. கேட்டுக்கொள்ளும்.
3. இந்தியாவின் கடலோர மாநிலங்கள் அனைத்திலும் போதைப் பொருள் கட்டுப்பாட்டு அமைப்பு வலுப்படுத்தப்படும். அம்மாநிலங்களில் மாநில அரசு, மாநிலக் காவல்துறையுடன் இணைந்து போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும்.
4. போதை மருந்துக் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கும் வகையில், சட்டத்திருத்தங்கள் செய்யப்படும்.
5. போதைப் பொருள் கடத்தலைத் தடுக்கத் தவறும் மாநிலங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**புகையிலை ஒழிப்பு**

6. பொது இடங்களில் புகைபிடிப்பதற்கு மருத்துவர் அன்புமணி இராமதாசு காலத்தில் விதிக்கப்பட்ட தடை மேலும் கடுமையாக்கப்படும். புகையிலைப் பொருட்களின் உறைகள் மீது 85% அளவுக்கு எச்சரிக்கைப் படங்கள் அச்சிடப்படுவதுடன், மீதமுள்ள 15% இடத்தில் தரப்பெயர் தனித்த அடையாளம் இல்லாத வகையில், பொதுவான எழுத்து வடிவில் அச்சிடப்படும் முறை (Plain Package) அறிமுகம் செய்யப்படும்.

7. உலக சுகாதார நிறுவனம் அளித்துள்ள M-Power செயல் திட்டத்தைப் பயன்படுத்தி, தமிழகத்தில் புகையிலைப் பொருட்கள் முற்றிலுமாக ஒழிக்கப்படும்.

8. அரசு மருத்துவமனைகளில் புகையிலை மீட்பு மையங்கள் அமைக்கப்படும். மருத்துவர்கள் அனைவரும் புகையிலைக்கு எதிரான விழிப்புணர்வை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவார்கள். கட்டணமில்லாத் தொலைபேசி வழியாகப் புகையிலை மீட்பு வழிகாட்டுதல் (Quit Lines) அளிக்கப்படும்.

9. புகையிலைப் பொருட்களின் விலையை அதிகரித்து, விற்பனையை குறைக்கும் நோக்குடன் 100% தீமை வரி விதிக்கப்படும்.

10. பள்ளிகள், கல்லூரிகளுக்கு 100 மீட்டர் சுற்றளவில் புகையிலைப் பொருட்கள் விற்கக் கூடாது என்ற விதியும், 18 வயது நிறைவடையாதவர்களுக்குப் புகையிலைப் பொருட்கள் விற்கக் கூடாது என்ற விதியும் கட்டாயமாகச் செயலாக்கப்படும்.



# 17 பொதுச் சேவை உரிமைச் சட்டம் ஆன்லைன் முறையில் சேவைகள்

அரசு நிர்வாகத்தில் ஊழல் அதிகரிப்பதற்கான முதன்மைக் காரணங்களில் ஒன்று சேவை வழங்குவதில் ஏற்படும் தாமதம் தான். இயல்பாகவே ஒரு சேவையைப் பெறுவதில் தாமதம் ஏற்படும் போது, அந்தச் சேவையை விரைவாகப் பெறுவதற்காகக் கையூட்டுக் கொடுக்க பயனாளிகள் விரும்புவார்கள். மற்றொருபுறம், அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்படும் சேவைகளைத் தாமதப்படுத்துவதன் மூலம், பயனாளிகளை நெருக்கடிக்குள்ளாக்கி, அவர்களிடம் இருந்து கையூட்டுப் பெற்றுச் சேவையை வழங்கும் நிலையை உருவாக்க அரசு ஊழியர்கள் முயலக்கூடும். இவை இரண்டுமே ஊழலுக்கு வழிவகுக்கும்.

மக்களுக்குச் சேவை வழங்க வேண்டியது அரசின் கடமை. அதன்படி, அனைத்து மக்களுக்கும் அரசின் அனைத்துச் சேவைகளும் குறித்த காலத்தில் இலவசமாகக் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

**நல்ஆளுகைக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. மத்திய அரசுத் துறைகளில் பொதுமக்களுக்குத் தேவையான சேவைகள் உடனுக்குடன் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், தேசிய அளவிலான பொதுச் சேவை பெறும் உரிமைச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

2. மத்திய அரசின் சேவைகளைப் பெறுவதற்காக அலுவலகங்களுக்கு நேரில் செல்வதைத் தவிர்க்கும் வகையில், இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும் முறை அறிமுகம் செய்யப்படும்.

3. மத்திய அரசு அலுவலகங்கள் அனைத்தும் மின் ஆளுமை முறையில் இணைக்கப்படும்.

**மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

4. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC), பணியாளர் தேர்வாணையம் (SSC) மற்றும் வங்கிப் பணியாளர் தேர்வாணையங்கள், தொடர்வண்டிப் பணியாளர் தேர்வாணையங்கள் உள்ளிட்ட தேர்வாணையங்களின் செயல்பாடுகள் வெளிப்படைத் தன்மை கொண்டவையாக அமைய வேண்டும் என்று பா.ம.க. விரும்புகிறது. அதற்கேற்ற வகையில், அந்த ஆணையங்களின் செயல்பாடுகளில் ஆக்கப்பூர்வமான திருத்தங்களை மேற்கொள்ளும்படி மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

# 18 ரூ.10 இலட்சம் வரை வரி இல்லை பணக்காரர்களுக்குக் கூடுதல் வருமான வரி

மத்திய அரசுக்கான வருவாய் வாய்ப்புகளில் முதன்மையானது நேரடி வரிகள் ஆகும். மக்களின் வருமானம் மீது விதிக்கப்படும் வரி தான் நேரடி வரிகளில் முதன்மையானது ஆகும். இந்திய மக்களின் 7.4 விழுக்காட்டினர் மட்டுமே வருமான வரிக் கணக்குகளை தாக்கல் செய்கின்றனர். வருமான வரி தாக்கல் செய்பவர்கள் அனைவரும் வருமான வரி செலுத்துவதில்லை. வருமான வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் அதிகபட்சமாக 5 இலட்சம் பேர் கூட இருக்க மாட்டார்கள்.

144 கோடி மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் அனைவருக்கும் தேவையான நலத்திட்டங்களைச் செயல்படுத்தவும், வளர்ச்சிக்கான கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், 5 லட்சம் பேர் மட்டும் அவர்களின் வருவாயின் ஒரு பகுதியைச் செலுத்துவது போதுமானதாக இருக்காது. மத்திய அரசின் நேரடி வரி வருவாயை அதிகரிக்க வேண்டுமானால், இந்தியாவில் வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். வருமான வரி விகிதங்கள் மிகவும் அதிகமாக இருப்பது தான் பலரும் வருமான வரி செலுத்தாமல் இருப்பதற்குக் காரணம் ஆகும். வருமான வரி விகிதங்களையும், வருமான வரி விலக்குக்கான உச்சவரம்பையும் மாற்றி அமைப்பதன் மூலம், வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். அதன் மூலம் மத்திய அரசின் நேரடி வருவாயையும் பெருக்க முடியும் என்று பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக நம்புகிறது. அதற்கான வரிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்படி மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

**வருமான வரிச் சீர்திருத்தங்கள் தொடர்பான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. இந்தியாவில் தற்போது புதிய வருமான வரி விகிதம், பழைய வருமான வரி விகிதம் என இரு வகையான வரி விகிதங்கள் உள்ளன. இதை மாற்றி ஒரே வருமான வரி விகிதங்கள் நடைமுறைப் படுத்தப்படும்.
2. தனிநபர் வருமான வரி விலக்கு வரம்பை ரூ.3 இலட்சத்தில் இருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தப்படும்.
3. ரூ.7 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரையிலான வருவாய்க்கு 5% வரி வசூலிக்கப்படும். வருமான வரிச் சட்டத்தின் 87ஆவது பிரிவின்படி ரூ.15,000 வரை வரி தள்ளுபடி அளிக்கப்படும் என்பதால், ரூ.10 இலட்சம் வரை வருவாய் ஈட்டுபவர்கள் அரசுக்கு வரி செலுத்தத் தேவையில்லை.
4. ரூ.10 இலட்சம் முதல் ரூ.15 இலட்சம் வரையிலான வருவாய்க்கு 10% வரி வசூலிக்கப்படும்.

5. ரூ.15 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் வரையிலான வருவாய்க்கு 20% வரி வசூலிக்கப்படும்.

6. ரூ.20 இலட்சம் முதல் ரூ.1 கோடி வரையிலான வருவாய்க்கு 30% வரி வசூலிக்கப்படும்.

7. ரூ.1 கோடிக்கும் கூடுதலான வருவாய்க்கு 50% வரி வசூலிக்கப்படும்.

8. தனிநபர்களின் சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில், அரசுப் பத்திரங்களில் செய்யப்படும் ரூ.3 இலட்சம் வரையிலான முதலீடுகளுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்படும்.

9. நாடு முழுவதும் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக அடுத்த சில ஆண்டுகளில் குறைந்தது ரூ.50 இலட்சம் கோடி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான நிதியைத் திரட்டக் குறைந்த வட்டியிலான உட்கட்டமைப்புப் பத்திரங்கள் வெளியிடப்படவுள்ளன. இந்தப் பத்திரங்களில் முதலீடு செய்யும் தொகைக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படும்.

# 19 ஜிஎஸ்டி வரி விகிதம் 2 அடுக்காகக் குறைக்கப்படும் பெட்ரோல், டீசலுக்கும் ஜிஎஸ்டி வரி

உலகின் பெரும்பான்மையான நாடுகள் மறைமுக வரிச் சீர்திருத்தங்களின் ஒரு கட்டமாக, மதிப்புக்கூட்டு வரி விகிதத்தில் இருந்து ஜிஎஸ்டி எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி முறைக்கு மாறி வருகின்றன. வழக்கமாக ஜிஎஸ்டி வரி முறை நடைமுறைப்படுத்தப்பட்ட சில ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றின் விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்படும். ஆனால், இந்தியாவில் ஜிஎஸ்டி வரி முறை நடைமுறைப்படுத்தப்பட்டு 7 ஆண்டுகள் ஆகியும் இன்னும் வரி குறைப்பு செய்யப்படவில்லை.

ஜிஎஸ்டி வரி விகிதத்தால் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க ஜிஎஸ்டி வரி விகிதங்களில் மாற்றங்களைச் செய்யவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தி வருகிறது. நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பு பாட்டாளி மக்கள் கட்சிக்குக் கிடைத்தால், ஜிஎஸ்டி வரிச் சீர்திருத்தத்தைச் சாத்தியமாக்கும்.

### ஜிஎஸ்டி உள்ளிட்ட மறைமுக வரிச் சீர்திருத்தங்களுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:

1. இந்தியாவில் தற்போதைய நிலையில் ஜிஎஸ்டி எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி 5%, 12%, 18%, 28% என 4 அடுக்குகளைக் கொண்டிருக்கிறது. இதை 2 அடுக்குகளாகக் குறைக்க பா.ம.க. வலியுறுத்தும்.
2. புதிய ஜி.எஸ்.டி. வரி விகிதங்கள் 10%, 25% என்ற அளவில் இருக்கும்.
3. இன்றைய நிலையில் 5% ஜி.எஸ்.டி. விகிதத்தில் உள்ள அனைத்துப் பொருட்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்படும்.
4. 12% மற்றும் 18% வரி விகிதத்தில் உள்ள பொருட்களின் மீதான ஜி.எஸ்.டி. வரி 10 விழுக்காடாகக் குறைக்கப்படும். அத்தியாவசியப் பொருட்கள் அனைத்துமே 10% வரி விதிப்பு அல்லது முழுமையான வரி விலக்குப் பிரிவில்தான் இருக்கும்.
5. இப்போது 28% வரி விகிதத்தில் உள்ள பொருட்கள் மீதான ஜி.எஸ்.டி. வரி 25 விழுக்காடாகக் குறைக்கப்படும். மகிழுந்துகள், ஆடம்பரப் பொருட்கள் உள்ளிட்டவை மட்டுமே இந்த வரி விதிப்புப் பிரிவில் இருக்கும்.
6. பெட்ரோல், டீசல் ஆகியவை ஜி.எஸ்.டி. வரி வரம்புக்குள் கொண்டுவரப்படும். ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் மீது வரியாக மட்டும் ரூ.50க்கும் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. இவை ஜி.எஸ்.டி. வரம்புக்குள் கொண்டுவரப்படும் போது லிட்டருக்கு ரூ.20 வரை குறையும்.
7. மது, புகையிலை உள்ளிட்ட மனித குலத்திற்குத் தீங்கை ஏற்படுத்தும் பொருட்கள் ஜி.எஸ்.டி. வரம்பிலிருந்து நீக்கப்படும். இவற்றுக்கு 100% வரை தீமை வரி வசூலிக்கப்படும்.

### தங்கம் மீதான வரி ரத்து

8. இந்திய கலாச்சாரத்தில் தங்கத்திற்கு முக்கியப் பங்கு உண்டு. ஏழைக் குடும்பங்களாக இருந்தாலும், அவர்களின் திருமணத்திற்குத் தங்கம் அவசியமாகும். ஆனால், தங்கத்தின் மீது 15% இறக்குமதி வரி விதிக்கப்படுவதால், தங்கம் விலை வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இந்த நிலையை மாற்றத் தங்கம் மீதான இறக்குமதி வரி முற்றுலுமாக ரத்து செய்யப்படும். இதனால், தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.6,000 வரை குறையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 20 தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவோம் வேலைவாய்ப்புகளைப் பெருக்குவோம்

2024ஆம் ஆண்டின் நிலவரப்படி, உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு இந்தியா ஆகும். இந்தியாவின் மக்கள்தொகை இந்தியாவை உலகின் மிகப்பெரிய சந்தையாக மாற்றுவதற்கு மட்டும் தான் உதவி செய்திருக்கிறதே தவிர, உள்நாட்டு உற்பத்தியையும், வேலைவாய்ப்புகளையும் பெருக்குவதற்கு எந்த வகையிலும் உதவவில்லை என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

இந்தியாவைவிட சுமார் 110 கோடி குறைவான மக்கள்தொகை கொண்ட அமெரிக்கா தான் உலகின் பொருளாதார வல்லரசாகத் திகழ்கிறது. இந்தியாவைவிட 2 கோடி குறைந்த மக்கள்தொகை கொண்ட சீனா, உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் அடிப்படையில் உலகில் 2ஆவது இடம் வகிக்கிறது. இந்தியாவைவிடக் குறைந்த மக்கள்தொகை கொண்ட ஜப்பானும், ஜெர்மனியும் கூட அதிக அளவுக்கு உற்பத்தி செய்கின்றன. ஆனால், இந்தியாவில் ஒட்டுமொத்த உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளது.

இதற்கான முதன்மைக் காரணம் இந்தியாவில் போதிய அளவில் தொழிற்சாலைகள் தொடங்கப்படவில்லை என்பதுதான். இந்தியா அடுத்த சில ஆண்டுகளில் உலகின் 3வது பொருளாதார வல்லரசாக வளரும் வாய்ப்பு உள்ளது. அதைக் கடந்து சீனாவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, உலகின் 2ஆவது பொருளாதார வல்லரசாக உருவெடுக்க வேண்டும் என்றால், மிகப் பெரிய தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதற்காக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க வேண்டும். இதற்கு மிகப் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் தான், இந்தியாவில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து, இந்திய மக்களின் வாழ்க்கைத்தரம் கணிசமான அளவில் அதிகரிக்கும்.

**தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்புப் பெருக்கம் குறித்த பாமகவின் வாக்குறுதிகள்:**

1. இந்தியாவில் வெளிநாட்டு முதலீட்டை இரட்டிப்பாக்கும் வகையில் புதிய கொள்கை தயாரித்து வெளியிடப்படும்.
2. இந்தியாவில் தொழில் தொடங்க முன்வரும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை மத்திய, மாநில அரசுகள் அதிகரிக்கும்.
3. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் நோக்குடன் சிறப்பான தொழில் கொள்கையை வகுத்துச் செயல்படுத்தும் மாநிலங்களுக்கு மத்திய அரசு சிறப்பு உதவிகளை வழங்கும்.
4. இந்தியாவின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் கிடைக்கும் மூலப் பொருட்கள், மனிதவளம் ஆகியவற்றின் அடிப்படையில் பிராந்தியம் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும்.

5. தொழில் துறையின் மனிதவளத் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன், புதிய தொழில் பயிற்சி மற்றும் தொழில்பயிற்சி நிறுவனங்கள் உருவாக்கப்படும். இந்த நிறுவனங்கள் தொழிற்சாலைகளுடன் இணைக்கப்பட்டு, பணியின்போதே பயிற்சி வழங்க பா.ம.க. வலியுறுத்தும்.

### சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள்

6. கனரகத் தொழில்கள் மூலம் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டாலும், அதற்கு இணையாக வேலைவாய்ப்புகள் பெருகுவதில்லை. வேலைவாய்ப்பை அதிகரிக்காத பொருளாதார வளர்ச்சி மக்களிடையே ஏற்றத்தாழ்வுகளையே ஏற்படுத்தும். இதைக் கருத்தில் கொண்டு, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களை மேம்படுத்தக் கொள்கை வகுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

7. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் தொடங்க முன்வருவோருக்குக் குறைந்த விலையில் நிலம், மிகக் குறைந்த வட்டியில் கடனுதவி உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படும்.

8. தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் கூட்டாக இணைந்து தொழில் தொடங்க முன்வரும் பட்சத்தில், அவர்களுக்கு வட்டியில்லாத கடன் வழங்கப்படும். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்களுக்கு மானியமும் வழங்க பா.ம.க. பாடுபடும்.

### வெளிநாடு வாழ் இந்தியர்கள் தொழில் தொடங்கச் சிறப்புத் திட்டம்

9. இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் அதிக அளவில் பணியாற்றுகின்றனர். வெளிநாடுகளில் ஈட்டிய பணத்தைக் கொண்டு அவர்கள் தங்களின் சொந்த மாநிலங்களில் தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புத் திட்டம் ஒன்றை சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு வகுத்துச் செயல்படுத்தும்.

### தொகுதிதோறும் சிறப்புப் பொருளாதார மண்டலம்

10. தொழில் வளர்ச்சியையும், வேலைவாய்ப்பையும் பரவலாக்குவதன் மூலமாகவே உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்ய முடியும். இதைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப் பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும். அந்த மண்டலத்தில் குறைந்தது 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### நான்காம் தொழில் புரட்சி

11. உலக அளவில் ரோபோடிக் தொழில் நுட்பம் (Robotics Technology), செயற்கை அறிவுத்திறன் (Artificial intelligence), இணைய உலகம் (The Internet), தானியங்கி வாகனங்கள் (Autonomous vehicles), முப்பரிமாண அச்சுமுறை (3D Printing), குவாண்டம் கணினியியல் (Quantum Computing), நவீன நானோ தொழில்நுட்பம் (Nano technology) உள்ளிட்ட புதிய தொழில் நுட்பங்கள் உலகம் முழுவதும் அறிமுகமாகி வருகின்றன. இவற்றின் அறிமுகம்தான் நான்காவது தொழில் புரட்சியாகப் பார்க்கப்படுகிறது. இந்தியாவில் நான்காம் தொழில் புரட்சி விரைவுபடுத்தப்படும்.

12. நான்காம் தொழில் புரட்சி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழில் நுட்பங்கள் காரணமாக, வேலைவாய்ப்பு இழப்பு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. இதனால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கும் வகையில் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மட்டுமின்றி, வேலைவாய்ப்புகளையும் பெருக்கப் புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும்படி மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

### பட்டாசு ஆலைகள்

13. பட்டாசு உற்பத்திக்கு உச்சநீதிமன்றம் விதித்துள்ள கட்டுப்பாடுகளால் பட்டாசு உற்பத்தியை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. தொழில்நுட்ப வல்லுநர்களின் கருத்துரை பெற்று இச்சிக்கலுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். பட்டாசு ஆலைகள், அவற்றின் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் நலன்களும் பாதுகாக்கப்படும்.

14. பட்டாசு ஆலை விபத்துக்களின் போது, தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை பா.ம.க. உறுதி செய்யும். தொழிலாளர்களுக்கு அனைத்து வகைக் காப்பீடுகளும் செய்யப்படுவது கட்டாயமாக்கப்படும்.

### ஊரகத் தொழில்துறை

15. அனைத்துத் தொழிற்சாலைகளும் நகர்ப்புறங்களைச் சார்ந்தே செயல்படுவதால், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு குறைகிறது. இதனால், ஊரகப் பகுதி மக்கள் வேலை தேடி நகர்ப்புறங்களுக்குச் செல்லும் நிலை உருவாகிறது. இதைத் தடுக்கும் வகையில், ஊரகப் பகுதிகளில் புதிய தொழில்களைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

16. சிறு, குறு தொழில்களைக் கிராமப்புறங்களில் தொடங்க முன்வருவோருக்கு 10% மானியம் வழங்க மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

17. கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சி பெருகப் பெரும் தடையாக இருப்பது கட்டமைப்புக் குறைபாடுகள்தான். இந்த நிலையை மாற்றி, ஊரகப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தப் பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகிக்கும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

### அமைப்புசாராத் தொழில் வளர்ச்சி

18. இந்தியாவில் உழைக்கும் வயதினரில் 90 விழுக்காட்டுக்கும் மேற்பட்டவர்கள் அமைப்புசாராத் தொழில்துறைகளில்தான் பணியாற்றுகின்றனர். வங்கிக் கடன் கிடைப்பதில் உள்ள சிக்கல், மூலப் பொருட்கள் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணங்களால் அமைப்புசாராத் தொழில்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றன. இந்த நிலையை மாற்றி, அமைப்புசாராத் தொழில்களுக்குத் தடையின்றிக் கடன் கிடைக்கவும், மூலப் பொருட்கள் வங்கி அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.





# 21 கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்படும் தொடர்வண்டித் திட்டங்கள் விரைவுபடுத்தப்படும்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முதன்மையான தேவை அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஆகும். இந்தியாவில் குறிப்பிடத்தக்க அளவில் கட்டமைப்பு வசதிகள் பெற்ற மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. ஆனாலும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு வசதி தேவையான அளவுக்கு இல்லை என்பதே உண்மை ஆகும். ஒட்டுமொத்த மாநில உற்பத்தி மதிப்பில் தேசிய அளவில் இரண்டாவது இடத்தில் உள்ள தமிழ்நாடு, முதலிடத்தைப் பிடிக்க வேண்டும் என்றால், தமிழ்நாட்டில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மத்திய தொடர்வண்டித் துறை இணையமைச்சர்களாக இருந்த காலத்தில் தமிழ்நாட்டிற்கு ஏராளமான தொடர்வண்டித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. ஆனால், அதன் பின் கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குப் பெரிய அளவில் தொடர்வண்டித் திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. அதுமட்டுமின்றி, 15 ஆண்டுகளுக்கு முன் பாமகவைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்குக்கூடப் போதிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. கடந்த இரு ஆண்டுகளாகத் தமிழகத்தின் தொடர்வண்டித் திட்டங்களுக்குச் சற்றுக் கூடுதலான நிதி ஒதுக்கப்படும் போதிலும், அது தேவைக்கு ஏற்றதாக இல்லை.

தமிழ்நாட்டின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பாட்டாளி மக்கள் கட்சி உறுதிபூண்டிருக்கிறது. இதைச் சாத்தியமாக்க அனைத்து வழிகளிலும் பாமக பாடுபடும்.

### தமிழ்நாட்டின் கட்டமைப்பு மேம்பாடு தொடர்பான பாமகவின் வாக்குறுதிகள்:

1. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அடுத்த 10 ஆண்டுகளில் ரூ.25 இலட்சம் கோடி தேவைப்படும். இதைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் இருந்து திரட்டுவதற்கு உதவவும், இதில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை மானியமாக வழங்கவும் மத்திய அரசிடம் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.
2. தமிழ்நாட்டில் போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் வகையில், புதிய சாலைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைப் பாட்டாளி மக்கள் கட்சி ஆதரிக்கும். இத்தகைய சாலைத் திட்டங்கள் அனைத்தும் பயன்பாட்டில் உள்ள வேளாண் விளை நிலங்கள் கையகப்படுத்தப்படாமல் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யப் பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

### எட்டு வழிச் சாலைகள்

3. சென்னையில் இருந்து திருச்சி வழியாகத் தென் மாவட்டங்களுக்குச் செல்லும் 45ஆம் எண் தேசிய நெடுஞ்சாலை இப்போது செங்கல்பட்டு வரை 8 வழிச் சாலையாகவும்,

திண்டிவனம் வரை 6 வழிச் சாலையாகவும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இச்சாலை முழுவதும் 8 வழிச்சாலையாக விரிவுபடுத்தப்படுவதுடன், அதன்மீது திண்டிவனம் வரை 6 வழி உயர்மட்டச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. திண்டிவனம் – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் அடுத்த ஓராண்டிற்குள் முடிக்கப்படும்.

5. சென்னை – சேலம் தேசிய நெடுஞ்சாலையில் உளுந்தூர்பேட்டை – சேலம் இடையிலான புறவழிச் சாலைகளை 4 வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகள் 2024ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

### தொடர்வண்டித் திட்டங்கள்

6. மருத்துவர் அன்புமணி இராமதாசு அவர்களின் இடைவிடாத முயற்சியால், அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்ட தருமபுரி – மொரப்பூர் இடையே புதிய தொடர்வண்டிப் பாதை அமைக்கும் பணிகளை ஓராண்டில் நிறைவேற்றி முடிக்க பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

7. தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் போதிய நிதி ஒதுக்காததால் செயல்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கும் அனைத்துத் தொடர்வண்டித் திட்டங்களுக்கும் போதிய நிதி ஒதுக்கீடு செய்து, விரைந்து செயல்படுத்தி முடிக்கப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

8. நீண்டகாலமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள கிழக்குக் கடற்கரையோரத் தொடர்வண்டிப் பாதை அமைக்கும் திட்டத்திற்குப் புத்துயிரூட்டப்படும். முதல் கட்டமாக, கூடுவாஞ் சேரியில் இருந்து மாமல்லபுரம், புதுச்சேரி வழியாகக் கடலூர் வரை புதிய பாதை அமைக்கப்படும்.

9. திருச்சி பொன்மலையில் புதிய தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10. தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொடர்வண்டிப் பாதைகளையும் தமிழ்நாட்டில் உள்ள தொடர் வண்டிக் கோட்டங்களின் நிர்வாக வரம்புக்குள் கொண்டு வர பா.ம.க. பாடுபடும்.

11. தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னேற வேண்டுமெனில் சென்னை – டெல்லி, சென்னை – மும்பை, சென்னை – கொல்கத்தா ஆகிய இடங்களுக்குத் தனி வர்த்தக ரயில் பாதை அமைக்கப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

12. தொடர்வண்டித் துறை சார்பில் தமிழகத்தில் வாய்ப்புள்ள இடங்களில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கப் பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

13. அனைவருக்கும் போதுமான பாதுகாப்பான குடிநீர் இலவசமாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்வதை முதன்மைப் பணியாகக் கொண்டு செயல்படுவோம்.

14. குடிநீர் ஒரு மனித உரிமை. தண்ணீர் விநியோகத்திற்கு விலை வைப்பதையோ, தண்ணீர் விநியோகத்தைத் தனியார் வசம் விடுவதையோ பா.ம.க. ஏற்காது. குடிநீர் வழங்கலைத் தனியார்மய மாக்குவதை எதிர்ப்போம்.

15. நிலத்தடி நீர், ஆற்றுநீர், ஏரி நீர் உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களில் இருந்து கிடைக்கும் நீரும் தனியார்மயமாக்கப்படாமல் தடுக்கப்படும். அனைத்து வகைத் தண்ணீர் ஆதாரங்களும் பொதுவில் இருப்பது உறுதி செய்யப்படும்.

### மின் திட்டங்களுக்கு நிதியுதவி

16. தமிழ்நாட்டில் 17 ஆயிரம் மெகாவாட் அளவுக்கான அனல்மின் திட்டங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முடங்கிக் கிடக்கின்றன. அவற்றைச் செயல்படுத்தப் பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

17. தமிழகத்தில் மின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசின் மூலம் வட்டி மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்றுத்தருவதற்குப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

18. தமிழ்நாட்டில் சூரியஒளி மற்றும் காற்றாலை மின்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு தமிழகத்தில் புதுப்பிக்க வல்ல எரிசக்தித் திட்டங்களைச் செயல்படுத்தும்படி மத்திய அரசை, பா.ம.க. வலியுறுத்தும்.

# 22 மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு இலங்கையுடன் ஒப்பந்தம் கையெழுத்து

தமிழ்நாடு எதிர்கொள்ளும் முதன்மையான 5 சிக்கல்களைப் பட்டியலிட்டால், அதில் சிங்களக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும், தாக்கப்படும் சிக்கல் முதன்மையாக இடம்பெறும். தமிழ்நாட்டில் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுச்சேரியின் காரைக்கால் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் வங்கக் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் போது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், கடற்கொள்ளையர்களால் தாக்கப்படுவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 40 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் இந்தச் சிக்கலுக்கு மத்திய, மாநில அரசுகளால் இன்றுவரை தீர்வு காணமுடியாதது வருத்தமளிக்கிறது.

இந்தியாவும் இலங்கைக்கும் இடையிலான கடல் பரப்பு மிகக் குறைவாக இருப்பதுதான் அனைத்துச் சிக்கல்களுக்கும் காரணமாகும். தமிழ்நாட்டு மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றால், மிக எளிதாக இலங்கைக் கடல் எல்லைக்குள் செல்வதும், இலங்கை மீனவர்கள் மீன்பிடிக்க வந்தால், இந்திய எல்லைக்குள் நுழைவதும் தவிர்க்க முடியாது. இதை உணர்ந்து, இரு தரப்பு மீனவர்களும் இந்தியா – இலங்கை இடையிலான கடல் எல்லையில் மீன்பிடிக்க வழி ஏற்படுத்தித் தருவதுதான் தீர்வு ஆகும். இத்தகைய தீர்வை எட்டவேண்டும் என்றுதான் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்துகிறது.

**மீனவர் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. இந்திய, இலங்கை வெளியுறவுத் துறை அதிகாரிகள் இடம்பெறும் கூட்டுப் பணிக்குழுவை (Joint Working Group) ஏற்படுத்தி, அதன் வாயிலாக இந்திய, இலங்கை அதிகாரிகள், இலங்கை மற்றும் தமிழக மீனவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுக்களை நடத்தி, இருதரப்பு மீனவர்களும் இந்திய, இலங்கைக் கடல் எல்லையில் முறைவைத்து மீன்பிடிக்கும் நடைமுறையை உருவாக்கப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

2. 1974ஆம் ஆண்டில் இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவை மீட்க பா.ம.க. பாடுபடும்.

**மீன் ஏற்றுமதி மண்டலம்**

3. கன்னியாகுமரி முதல் சென்னை வரை 1,076 கி.மீ. நீளத்திற்குத் தமிழகத்தின் கடலோரப் பகுதி நீள்கிறது. தமிழகத்தில் கிடைக்கும் மீனை ஏற்றுமதி செய்வதற்கு வசதியாகத் தமிழகத்தில் மீன் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

4. பிடிக்கப்பட்ட மீன்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வசதியாகக் குளிர்பதனக் கிடங்குகள் ஏற்படுத்தப்படும். உணவுப் பதனத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

5. வெளிநாடுகளில் மீன்பிடி தொழிலுக்காகச் செல்லும் மீனவர்களின் நலன் காக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

6. இலங்கைச் சிறைகளிலும், வளைகுடா நாடுகளின் சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களை மீட்க வெளியுறவுத்துறை மூலம் பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

# 23 தமிழ் இந்தியாவின் ஆட்சிமொழி தமிழ் உயர்நீதிமன்ற அலுவல் மொழி

“கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி” என்பது தமிழர்கள் மற்றும் தமிழ் மொழியின் பெருமையையும், தொன்மையையும் விளக்குகிறது. உலகின் பல நாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கும் போதிலும், இந்தியாவில் தமிழ் இன்னும் ஆட்சிமொழியாகவில்லை.

தமிழை இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக மாற்றுவதற்காக 1998 – 2004 வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் பாட்டாளி மக்கள் கட்சி மேற்கொண்ட முயற்சிக்கு ஓரளவு பலன் கிடைத்தாலும், இறுதி வெற்றி கைகூடவில்லை. 1998ஆம் ஆண்டு தமிழ் உள்ளிட்ட எட்டாவது அட்டவணை மொழிகள் அனைத்தையும் மத்திய அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, அப்போது எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றிருந்த 18 மொழிகளிலும் அழைப்பிதழ் அச்சிட்டு மிகப்பெரிய மாநாட்டைத் தில்லியில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்தியது. அம்மாநாட்டுக்கான அழைப்பிதழைக் கண்டு வியந்த அப்போதைய பிரதமர் வாஜ்பாய், தமிழை ஆட்சி மொழியாக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, எட்டாவது அட்டவணை மொழிகளை அலுவல் மொழியாக அறிவிப்பது குறித்துப் பரிந்துரைக்க 2003ஆம் ஆண்டில் வல்லுநர் குழு ஒன்றை வாஜ்பாய் அமைத்தார். ஆனால், அதன் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படாததால், அக்குழு செயலிழந்தது; அம்முயற்சி தோல்வியடைந்தது. 20 ஆண்டுகளுக்கு முன் கைநழுவிப் போன வெற்றியை இப்போது பெற்று, தமிழை ஆட்சிமொழியாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள பாமக உறுதிபூண்டிருக்கிறது.

**தமிழ்மொழி வளர்ச்சி தொடர்பான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ்மொழி உள்ளிட்ட 22 மொழிகளையும் இந்திய அரசு, ஆட்சிமொழிகள் ஆக்கிட வேண்டும். அதற்கான அரசியல் சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பாடுபடுவோம்.

2. இம்மொழிகளை ஆட்சி மொழியாக்குவது குறித்துப் பரிந்துரைப்பதற்காக 2003ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட குழு செயலிழந்துவிட்ட நிலையில், இது தொடர்பாகப் புதிய குழுவை அமைத்து அதன் பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவோம்.

3. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக மத்திய அரசால் வழங்கப்படும் நிதியை அதிகரிக்க பா.ம.க. வலியுறுத்தும்.

### உயர்நீதிமன்ற அலுவல் மொழி

4. சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானம் 06.12.2006 அன்று தமிழக சட்டப்பேரவையில் கொண்டுவந்து நிறைவேற்றப்படுவதற்குக் காரணமாக இருந்தது பாட்டாளி மக்கள் கட்சிதான். ஆனாலும், தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும் என்ற தமிழர்களின் கனவு இன்னும் நனவாகவில்லை. தமிழகச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாகத் தமிழை அறிவிக்கும்படி மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.

5. மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் பெயரைச் சென்னை உயர்நீதிமன்றம் என்று பெயர் மாற்றம் செய்யவும் பா.ம.க. போராடும்.

### போட்டித் தேர்வுகளில் தமிழ்

6. தேசிய அளவில் நடைபெறும் அனைத்துப் போட்டித் தேர்வுகள் மற்றும் நுழைவுத் தேர்வுகளையும் தமிழ் உள்ளிட்ட எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள அனைத்து மொழிகளிலும் எழுத அனுமதிக்கும்படி மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

### தமிழ்ப் பரப்புரை அவை

6. உலகமெங்கும் இந்தி மொழியைப் பரப்புவதற்காக இந்தி பிரச்சார சபா என்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதைப் போன்று, தமிழ் மொழியைப் பரப்புவதற்காகத் தமிழ்ப் பரப்புரை அவை என்ற அமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு உதவ வேண்டும் என்று மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

7. உலகின் முன்னணிப் பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகளை அமைக்க மத்திய அரசின் மூலம் நிதியுதவி வழங்குவதற்குப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

8. சென்னையில் செயல்பட்டு வரும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தை, முழுமையான பல்கலைக் கழகமாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகத் தமிழக அரசுக்கு அனைத்து உதவிகளையும் செய்யும்படி, மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.



# 24 திருக்குறள் தேசிய நூலாக்கப்படும்

இந்தியாவில் தமிழுக்கும், தமிழர்களுக்கும் அங்கீகாரம் பெற்றுத் தர வேண்டும் என்பதில் பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக உள்ளது. அதற்காகப் பல பத்தாண்டுகளாகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதில் பல வெற்றிகளையும் பா.ம.க. பெற்றிருக்கிறது.

தமிழையும், தமிழர்களையும் உயர்த்திப் பிடிக்கும் அணுகுமுறையைப் பாட்டாளி மக்கள் கட்சி தொடரும். அதற்காக நாடாளுமன்றத்திலும், மத்திய அரசிலும் தொடர்ந்து குரல் கொடுக்கும். தேசிய அளவிலும், உலக அளவிலும் தமிழுக்கும், தமிழர்களுக்கும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும்.

**வாக்குறுதிகள்:**

1. திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்தி, அந்த முயற்சியில் வெற்றி பெறுவோம்.

2. மாணவர்களின் மனம் கவர்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களின் பெயரில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்.

3. தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவர் என்ற பெருமைக்குரிய சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த ஊரான திருத்தணியில் மத்திய அரசின் சார்பில் மிகப்பெரிய அளவில் நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வாருக்குப் பெருமை சேர்க்கும் வகையில், மாநில அரசின் மூலமாக தஞ்சாவூரில் அவருக்கு மணி மண்டபம் அமைக்க பா.ம.க. பாடுபடும்.

5. மத்திய அரசின் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழுவின் கட்டுப்பாட்டில் திருச்சியில் செயல்பட்டு வரும் தேசிய வாழை ஆராய்ச்சி மையத்திற்கு நம்மாழ்வார் பெயர் சூட்டப்படும்.

6. இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழு மூலம் கண்டுபிடிக்கப்படும் புதிய நெல் வகைக்குப் பாரம்பரிய நெல் வகைகளை மீட்டெடுப்பதற்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்த நெல் ஜெயராமன் அவர்களின் பெயரைச் சூட்டப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

# 25 தமிழ்நாட்டின் பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றச் சிறப்புத் திட்டங்கள்

மனித உடலின் வளர்ச்சி என்பது தலை முதல் கால் வரை ஒரே சீராக இருக்க வேண்டும். தலை வளர்ந்து, கால் வளரவில்லை என்றாலோ, கால் வளர்ந்து தலை வளரவில்லை என்றாலோ அது ஊனமாகவே கருதப்படும். இது ஒரு நாடு அல்லது மாநிலத்தின் வளர்ச்சிக்கும் முழுமையாகப் பொருந்தும்.

தமிழ்நாட்டின் சில பகுதிகள் வளர்ச்சியின் உச்சத்தை அடைந்துள்ள நிலையில், வேறு சில பகுதிகளில் வளர்ச்சி எட்டிகூடப் பார்க்கவில்லை. சென்னை, கன்னியாகுமரி, கோவை உள்ளிட்ட சில மாவட்டங்கள் தான் மனித வாழ்நிலைக் குறியீடுகளில் எப்போதும் முன்னிலையில் உள்ளன. இதற்கு முற்றிலும் மாறாக, அனைத்து வட மாவட்டங்களும் கல்வியில் பின்தங்கியுள்ளன. ராமநாதபுரம், தேனி உள்ளிட்ட சில மாவட்டங்களும் வளர்ச்சியின் பயன்களை அனுபவிக்காமல் பின்தங்கிக் கிடக்கின்றன.

வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்திற்காகச் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தும் வழக்கம் இந்தியாவில் 50 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் உள்ளது. அதற்காகவே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 371 என்ற பிரிவு சேர்க்கப்பட்டு இருக்கிறது. இதைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்திற்காகச் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

**பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்திற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் மனித வாழ்நிலை குறியீட்டின் அடிப்படையில், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மாவட்டங்கள் அடையாளம் காணப்படும். அந்த மாவட்டங்களின் வளர்ச்சிக்காக சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

2. மாநிலத்திற்கு உள்ளேயே நிலவும் வேறுபாடுகளையும், வளர்ச்சிக் குறைபாடுகளையும் சரிசெய்ய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 371ஆவது பிரிவின்படி பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த முடியும். தமிழ்நாட்டில் பின்தங்கிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள மாவட்டங்களில் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வசதியாக 371 (K) என்ற தனிப்பிரிவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்க பா.ம.க. பாடுபடும்.

3. இந்தப் புதிய அரசியலமைப்புச் சட்டப்பிரிவைப் பயன்படுத்தி, 1. தமிழகத்தில் பின்தங்கிய பிராந்தியங்களுக்காகச் சிறப்பு மேம்பாட்டு வாரியம் அமைத்தல், 2. அரசுத் திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீட்டில் பின்தங்கிய பிராந்தியங்களுக்கு முன்னுரிமை அளித்தல்,

3. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பின்தங்கிய பிராந்திய மக்களுக்கு வாய்ப்பளித்தல் ஆகிய நடவடிக்கைகள் மத்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும்.

4. பின்தங்கிய மாவட்டங்களின் வளர்ச்சிக்காக நிதிஆயோக் அமைப்பு, முன்னேறத் துடிக்கும் மாவட்டங்கள் என்ற புதிய திட்டத்தைத் தயாரித்து, அதில் 115 மாவட்டங்களை இணைத்துள்ளது. எனினும், இத்திட்டத்தால் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்குப் பெரிய அளவில் எந்த உதவியும் கிடைக்காததால், இத்திட்டத்தைப் பின்தங்கிய மாவட்டங்களின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டத்துடன் இணைக்க வேண்டும் என பா.ம.க. வலியுறுத்தும்.

5. புதிய தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், வேலைவாய்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்தும்போது, பின்தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்க பா.ம.க. குரல் கொடுக்கும்.





# 26 கிராமங்களை வளர்த்தெடுப்போம்

இந்தியாவில் பஞ்சாயத்துராஜ் சட்டம், நகர்பாலிகா சட்டம் ஆகியவை எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப் பட்டனவோ, அந்த நோக்கம் இன்றுவரை நிறைவேறவில்லை என்பது வருத்தமளிக்கும் உண்மை ஆகும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்கவேண்டும்; அதன் மூலம் கிராமப்பகுதிகளையும், நகரப் பகுதிகளையும் முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, பஞ்சாயத்துராஜ் சட்டமும், நகர்பாலிகா சட்டமும் இயற்றப்பட்டன. இதன் பயனாக, உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் கிடைத்திருப்பது உண்மை.

ஆனால், கிராமப்பகுதிகளில் இன்னும் எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கவில்லை. ஊரகப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இன்னும் கூடுதல் வேகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும். மத்திய, மாநில அரசுகளின் வரி வருவாய்கள் கிராமப் பகுதிகளுக்கு அதிக அளவில் ஒதுக்கப்படவேண்டும். இவற்றின் மூலம், காந்தியின் கிராம சுயராஜ்யக் கனவை நனவாக்க அனைவரும் பாடுபட வேண்டும்.

**உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் வழங்குவது குறித்த பாமகவின் வாக்குறுதிகள்:**

1. ஜி.எஸ்.டி. எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி மூலம் கிடைக்கும் வருவாயின் ஒரு பகுதியை மத்திய அரசும், மாநில அரசுகளும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

2. உள்ளாட்சி அமைப்பின் அடித்தள ஆதாரமாகக் கிராமச் சபைகள் விளங்க வேண்டும் என்பதை பா.ம.க. தன் இலட்சிய விருப்பமாகக் கொண்டுள்ளது. கிராமச் சபைகளை வலுப்படுத்த வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் பா.ம.க. முன்னெடுக்கும்.

**பொலிவுறு கிராமங்கள்**

3. ஊரகப் பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் பொலிவுறு கிராமங்கள் (Smart Villages) திட்டத்தை செயல்படுத்த பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

**மதுவிலக்கு அதிகாரம்**

4. நாடு முழுவதும் மதுவின் தீமைகள் அதிகரித்து வருகின்றன. குடிப்பழக்கத்தின் தீமைகளை முதலில் அனுபவிப்பது சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்கள்தான். அதனால், மதுக்கடைகள் தேவையா? என்பது குறித்துத் தீர்மானிக்க வேண்டியது அவர்கள்தான். இதைக் கருத்தில் கொண்டு மதுவிலக்கு குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி மதுவிலக்குச் சட்டம் இயற்றவேண்டும் என்று பா.ம.க. வலியுறுத்தும்.

5. கிராம அளவில் மதுக்கடைகளை மூடி, மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அங்குள்ள மக்கள் விரும்பினால், மதுவிலக்குச் சட்டப்படி கிராமச் சபையைக் கூட்டிப் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும். வாக்கெடுப்பில் பங்கேற்கும் மக்களில் 50 விழுக்காட்டினர் மதுவிலக்குக்கு ஆதரவாக வாக்களித்தால் மதுக்கடைகள் மூடப்படும்.

6. நகர்ப்புற உள்ளாட்சிகளில் வட்ட அளவில் வாக்கெடுப்பு நடத்தப்படும். வாக்கெடுப்பில் பங்கேற்கும் மக்களில் 50 விழுக்காட்டினர் மதுவிலக்குக்கு ஆதரவாக வாக்களித்தால் மதுக்கடைகள் மூடப்படும்.

7. கிராமப்புறங்களில் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளோ, வேறு திட்டங்களோ செயல்படுத்தப்படுவதாக இருந்தால், அதற்கு உள்ளாட்சி அமைப்புகளின் ஒப்புதல் பெறுவது கட்டாயமாக்கப்படும்.

### நகர்ப்புற உள்ளாட்சிகள்

8. நகர்ப்புற வளர்ச்சியின் பிரச்சினைகளை நகர உள்ளாட்சி அமைப்புகளின் உதவியோடு தீர்த்து வைக்கத் தீவிர முயற்சிகள் எடுக்கப்படும். மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஊக்குவித்து நகர்ப்புற வளர்ச்சியினை மேம்படுத்த ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

9. புதிய நகர்ப்புறச் செயல்திட்டம்: ஐக்கிய நாடுகள் அவையால் 2016ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட “புதிய நகர்ப்புறச் செயல்திட்டம்” என்பது நகர்ப்புற வாழ்வையும், சுற்றுச்சூழலையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தக் கூடிய மிக முதன்மையான செயல்திட்டம் ஆகும். வேகமாக நகரமயமாகிவரும் இந்தியாவிலும், இந்தியாவிலேயே நகரமயமாதலில் முதலிடத்தில் இருக்கும் தமிழ்நாட்டிலும் இந்தச் செயல்திட்டம் முழுமையாகவும், விரைவாகவும் செயலாக்கப்பட பா.ம.க. பாடுபடும்.

10. சொந்தமில்லாத இடங்களில், வீடு கட்டி வாழ்ந்துவரும் குடிசைவாழ் மக்களின் வாழ்விட உரிமைகள் காப்பாற்றப்படும். ஆக்கிரமிப்பு அகற்றம் என்ற பெயரில் அவர்களது வீடுகள் இடிக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவும், மாநகரங்களிலும், நகர்ப்புறங்களிலும், குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தொடர்ந்து நகருக்குள்ளேயே அனைத்து அடிப்படை வசதிகளுடன் வாழ்வதற்கானத் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்படவும், இதன் மூலம், குடிசைவாழ் மக்கள் நகருக்குள் வாழ்வதற்கான உரிமை (Right to the City) அங்கீகரிக்கப்படவும் பா.ம.க. பாடுபடும்.

# 27 ஈழத் தமிழர்களுக்கு நீதி
## தமிழீழத்திற்குப் பொதுவாக்கெடுப்பு

தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதி என்பார்கள். 2009ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களைப் படுகொலை செய்த இலங்கை ஆட்சியாளர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இன்றுவரை தண்டனை பெற்றுத்தரப்படவில்லை. இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று உலகின் பல நாடுகள் வலியுறுத்திவரும் போதிலும், அதற்கான நடவடிக்கைகள் ஆமை வேகத்திலேயே நகருகின்றன.

ஈழத் தமிழர் படுகொலைக்கு நீதி பெற்றுத் தரவேண்டியது எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்கு ஈழத் தமிழர்கள் அச்சமின்றி வாழத் தமிழீழம் அமைத்துத் தரவேண்டியதும் அவசியமாகும். இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பாட்டாளி மக்கள் கட்சி முன்னெடுக்கும்.

1. இலங்கைப் போர் முடிந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்ட நிலையில், அது குறித்த புலனாய்வு விசாரணையை ஐ.நா. மனித உரிமை ஆணையம் நடத்தி முடித்துள்ளது. ஈழப் போரில் போர்க்குற்றங்கள் நடந்தது உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்குக் காரணமான நீதிமன்ற விசாரணை நடத்த இலங்கை அரசு தடையாக உள்ளது. ஐ.நா. மனித உரிமைப் பேரவை, ஐக்கிய நாடுகள் அவை, ஐ.நா. பாதுகாப்பு அவை ஆகிய அமைப்புகளில் இந்த விவகாரத்தை இந்தியா கொண்டு சென்று, இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.
2. இலங்கையில் தமிழர்களும், சிங்களர்களும் வாழக்கூடிய பகுதிகள், காலம் காலமாக இரண்டு தனித்தனி நாடுகளாகத் தான் இருந்து வந்தன. ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெறும்போதுதான் இலங்கை ஒரே நாடாக ஆக்கப்பட்டது. இந்தத் தற்காலிக அமைப்பு கைவிடப்பட்டு அங்கு பூர்வீகமாகத் தமிழர்கள் வாழும் பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழீழம் அமைய வேண்டும். இதற்காக ஐக்கிய நாடுகள் அவை மூலம் உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்த இந்தியா நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பா.ம.க. வலியுறுத்தும்.
3. ஐ.நா. பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை இலங்கையில் உள்ள தமிழர்கள் கண்ணியத்துடன் வாழ்வதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.
4. இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட அகதிகளின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை வரையறுக்கும் வகையில் சட்டம் இயற்ற மத்திய அரசு மூலம் பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.
5. தமிழ்நாட்டில் வாழும் ஈழத் தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழும் வகையில் அனைத்து வசதிகளும், சலுகைகளும் வழங்கப்படும். அவர்கள் விரும்பும் பட்சத்தில், மத்திய அரசை வலியுறுத்தி அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை பெற்றுத்தர பா.ம.க. பாடுபடும்.



# 28 வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்கள் காக்கப்படும்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதை மந்திரச் சொல்லாகக் கொண்டவர்கள் தமிழர்கள். சங்க காலத்திலேயே வணிகத்திற்காகப் பல்வேறு நாடுகளுக்குச் சென்ற வரலாறு தமிழர்களுக்கு உண்டு. இன்றைய நிலையில், உலகில் 150க்கும் கூடுதலான நாடுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

உலகச் சூழல் இயல்பாக இல்லை என்பதும், அடிக்கடி பதற்றமாக மாறுகிறது என்பதும் அண்மைக்கால உண்மை. உக்ரைன் போர், இஸ்ரேல் – ஹமாஸ் போர் ஆகியவற்றின் காரணமாக அப்பகுதிகளில் பணியாற்றி வந்த மற்றும் பயின்று வந்த தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். இனிவரும் காலங்களில் இத்தகைய சூழல் அடிக்கடி ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்களைப் பாதுகாப்பு சார்ந்தும், பணி சார்ந்தும் காக்க வேண்டிய தேவை இந்திய அரசுக்கு உண்டு. இதற்குத் தேவையான அழுத்தங்களை மத்திய அரசுக்குக் கொடுக்க பாமக உறுதிபூண்டுள்ளது.

**வெளிநாடுவாழ் இந்தியர்கள் / தமிழர்கள் நலன் சார்ந்த பாமகவின் வாக்குறுதிகள்:**

1. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் / இந்தியர்கள் நலன் காக்க வசதியாக, வெளிநாடு வாழ் இந்தியர்கள் நல அமைச்சகத்தை மீண்டும் ஏற்படுத்த மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும். அத்துறையின் மண்டல அலுவலகத்தைச் சென்னையில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
2. தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் வெளிநாடுகளின் இந்தியத் தூதர்களாகத் தமிழ் பேசும் அதிகாரிகளை நியமிக்க மத்திய அரசுக்கு பா.ம.க. அழுத்தம் கொடுக்கும்.
3. அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் இந்தியாவைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள், மென்பொருள் வல்லுநர்கள் உள்ளிட்டோருக்கு விதிக்கப்பட்டுள்ள விசா கட்டுப்பாடுகளைத் தளர்த்த நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.

# 29 விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமே உண்மையான மக்களாட்சி முறை

இந்தியாவில் அடுத்துவரும் 5 ஆண்டுகளில் ஏராளமான தேர்தல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை 2029ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தலாம் என்று அதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழு குடியரசுத் தலைவரிடம் அண்மையில் அறிக்கை அளித்துள்ளது. வல்லுநர் குழுவின் பரிந்துரைப்படி, ஒரு மாநிலத்தில் ஓர் அரசு பெரும்பான்மை இல்லாமல் கவிழ்ந்தால், மீண்டும் தேர்தல் நடத்தப்படும். ஆனால், தேர்தலில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சிக்கு, 5 ஆண்டு பதவிக் காலம் வழங்கப்படாது. கவிழ்ந்த ஆட்சி எவ்வளவு காலம் பதவியில் இருந்ததோ, அந்தக் காலம் போக மீதமுள்ள காலம் தான் புதிய அரசின் பதவிக் காலமாக இருக்கும். இப்படியொரு நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டும். அதற்கான சிறந்த தீர்வு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்.

அதுமிட்டுமின்றி, அதிக வாக்குகளைப் பெறும் வாக்காளரே வெற்றி பெற்றதாக அறிவிக்கும் நடைமுறை இந்தியாவில் உள்ளது. இதனால், சராசரியாக 35% முதல் 45% வரை வாக்குகளைப் பெறுவோர் ஆட்சியைப் பிடிக்க முடிகிறது. அதே நேரத்தில், 55% முதல் 65% வரை வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றவர்களுக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் கிடைக்கவில்லை. இந்தநிலையை மாற்றி, எந்த அளவுக்கு மக்களின் வாக்குகளை ஒவ்வொரு கட்சியும் பெற்றுள்ளதோ, அதற்கு இணையான அளவு அக்கட்சிக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதுதான் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் ஆகும். இதை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்திய ஜனநாயகத்தை வலுப்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை.

**தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. முதலில் வந்தவரே வெற்றிபெற்றவர் (First Past The Post - FPTP) என்ற தேர்தல் முறை கைவிடப்படும். அதற்கு மாற்றாக, ஒவ்வொரு தேர்தலிலும், மாநில அளவில் கட்சிகள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் இடம் ஒதுக்கும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்படும். இந்த முறையை அறிமுகம் செய்வது குறித்துப் பரிந்துரைக்க முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர்களை கொண்ட குழுவை அமைக்கும்படி பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

2. தேர்தல்களில் பண பலம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க, அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பா.ம.க. வலியுறுத்தும்.

**மீண்டும் வாக்குச்சீட்டு முறை**

3. உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வாக்குச் சீட்டு முறையே பயன்பாட்டில் உள்ளது. இந்தியாவிலும் தேர்தல் முறை ஐயத்திற்கு அப்பாற்பட்டு அமையவேண்டும். அதை உறுதி செய்யும் வகையில், தேர்தல்களில் வாக்குச்சீட்டு முறையை மீண்டும் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

4. வெளிநாடுகளில் உள்ள குடிபெயர் தொழிலாளர்கள் அவரவர் சொந்த ஊர் வாக்குச் சாவடி வாக்காளர் பட்டியலில் தமது பெயரைப் பதிவு செய்யத் தற்போது வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் நேரடியாக வாக்குச்சாவடிக்கு வந்து வாக்களிக்க வேண்டும் என்கிற நடைமுறைச் சாத்தியமில்லாத விதிமுறை உள்ளது. இதற்கு மாறாக, இந்தியாவின் எந்த ஒரு தொகுதியைச் சேர்ந்த குடிபெயர் தொழிலாளரும், அவரவர் பணிபுரியும் நாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தில் வாக்களிக்கலாம் என்கிற நிலையை உருவாக்கப் பாடுபடுவோம்.

5. தேர்தலில் ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் கலாச்சாரம் ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக மாறி வருகிறது. ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் வேட்பாளர்களையும், அவர்களின் கட்சிகளையும் தகுதி நீக்கம் செய்வதுதான் இச்சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வாக அமையும். எனினும், வேட்பாளர்களின் தகுதி நீக்கத்தையும், அரசியல் கட்சிகளின் அங்கீகார ரத்தையும் எடுத்தேன் கவிழ்த்தேன் எனச் செய்துவிட முடியாது என்பதால், அதற்கான விதிமுறைகளை வகுக்கச் சட்ட வல்லுநர்கள் மற்றும் தேர்தல் வல்லுநர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படும்.

6. மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரிகளாகவும், மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாகவும், பிற மாநிலங்களைச் சேர்ந்த, பிற மாநிலப் பிரிவுகளைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை நியமிக்கும் வகையில் தேர்தல் விதிகளில் மாற்றங்களை செய்ய பா.ம.க. பாடுபடும்.

7. வாக்குச் சாவடிகளின் தலைமை அதிகாரிகளாகவும், பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களை நியமிக்கும் வகையில், தேர்தல் விதிகள் திருத்தியமைக்கப்படும்.

# 30 தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக்குவோம்

உலக அளவில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது. ஆனாலும், விளையாட்டுப் போட்டியில் இந்தியாவால் குறிப்பிடத்தக்க அளவில் சாதிக்க முடியவில்லை. அண்மைக்காலங்களில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் இந்தியா ஓரளவு கவுரவமான வெற்றியையும், பதக்கங்களையும் குவித்திருக்கிறது.

உலக விளையாட்டு அரங்கில் இந்தியாவின் நிலை மேம்பட்டிருக்கும் போதும், இந்திய அளவில் தமிழ்நாட்டின் நிலை குறிப்பிடத்தக்க அளவு முன்னேறவில்லை. இதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு, அவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டுகளில் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இதன் மூலம் இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாகத் தமிழ்நாடு மாற்றப்படும்.

**தமிழ்நாட்டில் விளையாட்டை மேம்படுத்தப் பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மறுசீரமைக்கப்படும்.
2. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் ஒவ்வொரு விளையாட்டுக்கும் தனித்தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, அதன் தலைவராக அந்த விளையாட்டில் சாதனை படைத்த முன்னாள் விளையாட்டு வீரர் ஒருவர் அமர்த்தப்படுவார். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விளையாட்டிலும் சிறந்து விளங்கும் வீரர்களை தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.
3. அனைத்து மாவட்டங்களிலும் மிகப் பெரிய அளவில் ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்படும். விளையாட்டை ஊக்குவிக்க மாவட்ட அளவில் அதிகாரி ஒருவரை நியமிக்கும்படி மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு அறிவுரை வழங்கும்.
4. அனைத்து வட்டங்களிலும் பல்வேறு விளையாட்டுகளை விளையாடும் வகையில், பல்முனை பயன்பாட்டு உள்விளையாட்டு அரங்கங்கள் அமைக்க பா.ம.க. பாடுபடும்.
5. விளையாட்டுத் திறன் வளரும் வகையில், விளையாட்டு அகக்கட்டுமானங்கள் கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் உருவாக்க வேண்டும். உடல் பயிற்சி நிலையங்கள், விளையாட்டு வீரர்கள் தங்கிப் பயிற்சி பெறும் பயிற்சி விடுதிகள், விளையாட்டு அரங்கங்கள், நாட்டின் பல பகுதிகளிலும் உருவாக்க மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.
6. மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடம் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன், பாடத்திட்டங்களில் விளையாட்டும் சேர்க்கப்படும். ஒரு நாளைக்கு ஒரு பாடவேளையை விளையாட்டுக்கு ஒதுக்கும்படி மத்திய, மாநில அரசுகளை பா.ம.க. வலியுறுத்தும்.

# 31 மக்களைக் காக்கவே சட்டங்கள், பழிவாங்குவதற்கு அல்ல

ஒரு நாட்டில் சட்டம் இயற்றப்படுவதன் நோக்கம், அந்த நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான். மக்களைப் பாதுகாப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம், மக்களைப் பழிவாங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டால், அதைவிடக் கொடுமையான சமூகஅநீதி இருக்க முடியாது.

ஆனால், தமிழ்நாட்டில் உரிமைக்காகப் போராடுபவர்களை பழிவாங்குவதற்காகவே தடுப்புக்காவல் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கான சிறந்த எடுத்துக்காட்டு, செய்யாறு சிப்காட் விரிவாக்கத்திற்காக நிலம் கையகப்படுத்தப்படுவதை எதிர்த்துப் போராட்டம் நடத்திய 7 உழவர்கள் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டது தான். ஆட்சியாளர்களின் கைகளில் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை இனிவரும் காலங்களில் பாட்டாளி மக்கள் கட்சி ஒரு போதும் அனுமதிக்காது.

ஐ.நா. மனித உரிமைகள் பிரகடனம், பன்னாட்டு மனித உரிமை உடன்படிக்கை ஆகியவை அப்பாவிகள் எந்த வகையிலும் தண்டிக்கப்படக்கூடாது என்பதையே வலியுறுத்துகின்றன. மக்களின் குடியுரிமை, அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள், சமூக உரிமைகள், கலாச்சார உரிமைகள் உள்ளிட்ட அனைத்தும் பாதுக்கப்படவேண்டும் என்பதுதான் ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளின் விருப்பமும், நோக்கமும் ஆகும். அவை நிறைவேற்றப்படவேண்டும் என்பதே பா.ம.க.வின் நோக்கம்.

**மனித உரிமைகள் தொடர்பான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. தேசியப் பாதுகாப்புச் சட்டம், குண்டர் சட்டம் உள்ளிட்ட தடுப்புக்காவல் சட்டங்கள் அரசியல் பழிவாங்கும் நோக்குடன் கண்மூடித்தனமாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த பா.ம.க. பாடுபடும். இதற்கு ஏற்ற வகையில், அச்சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்படும்.
2. தடுப்புக் காவல் சட்டத்தில் கைது செய்யப்படுவோர் அதை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்கான மேல்முறையீட்டுக் குழுமத்தில் மனித உரிமைகள் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்படுவார்கள். மேல் முறையீடுகள் மீது இரு வாரங்களில் தீர்ப்பளிக்கப்படுவதைக் கட்டாயமாக்கி விதிகளில் திருத்தங்கள் செய்யப்படும்.

**வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்**

3. இந்தியாவில் தவறாகவும், பழிவாங்கும் நோக்குடனும், பயன்படுத்தப்படும் சட்டங்களில் முதன்மையானது பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டமாகும். இதை உணர்ந்துதான் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தால், அப்பாவிகள் தவறாகத் தண்டிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், சில திருத்தங்களை உச்சநீதிமன்றம் பரிந்துரைத்தது. அத்திருத்தங்கள் செயலாக்கம் பெறுவதை பா.ம.க. உறுதி செய்யும்.

4. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அளிக்கப்படும் புகார்களை ஆய்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நீதிபதி தலைமையில் கண்காணிப்புக் குழு அமைக்கப்படும். காவல் நிலையத்தில் பெறப்படும் புகார்கள், அவற்றுக்குரிய ஆதாரங்களுடன் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் இருப்பதாகக் கண்காணிப்புக் குழு அறிவித்தால் மட்டுமே அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வன்கொடுமைச் சட்டத்தில் திருத்தம் செய்ய பா.ம.க. வலியுறுத்தும்.

### மாற்றுத் திறனாளிகள் உரிமை

5. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்க பா.ம.க. பாடுபடும். மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்க 2006ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட ஐ.நா. உடன்படிக்கையில் 2007ஆம் ஆண்டில் இந்தியா கையொப்பமிட்டு ஏற்றுள்ளது (UN Convention on the Rights of Persons with Disabilities). ஆனால், அதன் அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளின் உரிமையை இன்னமும் சட்டமாக்கவில்லை (Persons with Disabilities Equal Opportunities, Protection of Rights and Full Participation Act). சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கிய விதத்தில் அவர்களது அடிப்படை உரிமைகள் அனைத்தையும் அங்கீகரித்து முழுமையாக நிறைவேற்றும் வகையில் ஐ.நா. மாற்றுத் திறனாளிகள் உடன்படிக்கையின் விதிகள் இந்தியாவில் முழுமையாகச் செயல்படுத்தப்பட பா.ம.க. பாடுபடும்.

6. அரசு அலுவலகங்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான சாய்வுப்பாதைகள், பிரெய்லி முறையிலான அறிவிப்புப் பலகைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் செய்துதர பா.ம.க. பாடுபடும்.

7. பேருந்து நிலையங்கள், தொடர்வண்டி நிலையங்களில் மாற்றுத் திறனாளிகள் எளிதில் சென்றுவர வசதிகள் செய்துதரப்படும். பேருந்துகளிலும், புறநகர்த் தொடர்வண்டிகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்காக அதிக வசதிகள் செய்துதரப்பட பா.ம.க. வலியுறுத்தும்.

8. விமான நிலையங்கள், பேருந்து நிலையங்கள், தொடர்வண்டி நிலையங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் நுழைவு வாயிலுக்கு அருகில் மாற்றுத் திறனாளிகளுக்காகத் தனி வாகன நிறுத்தம் அமைக்கப்படும்.

### பாரா ஒலிம்பிக் பயிற்சிகள்

9. 2016ஆம் ஆண்டு பிரேசில் நாட்டில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி மாரியப்பன், உயரம் தாண்டும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று பெருமை சேர்த்தார். அவரைப் போன்ற திறமைசாலிகள் தமிழகத்தில் ஏராளமாக உள்ளனர். அவர்களின் திறனை மேம்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் மாற்றுத்திறனாளிகளுக்கு பாரா ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்கான பயிற்சிகளை அளிக்கச் சிறப்புப் பயிற்சி மையங்களை அமைக்க பா.ம.க. வலியுறுத்தும்.

# 32 பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதே ஒருமைப்பாட்டுக்குச் செய்யும் சேவை

உலகின் சமூகவியல் அதிசயங்களில் சிறந்தது இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமை காணும் தன்மையாகும். ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’ என்பதற்கு உதாரணமாக, பல்வேறு இன, மத, மொழி பேசும் மக்கள் இந்தியாவில் வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் சகோதர, சகோதரிகளாக வாழ்கின்றனர். இந்தியாவைக் கண்டு உலகம் வியக்கும் விசயங்களில் தலையாயது இந்த ஒற்றுமையே.

இந்த ஒற்றுமையைக் குலைக்கும் வகையிலான எந்தச் செயலையும் அனுமதிக்கக் கூடாது. இந்தியாவுக்குக் கிடைத்த வரமான பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதுதான் நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் இந்தியக் குடிமக்கள் செய்யும் மிகச் சிறந்த சேவையாகும்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அனைத்து உரிமைகளும் கிடைப்பதை பா.ம.க. உறுதி செய்யும்.

### தேச ஒற்றுமை, ஒருமைப்பாடு குறித்த பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:

1. இந்தியாவில் வாழும் பல்வேறு இன, மத, மொழி பேசும் மக்கள் அனைவரும் அவரவர் பண்பாட்டு, கலாச்சார, மொழி உரிமைகளை பின்பற்றுவதை உறுதி செய்யவும், அனைவரும் முழு மனித உரிமையுடன் வாழும் சூழலை உருவாக்கவும் பா.ம.க. பாடுபடும்.

2. இனம், மொழி, மதம் என எதன் அடிப்படையிலும் ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினர் ஒடுக்க முயல்வதையோ, இனம், மொழி, மத அடிப்படையிலான உரிமைகளைப் பறிப்பதையோ பா.ம.க. ஒருபோதும் ஏற்காது. ஒற்றை மதம், ஒற்றை மொழி, ஒரே இனம் என்கிற மனித உரிமைகளுக்கு எதிரான கருத்துகளை பா.ம.க. எதிர்க்கும்.

### பொது சிவில் சட்டம் தேவையில்லை

3. இந்து திருமணச் சட்டம் மற்றும் குழந்தைகள் திருமண ஒழிப்புச் சட்டம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளைக் களையவும், பாலினப் பாகுபாட்டை அகற்றவும், குழந்தைகள் உரிமைகளைக் காக்கவும் பா.ம.க. பாடுபடும்.

4. தந்தை பெரியாரால் முன்மொழியப்பட்டு, தமிழ்நாட்டில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் அங்கீகரிக்கப்பட்டு, வெற்றிகரமாக நடைமுறையில் உள்ள சுயமரியாதைத் திருமணத்திற்கு அகில இந்திய அளவிலும் சட்டப்படியாக அங்கீகாரத்தைப் பெற்றுத்தரப் பாட்டாளி மக்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

5. வெறுப்புக் குற்றங்களைத் தடுப்பதற்கான செயல்திட்டம் **(Actions against Hate)**

வெறுப்புப் பிரச்சாரங்கள், சாதி, மதம், மொழி, இனம் என அடையாள அடிப்படையிலான குழுக்களை நோக்கிய வன்முறைகள், அட்டூழியக் குற்றங்களை (Atrocity crimes - genocide, crimes against humanity, war crimes, and ethnic cleansing) தடுக்க அரசுகள் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது அண்மைக்காலங்களில் உருவாகியுள்ள மிக முக்கியமான தேவை ஆகும். ஒரே ஒரு கலவரம் ஒரு பிராந்தியத்தின் வளர்ச்சியையும் அமைதியையும் நிர்மூலமாக்கி, பல பத்தாண்டுகள் சமுதாயத்தைப் பின்னோக்கித் தள்ளும் வல்லமை வாய்ந்தது.

இந்தகைய வெறுப்பையும் வன்முறைகளையும் முன் கூட்டியே தடுக்க வேண்டும் என்பதற்காக குறிப்பான செயல்திட்டங்களை ஐக்கிய நாடுகள் அவை முன்வைத்துள்ளது. அவற்றின் விவரம்:

- ஐநா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் 16/18, 2011 (HRC Resolution 16/18 - Combating intolerance, negative stereotyping and stigmatization of, and discrimination, incitement to violence and violence against, persons based on religion or belief)
- ரபாட் செயல் திட்டம் 2012 (Rabat Plan of Action on the prohibition of advocacy of national, racial or religious hatred that constitutes incitement to discrimination, hostility or violence)
- அட்டூழியக் குற்றங்கள் உருவாகாமல் தடுப்பதற்கான செயல் திட்டம் (The Plan of Action for Religious Leaders and Actors to Prevent Incitement to Violence that Could Lead to Atrocity Crimes 2017)

மேற்கண்ட ஐநா தீர்மானங்களையும் பிரகடனங்களையும் இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் செயல்படுத்தி அமைதிக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்க வேண்டும் என்று பா.ம.க. வலியுறுத்தும்.

# 33 இஸ்லாமியர்கள், கிறித்தவர்களுக்கு மக்கள்தொகைப்படி இடஒதுக்கீடு

இஸ்லாமியர்களையோ, கிறித்தவர்களையோ, சீக்கியர்களையோ, சமணர்களையோ சிறுபான்மையினர் என்று அழைக்கக் கூடாது என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும். அனைத்து மதத்தினரும் சமமாக நடத்தப்பட வேண்டும்; எண்ணிக்கையில் குறைவாக இருக்கும் மதத்தினருக்கு, எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் மதத்தினர் காவலாகச் செயல்பட வேண்டும் என்பதைத் தான் பல பத்தாண்டுகளாக பாமக வலியுறுத்தி வருகிறது; அதைக் கடைப்பிடித்தும் வருகிறது.

இனி வரும் காலங்களிலும் பெரும்பான்மையினரும், சிறுபான்மையினரும் நட்புடனும், நல்லிணக்கத்துடனும் வாழ்வதை உறுதி செய்யவேண்டும் – சிறுபான்மைச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் விருப்பமும், நிலைப்பாடும் ஆகும்.

**சிறுபான்மையினர் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட அனைத்து சிறுபான்மையினருக்கும் அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

2. இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு அறிவிக்கப்படும் வரை, தற்காலிக ஏற்பாடாக மதம் மாறிய கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வகை செய்யவேண்டும் என்று பா.ம.க. கேட்டுக்கொள்ளும்.

3. இஸ்லாமியர்களின் நலன் தொடர்பான நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா மற்றும் நீதிபதி ராஜேந்திர சச்சார் குழுக்களின் பரிந்துரைகளைச் செயல்படுத்த பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

4. சிறுபான்மையினர் நலனுக்கான சிறப்புக் கூறு திட்டத்தைத் தேசிய அளவில் செயல்படுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

# 34 பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) உள் இடஒதுக்கீடு: நீதிபதி ரோகிணி ஆணையப் பரிந்துரை செயல்படுத்தப்படும்

இந்தியாவில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சமூகநீதி நீண்ட போராட்டத்திற்குப் பிறகே பெறப்பட்டது. 1950ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதே, பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு தேசிய அளவில் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஆனால், 1950களில் காகா கலேல்கர் ஆணையத்தின் பரிந்துரை அறிக்கை நிராகரிக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மண்டல் ஆணையத்தின் பரிந்துரைப்படி, 1990ஆம் ஆண்டில் தான் மத்திய அரசு வேலைகளில் பிற பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

அதன்பிறகும் மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்த நிலையில், 2006ஆம் ஆண்டில் பாமக நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் தான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர்களிடம் போராடி, அந்த இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தார். ஆனால், கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் போராடிப் பெறப்பட்ட 27% இடஒதுக்கீடு, பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் பெரும்பான்மையினரைச் சென்றடையவில்லை.

இந்த நிலையை மாற்றுவதற்குச் சிறந்த தீர்வு, பிற பிற்படுத்தப்பட்ட உறுப்பினருக்கான இடஒதுக்கீட்டின் அளவை அதிகரிப்பதும், உள்ஒதுக்கீடு வழங்குவதும்தான் என்று பாமக உறுதியாக நம்புகிறது. இதற்குச் செயல்வடிவம் கொடுக்க அனைத்து நிலைகளிலும் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

**பிற பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. பிற பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இடஒதுக்கீட்டில் உள்ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக அமைக்கப்பட்ட நீதிபதி ரோகிணி ஆணையம் அதன் அறிக்கையை 2023ஆம் ஆண்டு ஜூலை மாதம் தாக்கல் செய்திருக்கிறது. ஆணையத்தின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள அனைத்துப் பரிந்துரைகளையும் செயல்படுத்தும்படி, மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி தீவிரமாக வலியுறுத்தும்.
2. மத்திய அரசின் கல்வி, வேலைவாய்ப்புகளில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டின் அளவை இப்போதுள்ள 27%-இல் இருந்து, மக்கள்தொகைக்கு இணையான அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசுக்குப் பாட்டாளி மக்கள் கட்சி அழுத்தம் கொடுக்கும்.

3. மத்திய அரசின் அனைத்துத் துறைகளிலும், அனைத்து நிலைப் பணிகளிலும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பிரதிநிதித்துவம் குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிடும்படி மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

4. மத்திய அரசின் உயர்கல்வி நிறுவன மாணவர் சேர்க்கையில், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27% இடஒதுக்கீடு நடைமுறைபடுத்தப்பட்டது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்.

5. மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கிரீமிலேயர் முறையை நீக்க வேண்டும். இடைக்கால ஏற்பாடாக கிரீமிலேயருக்கான வருவாய் வரம்பைத் தற்போதுள்ள ரூ.8 இலட்சத்திலிருந்து ரூ.16 இலட்சமாக உயர்த்த வேண்டும் என மத்திய அரசிடம் பா.ம.க. வலியுறுத்தும்.

6. மத்திய அரசுத்துறை வேலைவாய்ப்புகளில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாமல் உள்ள அனைத்துப் பணியிடங்களையும் பின்னடைவுப் பணியிடங்களாக அறிவித்து, அவற்றைச் சிறப்பு ஆள்தேர்வு மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

7. ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., தேசிய தொழிநுட்ப நிறுவனங்கள், ஜிப்மர் மற்றும் எய்ம்ஸ் போன்ற மருத்துவ உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட நிறுவனங்களில், பிற பிற்படுத்தப்பட்டோர் உள்ளிட்ட இடஒதுக்கீட்டுப் பிரிவினர் இடஒதுக்கீடு பெறுவதற்கு உள்ள தடைகளை நீக்கப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

# 35 ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் காக்கப்படும்

சமூகத்தின் அடித்தட்டில் உள்ள மக்களின் நலன்களைப் பாதுகாப்பதும், அவர்களைச் சமூகவியல் படிக்கட்டுகளில் உயர்த்திக் கொண்டு வருவதும் தான் சமூக நீதியின் உண்மையான நோக்கமாகும். இதை மனத்தில் கொண்டு, ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ள பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கான அனைத்துத் திட்டங்களும் முறையாகவும், பயனாளிகளைச் சென்றடையும் வகையிலும் செயல்படுத்தப்படவேண்டும் என்பதே பா.ம.க.வின் நோக்கம் ஆகும்.

**பட்டியலினம் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்புக்கூறு திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படுவதைப் பாட்டாளி மக்கள் கட்சி உறுதிசெய்யும்.

2. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாணவ – மாணவியர்கள் கல்வி உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு 50% அதிகரிக்கப்படவேண்டும் என்று பாமக வலியுறுத்தும்.

3. அட்டவணை இன மக்களுக்கான சிறப்புக் கூறுதிட்டம், பழங்குடியினர் உட்கூறு திட்டம் ஆகியவை சிறப்பாகச் செயல்படுத்தப்படுவதற்கு பா.ம.க. பாடுபடும்.

4. அரசுத் துறையில் நிரப்பப்படாத பணியிடங்களைச் சிறப்புப் பணி நியமனங்கள் மூலமாக நிரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

5. மனிதக் கழிவுகளையும், கழிவுநீர்ப் பாதை மற்றும் தொட்டிகளையும் மனிதர்களே அகற்றும் அநீதிக்கு முடிவு கட்டப்படும். இந்தப் பணிகளில் இதுவரை ஈடுபடுத்தப்பட்டு வந்த தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வழங்கத் திட்டம் வகுக்கும்படி மத்திய அரசை பா.ம.க. வலியுறுத்தும்.

# 36 புதுவைக்கு மாநிலத் தகுதி

இந்தியாவில் புதிதாக உருவாக்கப்பட்ட ஜம்மு–காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்கள் தவிர, மீதமுள்ள 6 யூனியன் பிரதேசங்களில் டெல்லி, புதுச்சேரி ஆகிய இரு பிரதேசங்களில் மட்டுமே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவையும், அரசும் உள்ளது. ஆனால், யூனியன் பிரதேச அரசுகளுக்கோ, சட்டப்பேரவைகளுக்கோ தேவையான அதிகாரங்கள் இல்லை என்பது தான் உண்மை.

அதிகாரப் பரவலாக்குதல் தத்துவத்தின் நோக்கமே உள்ளூர் மக்கள் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அதிகாரம் வழங்குவதுதான். அதற்காகத்தான் மாநில அரசுகள் உள்ளன. யூனியன் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டதற்குத் தனித்தனியாகச் சிறப்புக் காரணங்கள் உள்ளன. ஆனால், அந்தக் காரணங்கள் தற்காலிகமானவை தான் என்பதால், பெரிய அளவிலான யூனியன் பிரதேசங்கள் படிப்படியாக மாநிலங்களாக மாற்றப்பட்டிருக்க வேண்டும்; சிறிய அளவிலான யூனியன் பிரதேசங்கள் அப்பகுதியில் உள்ள மக்கள் விரும்பக்கூடிய மாநிலத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாகப் புதுவைக்கு மாநிலத் தகுதி வழங்கவேண்டும் என மத்திய அரசிடம் பா.ம.க. பலமுறை வலியுறுத்தியுள்ளது. ஆனால், இதுவரை அது ஏற்கப்படாத நிலையில், இனியாவது ஏற்கப்பட வேண்டும் என்பதே பா.ம.க.வின் நிலைப்பாடு.

## புதுவை யூனியன் பிரதேசம் தொடர்பான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:

1. புதுவை யூனியன் பிரதேசத்திற்குத் தனி மாநில அந்தஸ்து வழங்க மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

2. புதுவைக்கு மாநிலத் தகுதி வழங்கப்படும் போது, மத்திய அரசுக்கு அம்மாநிலம் வழங்கவேண்டிய கடன் தொகை முழுவதையும் தள்ளுபடி செய்ய பா.ம.க. வலியுறுத்தும்.

3. புதுவை மாநிலத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்துவதற்கு பா.ம.க. பாடுபடும்.

# 37 அமைதி - வளர்ச்சிக்கான ஐ.நா. உடன்படிக்கைகளைச் செயல்படுத்துவோம்!

இந்தியா உட்பட உலகம் முழுவதும் நீடித்த வளர்ச்சி, அமைதி, சமூக நல்லிணக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பேரிடர் குறைப்பு உள்ளிட்டவற்றை உறுதி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்தியா உள்ளிட்ட பல்வேறு உறுப்பு நாடுகளுடன் ஏராளமான உடன்படிக்கைகளைச் செய்து கொண்டுள்ளது. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கைகள் தேசிய அளவிலும், மாநில அளவிலும் செயல்படுத்தப்பட வேண்டியவை ஆகும். அதேபோல் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டிய கடமையும், பொறுப்பும் மத்திய, மாநில அரசுகளுக்கு உண்டு. ஐக்கிய நாடுகள் அவையின் பொறுப்புள்ள உறுப்பினர் என்ற முறையில் இவற்றைச் செயல்படுத்த வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் முதன்மையான கடமை ஆகும்.

ஐக்கிய நாடுகள் அவையுடன் இந்தியா செய்து கொண்ட அனைத்து உடன்படிக்கைகளையும் செயல்படுத்த மத்திய அரசையும், தமிழ்நாட்டு அரசையும் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

## இந்தியாவில் செயல்படுத்தப்பட வேண்டிய சில முக்கியமான ஐ.நா. உடன்படிக்கைகள்:

### 1. நீடித்திருக்கும் மேம்பாட்டுக் குறிக்கோள்கள் 2030 (Sustainable Development Goals 2030)

நீடித்திருக்கும் வளர்ச்சிக் குறிக்கோள்கள் 2030 (Sustainable Development Goals - SDGs) எனும் உலகளாவிய உடன்படிக்கை ஐக்கிய நாடுகள் அவையால் 25 செப்டம்பர் 2015 அன்று ஒருமனதாக ஏற்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு தொடங்கி 2030 ஆண்டு வரையிலான காலத்தில் உலகின் ஒவ்வொரு நாடும் அடைய வேண்டிய 17 மேம்பாட்டு குறிக்கோள்களை (Goals) இந்த உடன்படிக்கை உள்ளடக்கிருக்கிறது. இதனை உறுதி செய்வதற்கான 169 குறிப்பான இலக்குகளும் (Targets) வரையறுக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட இலட்சியத்தை இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் முழுமையாகச் செயல்படுத்த வேண்டும்.

### 2. பாரிஸ் காலநிலை உடன்படிக்கை (Paris Climate Agreement)

காலநிலை மாற்றத்தை உலகின் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து கட்டுப்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் அவையால் 2015 ஆம் ஆண்டில் பாரிஸ் காலநிலை உடன்படிக்கை எட்டப்பட்டது. கரியமிலவாயு வெளியாகும் அளவினை மிக வேகமாகக் குறைத்தல், (Mitigation), காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் தகவமைப்பு நடவடிக்கைகளை (Adaptation) உடனடியாகத் துரிதப்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை வலியுறுத்தும் பாரிஸ் காலநிலை உடன்படிக்கையை இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் முழுமையாகச் செயல்படுத்த வேண்டும்.

### 3. புதிய நகர்ப்புறச் செயல்திட்டம் (New Urban Agenda)

ஐக்கிய நாடுகள் அவையால் 2016ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ‘புதிய நகர்ப்புறச் செயல்திட்டம்’ என்பது நகர்ப்புற வாழ்வையும் சுற்றுச்சூழலையும் பொருளதாரத்தையும் மேம்படுத்தக் கூடிய மிக முதன்மையான செயல்திட்டம் ஆகும். வேகமாக நகரமயமாகிவரும் இந்தியாவிலும், இந்தியாவிலேயே நகரமயமாதலில் முதலிடத்தில் இருக்கும் தமிழ்நாட்டிலும் இந்தச் செயல்திட்டம் முழுமையாகவும் விரைவாகவும் செயலாக்கப்பட வேண்டும்.

### 4. பேரிடர் குறைப்புக்கான சென்டாய் கட்டமைப்புத் திட்டம் 2015 – 2030 The Sendai Framework for Disaster Risk Reduction 2015-2030

பேரிடர் இழப்புகளை 2030ஆம் ஆண்டிற்குள் பெருமளவு குறைக்கும் நோக்கில் சென்டாய் பேரிடர் கட்டமைப்புத் திட்டம் 2015–2030 எனும் உடன்படிக்கை ஐக்கிய நாடுகள் அவையால் எட்டப்பட்டது. பேரிடர் தவிர்ப்பு மற்றும் துயர் துடைப்புக்காக 4 இலக்குகள், 7 பரிந்துரைகளுடன் இந்த சென்டாய் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. வெள்ளம், புயல், வறட்சி, நிலநடுக்கம், சுனாமி எனப் பலவிதமான பேரிடர்களை எதிர்கொள்ளும் இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இந்தக் கட்டமைப்புத் திட்டம் மிகவும் முதன்மையானதாகும். இதனை முழு அளவில் செயலாக்க வேண்டும்.

### 5. வெறுப்புக் குற்றங்களைத் தடுப்பதற்கான செயல்திட்டம் (Actions against Hate)

வெறுப்பு பிரச்சாரங்கள், சாதி, மதம், மொழி, இனம் என அடையாள அடிப்படையிலான குழுக்களை நோக்கிய வன்முறைகள், அட்டூழியக் குற்றங்களைத் (Atrocity crimes - genocide, crimes against humanity, war crimes, and ethnic cleansing) தடுக்க அரசுகள் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது அண்மைக்காலங்களில் உருவாகியுள்ள மிக முக்கியமான தேவை ஆகும். ஒரே ஒரு கலவரம் ஒரு பிராந்தியத்தின் வளர்ச்சியையும் அமைதியையும் நிர்மூலமாக்கி, பல பத்தாண்டுகள் சமுதாயத்தைப் பின்னோக்கித் தள்ளும் வல்லமை வாய்ந்தது.

இந்தகைய வெறுப்பையும் வன்முறைகளையும் முன் கூட்டியே தடுக்க வேண்டும் என்பதற்காகக் குறிப்பான செயல்திட்டங்களை ஐக்கிய நாடுகள் அவை முன்வைத்துள்ளது. அவற்றின் விவரம்:

- ஐநா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் 16/18, 2011 (HRC Resolution 16/18 - Combating intolerance, negative stereotyping and stigmatization of, and discrimination, incitement to violence and violence against, persons based on religion or belief)
- ரபாட் செயல் திட்டம் 2012 (Rabat Plan of Action on the prohibition of advocacy of national, racial or religious hatred that constitutes incitement to discrimination, hostility or violence)
- அட்டூழியக் குற்றங்கள் உருவாகாமல் தடுப்பதற்கான செயல் திட்டம் (The Plan of Action for Religious Leaders and Actors to Prevent Incitement to Violence that Could Lead to Atrocity Crimes 2017)

மேற்கண்ட ஐநா தீர்மானங்களையும் பிரகடனங்களையும் இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் செயல்படுத்தி அமைதிக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்க வேண்டும் என்று பா.ம.க. வலியுறுத்தும்.

## 38 தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், சமூகநீதியின் மலர்ச்சிக்கும் வழிவகுக்க வாக்களிப்பீர் பா.ம.க. - பா.ஜ.க. கூட்டணிக்கு!

2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலைத் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பாரதிய ஜனதா கட்சித் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்து பாட்டாளி மக்கள் கட்சி எதிர்கொள்கிறது. தமிழ்நாட்டின் நலன், தமிழ்நாட்டின் வளர்ச்சி, சமூக நீதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மிக நீண்ட கலந்தாய்வுக்குப் பிறகு இந்த முடிவை பாமக நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் எடுத்திருக்கிறார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில், தேசிய அளவில், கடந்த 2014ஆம் ஆண்டு முதல் பாட்டாளி மக்கள் கட்சி நீடித்து வருகிறது. 2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலிலும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி இணைந்தது எந்த அளவுக்குச் சரியான முடிவு என்பதை இந்தத் தேர்தல் அறிக்கையில் முந்தைய பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கும் வாக்குறுதிகளைப் பார்த்துத் தெரிந்துகொள்ள முடிகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தேசிய அளவில் சமூகநீதியை மேம்படுத்தவும் தேவையான வாக்குறுதிகள் இந்தத் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. மத்தியில் ஆட்சி அமைக்கும் கட்சியுடன் இணைந்து செயல்படுவதன் மூலமாகவே இவற்றையெல்லாம் சாதிக்க முடியும் என்பதை உணர்ந்துதான் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணையும் முடிவை பாமக எடுத்தது.

தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற பா.ம.க. தீவிரமாகப் போராடும். 2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் 10 மக்களவைத் தொகுதிகளில் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடுகிறது. அத்தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மாம்பழம் சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெறச் செய்யப் பாட்டாளி மக்கள் கட்சி கோருகிறது.

அதேபோல், மற்ற தொகுதிகளில் போட்டியிடும் பாரதிய ஜனதா வேட்பாளர்களுக்கு தாமரைச் சின்னத்திலும், தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு சைக்கிள் சின்னத்திலும், அம்மா மக்கள் முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு குக்கர் சின்னத்திலும், அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழு வேட்பாளருக்கு தனி சின்னத்திலும், இந்திய ஜனநாயகக் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் வேட்பாளர்களுக்கு தாமரைச் சின்னத்திலும் வாக்களித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வாக்காளப் பெருமக்களைப் பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

### 2024 மக்களவைத் தேர்தலில் வாக்களிக்க வேண்டிய சின்னங்கள்


மாம்பழம்


தாமரை


சைக்கிள்


குக்கர்

# 39 தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு வழிகாட்ட பா.ம.க. வெளியிட்ட ஆவணங்கள்

1. 2002–2003ஆம் ஆண்டில் தொடங்கி 2024–25ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 22 ஆண்டுகள் நிழல் நிதி நிலை அறிக்கை (மொத்தம் 22 ஆவணங்கள்)
2. 2008–2009 ஆம் ஆண்டில் தொடங்கி 2024–25ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 17 ஆண்டுகள் வேளாண் நிழல் நிதி நிலை அறிக்கை (மொத்தம் 17 ஆவணங்கள்)
3. தமிழ்நாட்டின் நிதிநிலை குறித்த உண்மை அறிக்கை **(Factual Report)** (18.08.2001)
4. பன்னிரண்டாவது நிதிக்குழுவுக்குப் பல்வேறு ஆலோசனைகளைத் தெரிவிக்கும் வகையில் 22 பக்கங்கள் கொண்ட செயல்திட்டத்தைத் தயாரித்து வழங்கியது. இந்தச் செயல்திட்டத்தில் இடம் பெற்றிருந்த பல்வேறு அம்சங்களை நிதிக்குழு அதன் இறுதி அறிக்கையில் சேர்த்து வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.
5. மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் சேர்ப்பதற்கான பல்வேறு திட்டங்களைத் தனி அறிக்கையாகத் தயாரித்து 02.02.2007 அன்று மத்திய அரசிடம் வழங்கியது.
6. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி – ஒரு மாற்றுத் திட்டம் (08.09.2007)
7. தமிழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி – பயனுள்ள மாற்றுத் திட்டம் (25.09.2007)
8. தமிழகத்தில் இளைஞர்களின் மறுமலர்ச்சி – பயனுள்ள ஓர் அணுகுமுறை (08.10.2007)
9. 2020ஆம் ஆண்டில் தமிழகம் – ஒரு தொலைநோக்குத் திட்டம் (22.10.2007)
10. சென்னை நகருக்கான மாற்றுப் போக்குவரத்துத் திட்டம்
11. தமிழ்நாடு அரசுக்கான மாற்று மதுவிலக்குக் கொள்கை (26.08.2008)
12. அரசு ஊழியர்களுக்கான ஊதியக் குழு போன்று உழவர்களுக்கான ஊதியக்குழு அமைக்கக் கோரும் தமிழ்நாட்டின் உழவர்களுக்கான ஒரு கொள்கை அறிக்கை **(A Manifesto for Farmers in Tamilnadu)** (03.10.2009).
13. புதிய அரசியல்.... புதிய நம்பிக்கை
14. இன்றைய காலத்திற்கு ஏற்ற கல்விமுறை.
15. பா.ம.க. ஒரு பசுமைக் கட்சி.
16. நாம் விரும்பும் சென்னை (சென்னைக்கான புதிய நகர்ப்புறச் செயல்திட்டம்)

# 40 ஆட்சிக்கு வராமலேயே மக்கள் நலனுக்காகப் பாட்டாளி மக்கள் கட்சி ஆற்றிய பணிகள்

1. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் சோனியாகாந்தி தலைமையில் நடந்த கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நள்ளிரவு வரை மருத்துவர் அய்யா அவர்கள் போராடி மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தது.

2. தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள சமுதாயங்களைத் தனிப் பிரிவாக அறிவித்து அவர்களுக்கு 20% தனி இடஒதுக்கீட்டை மருத்துவர் அய்யா அவர்கள் பெற்றுத்தந்தது.

3. கிராமப்புற மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக இருந்த நுழைவுத் தேர்வு முறையைத் தொடர் போராட்டங்களை நடத்தியும், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தும் அகற்றக் காரணமாக இருந்தது.

4. சமச்சீர்க் கல்வி முறைக்கான இலக்கணங்களை வகுத்துத் தமிழ்நாட்டில் அந்தக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்படுவதற்குக் காரணமாக இருந்தது.

5. சமச்சீர்க் கல்வித் திட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை சென்று போராடித் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தது.

6. மது அரக்கனுக்கு எதிராக மருத்துவர் அய்யா அவர்கள் 38 ஆண்டுகளாகத் தொடர் போராட்டங்களை நடத்தி, மதுவுக்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

7. மதுக்கடைகளின் விற்பனை நேரத்தை 16 மணியிலிருந்து 10 மணி நேரமாகக் குறைக்க வைத்தது.

8. உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தேசிய, மாநில நெடுஞ்சாலை ஓரங்களில் இருந்த 3,925 மதுக்கடைகளை மூட வைத்தது.

9. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காகத் தொடர் போராட்டங்களை நடத்தி, அத்திட்டம் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்தது.

10. தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் சிப்காட் தொழிற்பேட்டை கொண்டுவந்தது.

11. சேலம் உருக்காலையை ரூ.1500 கோடி செலவில் உலகத்தரத்திற்கு உயர்த்தியதுடன், புதிய குளிரூட்டப்பட்ட உருக்காலையை அமைத்தது.

12. தமிழ்நாட்டிற்கு 2002– 2009 வரையிலான 7 ஆண்டுகளில் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தொடர்வண்டித் திட்டங்களைக் கொண்டு வந்தது.

13. மேற்கு மாவட்ட மக்களின் நீண்டகாலக் கனவை நிறைவேற்றும் வகையில் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ரயில்வே கோட்டம் அமைத்தது.

14. தமிழகத்தில் உள்ள அனைத்துப் பாதைகளையும் அகல ரயில் பாதைகளாக்கித், தமிழ்நாட்டில் மீட்டர் கேஜ் பாதைகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியது.

15. இலங்கைப் பிரச்சினைக்காக ஐ.நா. மனித உரிமைப் பேரவை வரை சென்று, இலங்கை இனப்படுகொலை குறித்து சர்வதேசப் போர்க் குற்ற விசாரணை நடத்த வகை செய்தது.

16. பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் ஆந்திர அரசின் முயற்சியை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தடுத்து நிறுத்தியது.

17. காவிரி, முல்லைப் பெரியாறு பிரச்சினைகளுக்காகத் தொடர் போராட்டங்கள் நடத்திவருவது.

18. தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 7 மாவட்ட விவசாயிகளைப் பாதிக்கும் இயற்கை எரிவாயுக் குழாய்ப் பாதை அமைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நிறுத்தியது.

19. வேளாண் விளைநிலங்களைச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்காகக் கையகப்படுத்தும் திட்டங்களைப் பல இடங்களில் போராட்டம் நடத்தி முறியடித்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தது.

20. காவிரிப் பாசன மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக (Cauvery Delta Protected Agricultural Zone) அறிவிக்கச் செய்தது.

21. கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் 45 கிராமங்களில் செயல்படுத்தப்பட இருந்த பெட்ரோ கெமிக்கல்ஸ் முதலீட்டு மண்டலம் திட்டத்தைப் போராடித் தடுத்து நிறுத்தியது.